தமிழீழ ஆவணக் காப்பகம்

# எரிமலை

ஆனி 1994



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





வெளியீட்டுப் பிரிவு,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.

**யுத்தத்தின் சத்தங்கள் கதவடியில் - நீங்கள்**
**உட்கார்ந்து இருக்கின்றீர் மதவடியில்**
**எச்சில் சுமப்பவன் மனிதனல்ல - வந்த**
**எதிரியை விடுப்பவன் தமிழனல்ல.**

---

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# எரிமலை

கலை பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

பதின்மூன்றாம் ஆண்டு
ஆனி 1994

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

எரிமலை
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
C/O T.C.C-France,
341, Rue des Pyrénées,
75020 Paris.
Tel: 43 58 11 42

## நீதியான போராட்டமும் அநீதியான அடக்குமுறையும்

அநீதியான போராட்டங்கள், நீதியான எதிர்ப்பினாலோ அல்லது அநீதியான ஆனால் பலம் பொருந்திய எதிர்ப்பினாலோ அழிந்துவிடுதல் சாத்தியம். ஆயினும், நீதியான போராட்டங்கள் எத்தகைய எதிர்ப்பினாலும் மேலும் மேலும் பலமடைகிறதே தவிர நலிவடைவதோ, நசிந்து போவதோ இல்லை. ஆன்மீகமும், ஆளுமையும் வரப்பெற்ற எங்கள் தலைவரினால் வழிநடத்தப்படும் எங்கள் விடுதலைப் போராட்டத்துக்கும் பின்னது பொருந்தும்.

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் மீளமுடியாதவாறு வீழ்ச்சியை நோக்கி வேகமாகச் சென்றுகொண்டிருக்கிறது. ஜே.ஆர். ஜெயவர்த்தனாவோ, காமினி திசநாயக்காவோ, றொனி. டீ. மெல்லோ எவருமே உள்ளூர அரித்துச் செல்லும் இந்த நோயைக் குணப்படுத்தமுடியாது. உள்முரண்பாடுகள், கோஷ்டி மோதல்கள், பதவி ஆசைகள், குழிபறிப்புகள், ஊழல் குற்றச்சாட்டுகள் என்பன ஒருவரோடொருவர் குடுமிச்சண்டை பிடிப்பதற்கும், வெளியில் தூக்கி வீசப்படுவதற்கும் வழிவகுக்குமே தவிர உள்வீட்டுப் பிரச்சினையைத் தீர்க்க உதவாது. இந்த இக்கட்டான நிலையில், தற்போதைய அந்தஸ்தைப் பேணியவாறு (Status quo) அரசாங்கம் தாக்குபிடிப்பதற்குச் செய்யக்கூடிய ஒரேயொரு வழிமுறை என்னவெனில் பாரிய யுத்த நடவடிக்கை ஒன்றைத் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்துவிட்டு, வெற்றிவீரனாக சிங்கள மக்கள் முன் காட்சிதர முயல்வதுதான். இது எவ்வளவு தூரம் சாத்தியம் என்பதே கேள்வி. தென்தமிழீழப் பகுதிகளுக்கு ஏராளமான புலிப்படைவீரர்கள் அனுப்பப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்; பாரிய எதிர்த்தாக்குதல் ஒன்றைத் தென்தமிழீழத்திலும் செய்வதற்கு ஆயத்தங்களும், பயிற்சியும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்ற செய்திகள் வந்துகொண்டிருக்கும் போது, கிழக்கு மாகாணமே பறிபோய் விடுமோ என்று கதிகலங்கி நடுங்குகின்றது அரசாங்கம். மேலும், வடக்கிலோ கிழக்கிலோ பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்வதற்குத் தேவையான இராணுவத் தலைமையின் ஆளுமை, அரசியல் ஸ்திரம், இராணுவத்தினரின் மனவுறுதி, மக்கள் ஆதரவு என்பன் எவ்வளவு தூரம் உண்டு என்பதே கேள்வி. இவ்வளவும் தமிழீழத்தில் தேவைக்கு மிகையாகவே உண்டு என்பது நன்கு உணரப்பட்டுள்ளது. தேசியப்பட்டியலில் தெரிவான நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பதவி விலகச் செய்யவே கட்சித் தலைவராலும், ஜனாதிபதியாலும் முடியாவிட்டால், சிறுபான்மைச் சமூக உறுப்பினர் ஒருவருக்கு ஏராளமான கையூட்டுக் கொடுத்தே இதைச் சாதிக்கவேண்டியதாக இருந்ததென்றால், உயிரிழப்புக்களுடன் கூடிய பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை முடுக்கிவிடும்படி இராணுவத்தைத் தூண்டக்கூடிய ஆளுமை ஜனாதிபதியிடம் இருக்கின்றதா என்பது சந்தேகமே. இந்நிலையில் ஜனாதிபதி, பாராளுமன்றத் தேர்தல்களை வைத்து எதிர்க்கட்சியிடம் தோற்பதா? அப்படித் தோல்வியுறும்போது ஆட்சியில் இருந்தபோது, புரிந்த அட்டூழியங்களுக்கு, பல்லாயிரக்கணக்கானோரின் படுகொலைகளுக்குச் சிங்கள இளைஞர்களாலேயே பழிவாங்கப்பட நேரிடும் என்ற பயம் தோன்றுவது வாஸ்தவம். இந்தப் பயத்தினால் தேசிய அரசாங்கம் அமைக்கும் யோசனையை அரசாங்கம் தூக்கிப் பிடிக்கலாம். இதனை எதிர்க்கட்சிகள் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. அரசியல் சட்டத்தைத் திருத்தி, தமது ஆட்சியை நீடிக்கச் செய்யவும் தற்போது வாய்ப்பு இல்லை. இறுதியாக உள்ளது இராணுவச் சர்வாதிகார ஆட்சியை சதி நடவடிக்கை ஒன்றின் மூலம் ஏற்படுத்துவதே. இதன் விளைவுகள் பாரதூரமாக இருக்கும். இரு மக்கள் மீதும் கொடூர அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்படும். இரத்த ஆறு ஓடும்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

இத்தகைய போக்கை நோக்கியே அரசாங்கம் சென்று கொண்டிருக்கிறது. இச்சந்தர்ப்பத்தில் இலங்கைத் தீவைப் பொறுத்து மேற்குலகின் ஆய்வும், தீர்மானமும் முக்கியமாகின்றது. நிதர்சன உண்மைகளை ஆராய்ந்து எடுக்கிற சரியான தீர்மானங்களே ஜனநாயகத்துக்கும், சமாதானத்துக்கும், மக்களின் கூட்டு உரிமைகளுக்கும் பொருத்தமாக இருக்கும். ஏப்ரல் 8ம் திகதி வெளியான ஐரோப்பிய பாராளுமன்ற தீர்மான முன்னறிவிப்பும், அது தொடர்பான அறிக்கைகளும் உண்மையின் தளத்தில் உருவானவை அல்ல. இவற்றிற்கு ஆதாரமாக எடுக்கப்பட்டுள்ள தகவல்களின் ஊற்றுக்கண்ணே பொய்யானது. யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்கள் மனித உரிமைக்குழு என்ற ஒன்றுயாழ்ப்பாணத்தில் இயங்குவதும் இல்லை; எவ்வித அறிக்கைகளை வெளியிடுவதும் இல்லை என்று யாழ். பல்கலைக்கழக துணைவேந்தராலும், யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினாலும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்ட போதிலும், அதன் பெயரில், கொழும்பில் இருந்தவாறு ஒரிருவர் வெளியிடும் அறிக்கைகளைத் தமது ஆய்வுக்கு ஆதாரமாக எடுத்தே ஐரோப்பிய பாராளுமன்ற வெளிவிவகாரப் பாதுகாப்புக் குழுவும், அதன் ஆய்வாளர் (Jas Gawronski) ஜாஸ் கவுரோன்ஸ்கியும் செயற்பட்டுள்ளனர். சிறிலங்கா இன்னமும், மனித உரிமை மீறல்களில் உலகில் முன்னணியில் நிற்கிறது. சூரியகந்த மலையில் நூற்றுக்கணக்கான மனித எலும்புக்கூடுகளின் கண்டுபிடிப்பு, ஆட்கள் காணாமல் போவது தொடருதல் அரசியலும், குற்றவியலும் கூட்டுச்சேர்ந்துள்ளமை ஆகியவை நிகழுகின்ற ஒரு நாட்டுக்கு, மனித உரிமை பேணப்படுவதைக் கண்காணிப்பதற்காக ஆயுத விநியோகம் நடைபெறவேண்டுமென்ற அபத்தமான பரிந்துரைகளும் அவ்வறிக்கைகளில் காணப்படுகின்றன. தமிழீழப் பகுதிகளில் நடைபெற்றுவரும், சமூக மாற்றங்கள், சட்ட ஆட்சி நடைமுறைப்படுத்தப்பட்டு வருவது, சகஜ நிலைமை திரும்புவது, சமாதான முன்னெடுப்பக்கள், புனர்வாழ்வு நடவடிக்கைகள், பொருளாதார வளர்ச்சியில் ஜனநாயக விழுமியங்கள் பேணப்படுவது அனைத்தும் இவ் ஆய்வாளர்களின் கண்களில் பட்டதாகத் தெரியவில்லை. காரணம், இவர்கள் விடுதலை செய்யப்பட்ட தமிழீழப் பகுதிகளுக்கு அழைக்கப்பட்டிருந்தும், அங்கு செல்லாததே. மேற்குலக நாடுகளில் தமிழர்களுக்கிடையே நடைபெறும் சகல குற்றவியல் செயல்களையும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமில் போட்டும், அவர்களின் சட்டரீதியான செயற்பாடுகளைத் தடைசெய்யுமாறும் நடத்தும் திட்டமிட்ட பிரச்சாரத்திற்கும் பொய்யும், புனைவுமே அடிப்படை. ஜனநாயகத்துக்கும், விடுதலைக்கும், சமாதானத்துக்குமாக போராடுகின்ற விடுதலைப் புலிகளைப் புறந்தள்ளி, இராணுவ சர்வாதிகாரத்தை நோக்கி வீழ்ச்சியுறும் இனவாத சிறிலங்கா அரசாங்கத்துக்கு முண்டுகொடுக்க ஜனநாயகவாதிகள் எவரும் முன்வரார். தவறான கருதுகோள்களின் அடிப்படையில் வரையப்பட்ட அறிக்கைகள், தீர்மான முன்னறிவிப்பின் வழி, ஐரோப்பிய பாராளுமன்றம் மேலும் முன்னெடுப்புக்களை எடுக்காது என்றே நம்புவோம். தமிழீழப் பகுதிகளுக்கு ஐரோப்பிய பாராளுமன்றக் குழு அனுப்பப்பட்டு, மீளாய்வு ஒன்று நடைபெறும் வரை இம்முன்னெடுப்பு, இடைநிறுத்திவைக்கப்படவேண்டும் என்பதே தமிழ் மக்களது விருப்பம். ஐரோப்பிய பாராளுமன்றத்தின் இதுவரையான செயற்பாடு, சமாதான முயற்சிகளுடனான ஒரு அழுத்தத்திற்காக எம்மீது பிரயோகிக்கப்பட்டிருக்குமானால், அது தேவையில்லாதவாறு, எமது இயக்கம், சமாதானத்திற்கும், பேச்சுவார்த்தை மூலமான தீர்விற்கும் எப்போதுமே தயாராகவுள்ளது.

# தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

யுத்தத்தினால் பாரிய அழிவுகளைச் சந்தித்து வரும் தமிழீழ தேசத்தின் பொருண்மியத்தை மேம்பாடு அடைய உருவாக்கப்பட்டதே தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்.

92ம் ஆண்டுக்குப் பின் இதன் செயற்பாடுகள் புத்துயிர்ப்புடன் வேகம் கொண்டுள்ளது.

தமிழீழ மேம்பாட்டு நிறுவனத்தினால் 375 திட்டங்கள் இனங்காணப்பட்டு, செயல்வடிவம் பெற்றுவருகின்றன.

1 தொடக்கம் 37 வரையான திட்டங்கள் நிர்வாகம் தொடர்பானவையாகவும், ஏனைய 38 தொடக்கம் 375 வரையான திட்டங்கள் அபிவிருத்தி, சமூகசேவை, வருமானம் ஈட்டும் திட்டங்கள் என வகுக்கப்பட்டுள்ளன.

விவசாயம், விலங்குவேளாண்மை, கடல்வள அபிவிருத்தி, கைத்தொழில், உணவு பதனிடல், உள்கட்டுமானம், சக்தி, கிராமிய அபிவிருத்தி, வர்த்தகம், பனை தென்னைவள ஆராய்ச்சி என்ற வரையறைக்குள் வகுக்கப்பட்டுள்ள திட்டங்கள் ஏழு மாவட்டங்களிலும், ஆறு கோட்டங்களிலும் இணைப்பாளர்களினூடாக நடைமுறைப்படுத்தப் பட்டு வருகின்றது.

பொருளாதாரத்தடை எதிர்ப்பு, மற்றும் தென் தமிழீழ மக்களின் வாழ்க்கை மேம்பாடு என்பவற்றைத் தாம் முக்கியமாக கருத்திற்கொள் கின்றோம் என அதன் பணிப்பாளர் தெரிவிக் கின்றார்.

சிறிலங்கா அரசு முற்றுமுழுதாக பொருளா தாரத் தடையை ஏற்படுத்தினாலும் பொருளாதார மேம்பாட்டில் தாம் வெற்றிபெறுவோம் எனவும் அவர் உறுதி தெரிவித்தார்.

திட்டத்திற்கு மூலதனம் வழங்குவோருக்கு மூலதனத்தின் 10 தொடக்கம் 12 வரையிலான வட்டி வழங்கப்படும் என தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அறிவித்துள்ளன.

அனைத்துத் திட்டங்களும் வெளிநாடு வாழ் ஈழத்தமிழ் மக்களின் பார்வைக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளது.

**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் வளர்ச்சித் திட்டங்களுக்கு வெளிநாடு வாழ் தமிழ் மக்களின் மூலதனம் கோரப்படுகிறது.**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# இன்னும் அதே!

இயல்வாணன்

புகையிரதப் பாதையைக் குறுக்காக வெட்டும் மதகில் தம்பரப்பா அமர்ந்திருந்தார். ஒரு காலை மதகின் கீழ் தொங்க விட்டபடி, மறுகாலை மடித்தவாறு மதகில் குனிந்து நிமிர்ந்து கத்தி தீட்டிக்கொண்டிருந்தார். பக்கத்தில் சரை ஒன்றில் கொஞ்சம் செங் கட்டித் தூள் இருந்தது.

என்னைக் கண்ட தம்பரப்பா திரும்பிப் பார்த்ததோடு தனது வேலையில் தொடர்ந்து ஈடுபட்டார்.

"அப்பு" - அதே நிலையில் திரும்பிப் பார்த்தார்.

"காலிலை மம்பட்டி கொத்தி விட்டுது. எனக்கு கொஞ்சம் சேர்வை தருவீங்களே..."

"எங்கை.. பெரிய காயமே"

"சேச்சை... இந்தா, அடிக் காலிலை நீளத்துக்கு இழுத்து விட்டிட்டுது."

"ம்... சேர்வை இறுகிப் போச்சுது. காச்சித்தான் போட வேணும். இரன், கொட்டிலுக்குப் போவம்... காயம் கொஞ்சம் பலப்புக் கண்டியோ, மரமஞ்சளும் அவிச்சுக் குடி..."

அவர் வேலையில் ஆழ்ந்தார். நிமிர்ந்தும் குனிந்தும், முன்னும் பின்னுமாய் உடம்பை ஆட்டியும் அவர் கத்தி தீட்டுவதை நான் பார்த்துக் கொண்டிருந்தேன்.

ஹெலிகொப்ரர் ஒன்று உறுமிய படி பறந்தது.

"எங்கை... எதைக் கொத்தப் போறானோ."

"இந்த எண்பது வரியத்திலை எத்தினையை கண்டிட்டம்..ம்... வெள்ளைக்காரன், யப்பான்காரன், இந்தியன், சிங்களவன்."

தனது தளர் மேனியைத் தடவிக் கொண்டார் அவர்.

"உந்தக் குண்டு வீச்சுக்களை யெல்லாம் அந்தக் காலத்திலை கண்டிருக் மாட்டியள்.... என்ன?"

"ஏனில்லையடா மோனே... நாப்பத்திரண்டாம் ஆண்டே இது கள் இலங்கையிலை நடந்திட்டுது."

கத்தி தீட்டிய கைகள்



**"உந்தக் குண்டு வீச்சுக்களை யெல்லாம் அந்தக் காலத்திலை கண்டிருக்கமாட்டியள்... என்ன ?"**

**"ஏனில்லையடா மோனே... நாப்பத்தி ரண்டாம் ஆண்டே இதுகள் இலங்கையிலை நடந்திட்டுது."**

விடுபட்டன. வானையளந்தார். பின் என்னைப் பார்த்தார்.

"அப்ப எனக்கு முப்பது வயசிருக்கும்... பங்குனி மாதம், எனக்கப்ப மூண்டாவது பிள்ளை பிறந்திருக்கு. வீட்டிலை மனிசிக்குப் பத்தியம் அரைச்சுக் குடுக்கிறதுக் காண்டி என்ரை ஆச்சி வந்திருந்தவ. நாங்கள் றெயில் பாதைக்கு கிழக்காலை, அந்தா தெரியுதே.. அந்தத் தோட்டந்தான் செய்தனாங் கள். பட்டை இறைப்பு, விடியக் காலமை இரண்டு மணிக்கே போயிடுவம். துலாமிதிக்கத் தொடங்கினா, தண்ணி பாஞ்சு முடிய காலமை பத்துமணிக்கு மேலை போயிடும்."

"இப்படித்தான் ஒரு காலமை. சூரியன் நல்லா மேலை வந்தாப் பிறகு கிராம சபையிலிருந்து அழைப்பு வந்தது. நான் இறைப்பை அரைகுறையிலை விட்டிட்டு, துலா விலையிருந்து இறங்கி, பட்டையிலை அள்ளின தண்ணியிலை முகத்தைக் கழுவிப்போட்டு வீட்டை போனன். ஆச்சி பழஞ்சோத்தை எடுத்துத் தந்துகொண்டு, கறிக்கடையிலை பத்தியத்துக்கு குஞ்சு மீன் வாங்கி வா எண்டா. நான் பேசிப்போட்டு சாப்பிடாமலே வேட்டியைக் கட்டிக் கொண்டு சால்வையையும் தூக்கித் தோளிலை போட்டப்படி கிராம சபைக்குப் போனன். அது எங்கடை வீட்டிலை இருந்து அரை மைல் தூரத்திலை மருதனாமடத்திலை இருந்தது."

"உள்ளுக்கை கிராமசபைத் தலைவரும், கிராமப் பிரதிநிதியளும் விதானைமாரும் வேறு சிலரும் இருந்தினை. எங்கடை கிராமப் பிரதிநிதியாய் நவரத்தினம் இருந் தார். என்னைக் கண்டோடனை தனக்கருகிலை வந்திருக்கச் சொன னார். போயிருந்தன். கொஞ்ச

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

நேரத்திலை அரசாங்கக் கந்தோரி லையிருந்து மூண்டு பேர் வந்தினை."

"வந்தவையிலை கண்ணாடி யோடை வந்தவர் இரண்டாம் உலக மகாயுத்தம் தொடங்கிவிட்டதெண்டும், அது இப்ப ஆசியாவின்ரை கிழக்குப் பக்கத்தாலை எங்களை நோக்கி வந்து கொண்டிருக்கெண்டும் சொன்னார். யப்பான் படையள் பினாங் துறைமுகத்தைக் குண்டுவீசித் தகர்த்துப் போட்டுது களெண்டும் அந்தத் தாக்கம் இலங்கையையும் பாதிக்கும் எண்ட தாலை ஆள்பதி சேர் அன்ட்றூ கல்டிகொட் உரியநடவடிக்கையை எடுத்துள்ளாரெண்டும் அவர் சொன்னார்.

அரசாங்க ஏஜெண்டு மூலமாய் ஆள்பதியாலை எல்லா இலங்கைப் பிரசையளுக்கும் அறிவிக்கச் சொல்லி உத்தரவிடப் படிருக்கிற தெண்டும் நாடு முழுக்கலும் பின்னேரம் ஆறு மணியிலையிருந்து காலமை ஆறுமணி வரைக்கும் ஊரடங்குச்சட்டம் அமுல் செய்யப் பட்டிருக்குதெண்டும், இந்த நேரத் திலை பொதுமக்கள் வீடுகளிலே இருக்கிறது நல்லதெண்டும், இதுகளை விதானைமாரும் கிராமச் சங்கப் பிரதிநிதிகளும் சனங்களுக்கு அறிவிக்க வேண்டுமெண்டும் அவர் சொன்னார்."

"மற்றவர் எழும்பி, யப்பான் படையளின்ரை தாக்குதலிலை யிருந்து இலங்கையைப் பாதுகாக் கிறதுக்காண்டி பிரிட்டிஷ் பேரர சிலை இருந்து சேர். யெவ்றிலேற்றன் பிரபு கொழும்புக்கு வந்துள்ளார். அவர்தான் சகல அலுவல்களுக்கும் பொறுப்பாய் பிரிட்டிஷ் அரசாங் கத்தாலை அனுப்பப்பட்டிருக்கிறார். ஆகாயப்படை, தரைப்படை, கப்பல் படை மூண்டுக்கும் அவர்தான் தளபதி. மூண்டுபடையும் அவருக்கு கீழைதான் இயங்கும். ஆள்பதியும், மந்திரிமாரும் அவற்றை வழிப்படுத் தலுக்குக் கீழைதான் யுத்தம் முடியிற வரைக்கும் கடமை புரிவினம் எண்டு சொன்னார்."

"அவர் மக்களை பாதுகாப்பாய் இருக்கச் சொன்னதாய் சொல்லிப் போட்டு பதுங்கு குழியள் அமைக் கிறது, விமானத் தாக்குதலிலை இருந்து மக்களைப் பாதுகாக்கிறது பற்றிச் சொல்லி பயிற்சியளும் வழங்கப்படுமெண்டார்.

அதோடை கூட்டம் முடிஞ்சுது.

கூட்டம் முடிஞ்சு வீட்டை வந்தா ஆச்சி பேசுறா, புள்ளையப் பெத்தா மட்டும் போதுமோ.... அதுகள் காத்தையோ குடிக்கிறது எண்டு அறம்புறமான பேச்சு. அதோடை ஓடிப்போய் மீன் வாங்கியந்தனான்.... அதை விடு..."

"அதுக்குப் பிறகு ஒரு பத்துப் பதினைஞ்சு நாள் கழிய, யப்பான் காரன் நாசகாரிப் பிளேனாலை கொழும்பிலை குண்டு போட்டிட் டான் எண்டு செய்தி வந்தது.

**"நாங்கள் ஊரிலை பதுங்குகுழியள் வெட்டுறது... மணியடிக்கிறது... அபாய ஒலி எழுப்பிறது போன்ற வேலையைச் செய்ய வேணுமெண்டு சொல்லிச்சினை. நாங்கள் எங்களுக்கும் கீழை தொண்டர்கள் சில பேரையும் சேத்திருந்தம்."**



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


கொழும்புத் துறைமுகத்தடியிலை குண்டு விழுந்து இரண்டு சரக்குக் கப்பல்களும் கட்டடங்களும் நாசமானதாம், உடனை எங்களைக் கூப்பிட்டினை.”

“கிராம சபையிலை, அரசாங்கப் பிரதிநிதி, கந்தோர் ஆக்கள் வந்திருந்தினை. யுத்தம் வந்தால்- யுத்தத்திலை மக்களைப் பாதுகாக்கிறதுக்கொண்டு ஏ.ஆர்.பி. எண்ட குழுவை அமைச்சினை. ஒவ்வொரு கிராமப் பிரதிநிதியளுக்கும் கீழை ஒவ்வொரு குழு. எங்கடை கிராமத்திலை நானும் இன்னும் நாலு பேரும்.”

“நாங்கள் ஊரிலை பதுங்கு குழியள் வெட்டுறது... மணியடிக்கிறது... அபாய ஒலி எழுப்பிறது போன்ற வேலையைச் செய்ய வேணுமெண்டு சொல்லிச்சினை. நாங்கள் எங்களுக்கும் கீழை



தொண்டர்கள் சில பேரையும் சேத்திருந்தம்.”

“ஏதாவது அசம்பாவிதம் எண்டால் கிராமக் கந்தோரிலை இருக்கிற பெரிய குழல் அபாய ஒலியை எழுப்பும். பா பா எண்டு அது பிலத்து ஒலிக்கத் தொடங்க, ஒவ்வொரு கிராமத்திலையும் உயரமான மரங்களிலை கட்டியிருக்கிற மணியள் அடிக்கும். அப்ப சின்னக் குழலொண்டும் தந்திருந்தவை, அதையும் ஊதிக் கொண்டு போவேணும். இந்தச் சத்தங்களைக் கேட்டவுடனை சனங்கள் எல்லாரும் பதுங்குகுழிக்கை இருக்க வேணும். அடுத்த சத்தம் வரும் வரைக்கும் எழும்பக் கூடாது.”

“என்னட்டை ஒரு குழலைத் தந்திருந்தினை. மண்ணெண்ணெய் வண்டில்காரன் கொண்டு திரியுறது போலை. வாய் அகண்டதாய் கூம்புபோலை இருக்கும். வாயிலை வைக்கிற பக்கம் ஒடுங்கிச் சின்னதாய் இருக்கும். அதை ஊதிக் கொண்டு- வீட்டிலையிருந்து”

“கிழக்காலையும் மேற்காலையும் வடக்காலையுமாய் ஒரு மைல் தூரம் போகவேணும். இந்தச் சத்தங்களைக் கேட்டிட்டு சனங்கள் பதுங்குகுழியளுக்கை பதுங்குவினை. ஊதி முடிய கிராமக்கந்தோருக்கு போகவேணும். அவை பிறகு எப்ப ஊதவேணுமெண்டு சொல்லுவினை. அதுக்குப் பிறகு திரும்பவும் ஊத வேணும். அப்பிடி ஊதினாப் பிறகு தான் சனங்கள் பதுங்குகுழியளை விட்டு எழும்பும். இப்பிடியெல்லாம் ஏற்பாடு நடக்கேக்கை யப்பான் நாசகாரி திருகோணமலையிலை குண்டு போட்டிட்டுது. வெள்ளைக்காரன்ரை கேமிஸ், வம்பயர் எண்ட ரண்டு யுத்தக் கப்பலுவள் கடலுக்கை மூழ்கிச்சு. சீனன்வாடியிலை இருந்த எண்ணைக்குதமும் தீப்பிடிச்சு எரிஞ்சிச்சுது.”

**“யப்பான் நாசகாரி திருகோணமலையிலை குண்டு போட்டிட்டுது. வெள்ளைக்காரன்ரை கேமிஸ், வம்பயர் எண்ட ரண்டு யுத்தக் கப்பலுவள் கடலுக்கை மூழ்கிச்சு. சீனன்வாடியிலை இருந்த எண்ணைக்குதமும் தீப்பிடிச்சு எரிஞ்சிச்சுது.”**

“இதோடை எல்லா இடத்திலையும் பதுங்குகுழி வெட்டவேணுமெண்ட உத்தரவு வந்தது. நாங்களும் தொண்டர்களுமாய்ச் சேர்ந்து ஊரிலையும், கறிக்கடையிலையும், பள்ளிக்கூடங்களிலையும் பதுங்கு குழியளை வெட்டினம். அது மேலை, இரண்டு பக்கமும் வாசலுள்ளதாய் ‘பானா’ வடிவிலை இருக்கும்.”

“எங்கடை கோவில் மணியையும் கழட்டி வந்து, ஊருக்கு நடுவிலை இருக்கிற உயரமான வேப்பமரத்திலை கட்டினம். அந்த மணிக்கு ஒருத்தர் பொறுப்பு.”

“ஊரிலை அப்ப ஒரு பறட்டை இலுப்பை மரம் இருந்தது. அதுக்குப் பக்கத்திலை விளையாட்டு மைதானம். நாங்கள்தாச்சி மறிக்கிறதும் வெளவால் கொடி கட்டுறதும் அதிலைதான். அந்த மரத்துக்குக் கீழை வைச்சு எங்களுக்குப் பயிற்சி தரப்பட்டுது. நாங்கள் ஒரு பத்துப் பேர். அரசாங்கப் பிரதிநிதி கந்தோரிலையிருந்து வந்த ஒருத்தர் தான் பயிற்சி தந்தவர். குண்டு வீச்சாலை வீடுகள் இடிஞ்சா அதுக்குள்ளை இருந்து ஆக்களை வெளியாலை எடுக்கிறது, காயங்களுக்குக் கட்டுப்போட்டு ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோறது, பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்குப் பயிற்சி கொடுக்கிறது- இதுகளைப் பற்றி அவர் பயிற்சி தந்தார்.”

“இப்பவும் சிரிப்பாயிருக்கு.. ஹ ஹ ஹ ஹ ஹா.... பயிற்சி முடிஞ்சாப் பிறகு ஒவ்வொருத்தரையும் பாத்து நீ என்ன செய்யப்ப போறாயெண்டு அவர் கேட்டார். எல்லோரும் ஒவ்வொண்டைச் சொல்லிச்சினை. உன்ரை கொப்புவின்ரை தேப்பன்ரை தம்பியார் முருகேசு... அவர் சொன்னார் எரிஞ்ச வீட்டிலை முறிஞ்சதைப் பொறுக்கிறனெண்டு. வந்தவர் விழுந்து விழுந்து சிரிச்சார்.”

“அதுக்குப் பிறகு பள்ளிக்கூடங்களுக்குப் போய், குண்டு வீச்சிலை இருந்து எப்படிப் பாதுகாக்கிறதெண்டு பயிற்சி குடுத்தம். பிள்ளைகளுக்கு பஞ்சும் தடித்துண்டும் குடுத்தனாங்கள். பிளேன் சத்தம் கேட்டால் காதிலை பஞ்சை அடைத்துக்கொண்டு, வாயிலை தடித்துண்டை வைச்சுக் கடிச்சுக் கொண்டு நிலத்திலை குப்புற விழுந்து படுக்க வேண்டும்; அல்லாட்டி பதுங்குகுழியுக்கை போயிருக்க வேணுமெண்டு சொல்லிப் பயிற்சியும் குடுத்தம். அதோடை பள்ளிக்கூடங்களிலையும் மணியள் கட்டினம்.”

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

"இப்பிடி நாங்கள் றெடியாய் இருக்கேக்கை காங்கேசன்துறைக்கும் குண்டு போடப் போறானெண்ட கதை அடிபட்டுது. உந்தா, உந்தப் பவஸ்ரேசன் அப்ப இருக்கேல்லை. முந்தி உது சுடலை. பிறகு சுடலை இருந்த இடமெல்லாத்தையும் திருத்திப் போட்டு பிரிட்டிஷ் ஆமியள் வந்திருந்தினை. காங்கேசன் துறைக்கும் அடிவிழலாம் எண்ட தாலை பவஸ்ரேசன் காம்பிலை ஆமியள் குவிக்கப்பட்டுது. கொஞ்ச நாளிலை நூற்றுக்கணக்கா ஆகிவிட்டுது."

**"என்ரை விட்டை நான் தான் ஆளவேணும். அதுவரையிலை இந்தப் பிரச்சினை முடியாது மோனை"**



"பூனைக் கண்ணோடை தொப்பியும் போட்டுக்கொண்டு வெள்ளைக்காரக் கொமாண்டர் நிற்பான். அவனுக்குக் கீழை வேறையும் வெள்ளைக்கார ஆமியள் இருந்தினை. அதோடை நீக்ரோக் காப்பிலியளும், பஞ்சாபிகளும், கூர்க்கா, நேபாளியளும் இருந்தினை. இடைக்கிடை தோட்டப்பக்கம் வருவாங்கள். நாங்கள் பட்டயிலை றைக்கிறதைப் பாப்பாங்கள். பக்கத்துத் தோட்டத்திலை சூத்திர றைப்பு. அதிலை போய்க் குளிப் பாங்கள். சிலநேரம் இளனி கேட்டு வாங்கிக் குடிப்பான்கள். ஆனா அவங்கடை பேச்சு எங்களுக்கும், எங்கடை பேச்சு அவன்களுக்கும் விளங்காது. எங்களுக்கு சவுக்காரம், சிக்கிரெட் தருவான்கள். வேண்டா மெண்டால் சிரித்துவிட்டுப் போவான்கள்."

"ஒரு நாள் பின்னேரம் நான் மனிசியையும் பிள்ளைகளையும் கோயிலுக்கு கூட்டிக்கொண்டு போக வெளிக்கிட்டுக் கொண்டிருந் தன். திடீரெண்டு மணிச்சத்தம் கேட்டுது. அது கேட்டதுதான் தாமதம் நான் குழலைத் தூக்கி விட்டன். வீட்டுக்காரரை கொட்டி லுக்குப் பக்கத்திலை வெட்டியிருந்த பதுங்குகுழியுக்கை போயிருக்கச் சொல்லிப் போட்டு, சைக்கிளிலை ஏறி ஊதிக்கொண்டு போனேன்."

"குழல் சத்தத்தைக் கேட்டு ஒவ்வொரு குறிச்சியிலையும் மணி யள் அடிக்கப்பட்டுது. சனமெல்லாம் விழுந்து கட்டிப் பதுங்குகுழிய ளுக்கை பதுங்கிச்சு. கொஞ்ச நேரம் போக, எனக்குப் பின்னாலை தம்பர்... தம்பர் எண்ட குரல் கேக்குது. திரும்பிப் பார்த்தன். ஓராள் தலை தெறிக்க ஓடி வருகுது. சைக்கிளை நிப்பாட்டிப் போட்டுப் பார்த்தா, சின்னப்பு ஓடி வாறான். அவன்தான் மணிக்குப் பொறுப்பு."

"வந்தவன் 'தம்பரண்ணை நான் அடிக்கேல்லை. உந்த விசர்ச் செல்லத்துரையன் அடிச்சவன். இப்ப என்ன செய்யிறது?' எண் டான். சரி! பிழைச்சுப் போட்டுது. நீ போ எண்டு போட்டு, அவடத்திலை நிண்டு ஒரு சுருட்டை மூட்டினன். அதுக்குப் பிறகு வந்த வழியாலை திரும்ப ஊதிக்கொண்டு போனன். ரண்டாம் ஊதலுக்குப் பிறகுதான் சனங்கள் வெளிய வந்ததுகள். அடுத்தடுத்த நாள்தான் சனத்துக்கு உண்மை தெரிஞ்சுது."

தம்பரப்பா வானைப் பார்த் தார். இயக்கமற்று- விமானக்குண்டுக ளால் சிதைந்திருந்த மின் உற்பத்தி நிலையத்தைப் பார்த்தார். ஒரு பெருமூச்சுடன் என்னைப் பார்த் தார். பின்னர், வேகமாக.. இன்னும் வேகமாகக் கத்தியைத் தீட்டினார். தீட்டியதை எடுத்து, மறுகையினால் துடைத்து விட்டுப் பார்த்தார். வெள்ளியாய் அது ஒளிர்ந்தது.

எழுந்தார். புகையிரதப் பாதைக் குக் குறுக்காக இறங்கிய மண்பாதை யால் நடந்தார். அவரின் பின் நான். குண்டொன்றின் ஒலி அதிர்வுடன் எழுந்தது.

"என்ர வாழ் நாளிலை இப்பிடி எத்தினையைக் கண்டிட்டன். அண்டைய பதுங்குகுழி வாழ்க்கை இண்டைக்கும் தொடருது. வெள்ளையனுக்கு கீழை இருந்ததை விட எவ்வளவு கஸ்டத்தை அனுப விச்சிட்டம்."

குடிலுக்குள் நுழைந்தவர் சேர்வை முட்டியை எடுத்து வந்து பார்த்தார். அது இறுகிக்கிடந்தது.

"என்ரை வீட்டை நான்தான் ஆளவேணும். அதுவரையிலை இந்தப் பிரச்சினை முடியாது மோனை" அவர் உள்ளே போனார்.

தம்பரப்பாவின் கிதையை நான் உணர்ந்துகொண்டேன். ஹெலி கொப்ரர் பலாலிப் பக்கமாகத் திரும்பிக்கொண்டிருந்தது.

நன்றி: வெளிச்சம்

## இது புலிகளின் பூமி

இது எம்மண்ணின் எல்லை.
இனி உங்கள் பாதம் படுவது
தமிழீழத்தின் புனித மண்ணில்.
இது புலிகளின் பூமி;
நாங்கள் முத்தமிடும் தாயகம்.
கால்களைக் கழுவிய பின்னர் மிதியுங்கள்
எதிரிகள் எவராக இருந்தாலும்
எச்சரிக்கின்றோம்.
உங்களுக்கான புதைகுழிகள்
இங்கே வெட்டப்பட்டுள்ளன.
நண்பர்களை வரவேற்கின்றோம்.
எதிரிகளை வெறுக்கின்றோம்.

நன்றி: வெளிச்சம் (பங்குனி சித்திரை 1992)

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# துளி கண்ணீர் சிந்து!

இன்றைய இளைஞனே!
இருபதாம் நூற்றாண்டின் அற்புத சாலைகளில் தன் பாதங்களைத்
தொலைத்துக் கொண்டிருக்கும் பாதசாரியே!
உன்னோடு கொஞ்சம் பேசவேண்டும்!
சின்னச் சின்னச் சூரியச் செய்திகளைப் பிடித்து வந்துள்ளேன்.
ஒரு நண்பனாய் பகிர்ந்து கொள்ள!
இளைய தோழனே!
மனிதன் தனித்து வாழும் மிருகமல்ல!
அவன் தன்னைப் பிணைத்து வாழவேண்டியவன்!
சமுதாய நெருப்பில் தானும் ஒரு கொள்ளியாய் எரிய வேண்டியவன்!
மனிதன் தன்னைத் தானே ஓர் உலகமாக்கி வாழ முற்பட்டுவிட்டான்.
இது மூடநம்பிக்கை என்பதைத் தவிர வேறென்ன சொல்வது!
மனிதனுக்கு சர்வதேச உணர்வு வேண்டும் என்ற அடித்தளத்தில் ஊர்ந்து கொண்டிருக்கும் இளைஞனே!
நீ உனக்குள்ளேயே உன்னை கூடு கட்டிக்கொண்டிருக்கிறாய்.
உனக்கு வெளியே நடப்பதன் மீது நாட்டமில்லை!
உனக்கு வெளியே நிகழும் எந்தவொரு மாற்றத்தையும் நீ அறியவில்லை!
இளைஞனே! நீ உன்னையே சிறைப்படுத்தி வாழ்கிறாய்!
இளைஞனே! நீ உன்னையே அவநம்பிக்கைக் குழியில் புதைத்து மகிழ்கிறாய்
மொழியுணர்வு- இன உணர்வு- சமுதாயப்பற்று- நாட்டு பற்று- இனக் கலாச்சார உரிமை- கலை மைந்தன் என்ற நெறிகளையெல்லாம் நீ அந்நியமாக்கி வாழ்கிறாய்!
சர்வதேச சமரசம் என்பதெல்லாம் வேலையற்றோரின் வெட்டி வேலை என்றே தீர்மானம் செய்துவிட்டாய்
எங்களூர் பெரிசுகளின் நரைத்த முடியாய், உன் உணர்வும் வெளுத்து விட்டதே
சர்வதேச தொடர்பு என்பது மூளையற்றோரின் முட்டாள் ஊர்வலம் என்று முடிவு கட்டி விட்டாய்
தவறு இளைஞனே! தவறு
நீ பிறரை அடித்தால்; பிறர் உன்னை அடிப்பர்!
நீ சிரித்தால்; பிறர் சிரிப்பர்
நீ உன் வீட்டு வாசலோடு உன் விலாசத்தை முடித்துக்கொள்ள முடிவு கட்டிவிட்டாய்!
அதனால்; பிறர் துன்பம்- பிறர் மகிழ்ச்சி- பிறர் போராட்டம்- பிறர் மொழி- பிற இனம்- பிறர் வாழ்வு யாவும் உனக்கு வேண்டப்படாத வேசிகளாகிவிட்டன!
தவறு நண்பனே!
உன் சிந்தனையில் கீறல் விழுந்துவிட்டது
உன் சிந்தனையில் வெள்ளைப் பாலில் பசைய கள் வாடை வீசுகிறதே?
இளைஞனே!
இன்னும் ஒரு சோகம் உள்ளீடற்று தொங்கிக்கொண்டிருக்கும் ஓர் அதிர்ச்சியினை அறிவிக்கின்றேன்!
ஆமாம்! இளைஞனே!
நீ வெறுத்து ஒதுக்கியது வேற்று மனிதராய் இருந்தால்



எதார்த்தங்கள் கொஞ்சம் ஒட்டிக்கொண்டிருப்பதாக நியாயங்களை நிலைநாட்டலாம்!
ஆனால், இளைஞனே!
நீ வெறுத்து ஒதுக்குவது உன் நண்பனே!
நீ அறிய வேண்டிய துன்பத்தை அறியாமல் இருப்பது வேறொன்றுமில்லை- தோழனின் போராட்டமே!
உன் இனத் தோழன்
உன் மொழி நண்பன்
உன் கலாச்சாரக் கூட்டாளி
உன் கலைப் பங்காளி- ஈழத் தமிழன்-
விடுதலைப் புலி!
சுதந்திரத் தாகம் கொண்ட தமிழன்
பத்தாண்டுகளுக்கு மேலாக பாதை போட்டுக்கொண்டிருக்கும் ஒரு போராட்டம்!
ஒரு நியாயமான சுதந்திரத் தாகம்!
ஓர் இனத்தின் உணர்வுப் போராட்டம்!
ஒரு வாழ்வியல் நியதி- நீதி!
இதனை நீ அறியாமல் இருப்பதில் எந்தவொரு நியாயமும் இருப்பதாய் நான் உணரவில்லை!
உன் தோழனின் துன்பத்தை அறியாமல், அறிந்தும் அறியாதவாறு உன் வாழ்வுச் சக்கரத்தை மட்டுமே சரிபார்த்துக் கொண்டிருப்பதில் சரி ஏதும் உண்டா?

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



என் இனிய இளவலே! திரும்பிப் பார்
உன் இனத்தின் சுதந்திரத் தாகம் இன்னும்
தீர்க்கப்படவில்லையே!
உன் சமகால தோழனின் இரத்தக்கறை இன்னும்
கழுவப்படவில்லையே!
உன் அன்புத் தோழனின் வியர்வைத் துளிகளுக்கான
விலை இன்னமும் பேசப்படவில்லையே!
ஓ! கால் நூற்றாண்டுகளாய் ஒரு தீர்ப்பு திருத்தப்படாமல்
உள்ளதே!
திருத்தப்படாத தீர்ப்பு உன் நண்பனின் தலைவிதி
என்பதை அறியும் போது, உன் உள்ளத்தின் ஈரம்
ஓரங்குலமாவது உயர்த்தப்பட வேண்டுமே!
தோழா! நாம் நடத்துவது அரசியல் கட்சியல்ல!
ஓர் இனத்தின் உயிர்த்துடிப்பின் உடன்பாட்டுக்
கையொப்பம்
நாம் உணர்வால் மொழியால் இனத்தால்
ஒன்றுபட்டவர்கள்
ஆகவே, இன்றைய இளைஞனே
நீ திரும்பிப் பார்க்காமல் கிழிக்கப்பட்ட சுவடிகள் ஏராளம்
இச்சுவடிகளுக்கெல்லாம் மகுடமாய் இருப்பது
"தமிழீழப் போராட்டம்"
இப்போராட்டம் சுதந்திரத்திற்காகத் தொடங்கப்பட்டு

உன் தோழனின் இரத்தக் கசிவுகள், உன் உள்ளத்தை
ஈரமாக்குவதில்லையா?
தோழனின் இன்னல்கள், உன் தலையில் இடியாய்
விழவில்லையா?
உன் தோழனின் அழுகையைக் கண்டு உன் ஆன்மா
வெடித்துச் சிதறவில்லையா?
புறப்படு! உன்னாலும் ஏதாவது செய்ய முடியும்!
ஒரு துண்டு கடிதமாவது உன்னால் எழுத முடியாது?
அவன் நலம் பற்றிக் கேள்;
அவன் போர் பற்றிக் கேள்;
அவன் உறவு பற்றிக் கேள்;
எதையாவது கேட்டு எழுது!
அவனது போராட்டத்தை நியாயப்படுத்து!
அவன் மகிழ்வான்- அடுத்த எதிர்ப்பில் ஆயிரம்
எதிரிகளை எதிர்க்கும் ஆற்றல் பெறுவான்!
எழுது ஒரு துண்டுக் கடிதம்!
இலங்கை அரசுக்கு- பௌத்த மண்ணில் பாடை
ஊர்வலமா?
மானிடத்தைச் சுட்டெரிக்கும் அரக்க குணத்தைக்
குறித்தெழுது!
அது தன் தவற்றை உணரட்டும்- ஒவ்வொரு விடியலிலும்
ஓராயிரம் கடிதங்கள் அவ்வரக்க அரசைத்



இரத்தத்தால் நனைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது!
இப்போராட்டம் உணர்வால் தொடங்கப்பட்டு
உடன்படிக்கைகளால் அரிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது!
இருபதுகளைத் தாண்டிக்கொண்டிருக்கும் இனிய
நண்பனே!
உடனடியாகத் திரும்பிப்பார்- நாம் தொலைத்த வாழ்வுச்
சுவடிகள் கணக்கிலடங்காதவை- இன்னும் நாம்
தொலைத்துக் கொண்டிருப்பது ஏராளம்- இனி
தொலைப்பை நாம் தொலைத்தாக வேண்டும்!
நம் நண்பன் ஒருவன் நாம் தொலைத்துக்
கொண்டிருக்கும் சுதந்திரத்தை இழுத்துப்
பிடித்துக்கொண்டிருக்கிறான்!
இது அரசாங்கத்துக்கும் தனிமனித ஆளுமைக்கும்
இடையே நடக்கும் கயிறு இழுக்கும் போட்டி!


தட்டியெழுப்பட்டும்!
எழுது துண்டுக் கடிதம்!
இந்திய அரசுக்கு- தன் இயலாமையைக் கண்டு
நாணிக்கோணட்டும்.
தமிழனின் கண்ணீர் ஒரு நியாய உடன்படிக்கைக்கு
உள்ளர்த்தம் சொல்லட்டுமே!
முடியும் நண்பனே!
உன்னால் ஒரு கோடி வெற்றிகள் ஈட்ட முடியும்!
உன் துன்பத்தைக் கண்டு சிந்தட்டும் துளி கண்ணீர்!
நண்பனே! உனக்குத் தேவை;
ஒரு துளி கண்ணீர்!!!

**சீ. அருணாசலம்**
கெல்மின் தோட்டம், பகாவ்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# என்னால் எழுதமுடியாத கவிதை



'பூநகரியிலோர்
புயலெழுந்தது...'

இப்படி நான் எழுதுவேன்
அல்லது,
'கழுத்தை நெரித்தவர்
இதயத்தில் வெடித்தனர்...'
என்றால்
வித்தியாசமாயிருக்குமா
என முயல்வேன்
எனினும்,
என் கவிதை தோற்றுப் போகும்.

போர் நடத்திய
தளபதிகள்
மக்களிடம் சொன்னார்கள்
கவிதை!
பிரெஞ்சுக் கவிஞன்
ப்ளெய்ஸ் செண்ட்ரார்ஸ்
குறிப்பிட்ட 'செயற்கவிதை!'
அதனோடு என் வரிகள் தோற்றுத்தான்
போகும்.

"எதிரிக்கு அன்றுதான்
சமர் தொடங்கிற்று
எங்கள் போராளிகளுக்கு
நான்கு மாதங்களின்
முன்பே தொடங்கிற்று
எங்கள் தலைவனுக்கும்
வேவு படையணிக்கும்
சமர் தொடங்கி
வருடமொன்றாகிறது

எங்கள் மக்களை
கொன்று குவித்து
கடலிலே மிதக்க விட்டவரை
அதனிலும் அதிகமாய்
மிதக்க விட்டோம்
எதிரியிடம் பறித்த
ஆயுதங்கள் சுமந்ததில்
எங்கள் போராளிகள்
தோள்களிலே காயம்!

அடுத்த சந்ததி போரிடவே
ஆயுதம் சுமந்து வந்தோம்
எங்கள் ஆயுதக் களஞ்சியத்தில்
ஆயுதங்கள்
காத்துக்கிடக்கின்றன!"

செயற் கவிஞர்
சிந்திய வரிகள் இவை

என்னால்
எழுதமுடியாத
கவிதை.

- விவேக் -

பிரெஞ்சுக் கவிஞனான ப்ளெய்ஸ் செண்ட்ரார்ஸ் (Blaise Sendrars) ஆபத்தான காரியங்களில் துணிச்சலுடன் ஈடுபடுதலை 'செயற்கவிதை' என்று அழைத்தார். இக்கவிஞர் முதலாம் உலகப் போரில் ஈடுபட்டவர். தீவிரமான விடுதலை விரும்பி.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



தமிழீழத் தேசியத் தலைவ
திரு. வே. பிரபாகரன் அவர்க

# ஒடுக்கப்படும் மக்களே ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராட வேண்டும்

பெண் அடிமைத்தனத்தின் விலங்குகளை உடைத்தெறியாத எந்த ஒரு நாடும், எந்த ஒரு சமூகமும், முழுமையான சமூக விடுதலையைப் பெற்றதாகக் கூற முடியாது. ஏனென்றால், பெண் விடுதலையே சமூக விடுதலையை முழுமை பெறச் செய்கிறது. பெண்கள் சுதந்திரமாக, கௌரவமாக, சமத்துவமாக வாழ வழிசெய்யும் ஒரு மக்கள் சமூகமே உண்மையில் விடுதலை பெற்ற சமூகமாக இருக்க முடியும். அந்த சமூகமே உயரிய பண்பாட்டின் உன்னத நிலையை அடைய முடியும்.

எமது போராட்டம் தேசவிடுதலையை மட்டும் நோக்காகக் கொண்டதல்ல. தேசத்தின் விடுதலையுடன் சமூக விடுதலையையும் இலக்காகக் கொண்டே நாம் போராடி வருகிறோம். சமூக விடுதலை என்ற எமது குறிக்கோளில் பெண் விடுதலை பிரதான இடத்தை வகிக்கிறது. சகல ஒடுக்குமுறைத் தளைகளிலிருந்தும் தமிழீழப் பெண்ணினம் விடுதலை பெறவேண்டும். அப்பொழுதே சமூக விடுதலையானது அர்த்தமுடையதாக முழுமை பெறமுடியும், என்பது எமது நிலைப்பாடு.

ஒரு தேசிய விடுதலை இயக்கம் என்ற ரீதியில் எமது தேசத்தின் நலன் கருதி, எமது மக்களின் நல்வாழ்வு கருதி, நாம் முற்போக்கான கொள்கைகளை வரித்து, போராட்டத்தை முன்னெடுத்து வருகிறோம். இந்தக் கொள்கைக
மக்கள் பற்றிக்கொண்டு, அவற்றை
செயற்படுத்த உறுதிபூண்
போராட்டத்தில் பங்குகொள்ளு
பொழுதுதான் போராட்ட
வெற்றிப்பாதையில் செல்லமுடியு
எந்த ஒரு விடுதலை இயக்கமு
தனியாக நின்று, மக்களுக்கு
புறம்பாக நின்று, விடுதலை
வென்றெடுத்ததாக வரலா
இல்லை. அது, நடைமுறை
சாத்தியமான காரியமுமல்ல. ஒ
விடுதலை இயக்கத்துக்குப் பின்னா
மக்கள் அணிதிரண்டு, அந்
இயக்கத்தின் இலட்சியத்தில் பற்று
கொண்டு போராட்டத்தில் பங்
கொள்ளும் பொழுதுதான் விடுதல
சாத்தியமாகிறது.

எமது சமூகத்தில் நிலவு
ஒடுக்குமுறை வடிவங்களை ஒழித்து
கட்டி, சமத்துவத்தையும் சமூ
நீதியையும் நிலைநிறுத்த எம
இயக்கம் திடசங்கற்பம் பூண்டிரு
கிறது. சமூக உறவுகளில் அடிப்பன
யான மாற்றத்தை நிகழ்துவத
மூலமே இதனைச் சாதிக்கமுடியு

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


இந்தச் சமூக மாற்றத்திற்கு முதற் படியாக சமூக விழிப்புணர்வு அவசியம். விழிப்புணர்வு பெற்ற மக்களின் ஆதரவும், ஒத்துழைப்பும், பங்களிப்பும் அவசியம். மக்களின் ஆதரவுடன், மக்களின் மேம்பாட்டிற்காக நிகழ்த்தப்படும் சமூக சீரமைப்புகளே நிரந்தரமானதாக நிலைத்து நிற்கும்.

ஒடுக்கப்படும் மக்களே ஒடுக்குமுறைக்கெதிராகப் போராடவேண்டும். அநீதிக்கு ஆளாகி நிற்பவர்களே அநீதியை ஒழித்துக்கட்ட முன்வரவேண்டும். இந்தவகையில், பெண் அடிமைத்தனத்துக்கு எதிராக பெண்களே போர்க்கொடி உயர்த்தவேண்டும்; போராடவேண்டும். இந்தப் போராட்டம் ஒரு தேசிய விடுதலை அமைப்பின் பக்கபலத்துடன் முன்னெடுக்கப்படுமானால் அது வலுமிக்க சக்தியாக வெற்றியைப் பெற்றுத்தரும்.



பெண் ஒடுக்குமுறை என்பது ஒரு சிக்கலான சமூகப் பிரச்சினை. நீண்ட நெடுங்காலமாக, எமது பண்பாட்டு வாழ்வில் ஆழப்புரையோடி நிற்கும் சமூகக் கொடுமை. இந்த சமூக அநீதியை வேரோடு பிடுங்கி எறிய எமது இயக்கம் உறுதிபூண்டு நிற்கிறது. இந்த இலட்சியத்தை நாம் வெற்றிகரமாகச் சாதித்து முடிப்பதாயின் பெண்களின் ஆதரவும், பங்களிப்பும் அவசியம். தமிழீழப் பெண்ணினம் எமது விடுதலை இயக்கத்துடன் அணிசேர்ந்து இந்தப் புரட்சியை முன்னெடுக்க முன்வரவேண்டும்.

தேசிய விடுதலைப் போராட்டம் முனைப்புற்று நிற்பதால், எமது சமூகத்தில் ஒரு புரட்சிகரமான சூழ்நிலை உருவாகி இருக்கின்றது. சமூக மாற்றத்திற்கு ஏதுவான புறநிலை தோன்றியிருக்கிறது. இந்தப் புரட்சிகரமான வரலாற்றுச் சூழ்நிலையைப் பயன்படுத்தப் பெண்ணினம் தவறிவிடக்கூடாது. சமூகப் புரட்சிக்கான அக, புறச் சூழ்நிலைகள் கனிந்துள்ள இவ்வேளையில், பெண்விடுதலைக்கான போராட்டத்தைத் தீவிரப்படுத்தப் பெண்கள் முன்வரவேண்டும்.

ஒடுக்கப்படும் மக்களே ஒடுக்குமுறைக்கெதிராகப் போராடவேண்டும். அநீதிக்கு ஆளாகி நிற்பவர்களே அநீதியை ஒழித்துக்கட்ட முன்வரவேண்டும். இந்தவகையில், பெண் அடிமைத்தனத்துக்கு எதிராக பெண்களே போர்க்கொடி உயர்த்தவேண்டும்; போராடவேண்டும். இந்தப் போராட்டம் ஒரு தேசிய விடுதலை அமைப்பின் பக்கபலத்துடன் முன்னெடுக்கப்படுமானால் அது வலுமிக்க சக்தியாக வெற்றியைப் பெற்றுத்தரும்.

இன்று, எமது தேசிய விடுதலைப் போராட்டம் புதிய சவால்களையும், புதிய நெருக்கடிகளையும் எதிர்கொண்டு நிற்கிறது. என்றுமில்லாதவாறு சிங்களப் பேரினவாத சக்திகள் ஓரணியில் ஒன்று திரண்டு, தமிழரின் தன்னாட்சி உரிமைப் போராட்டத்தை நசுக்கிவிடக் கங்கணம் கட்டி நிற்கின்றன. தமிழ் மக்கள் மீது தொடர்ந்து சாவையும் அழிவையும் கட்டவிழ்த்துவிட்டு தமிழர் நிலத்தை ஆக்கிரமிக்கும் நோக்கில், பெரியதொரு போருக்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



கான தயாரிப்பு வேலைகளையும் சிங்கள அரசு மேற்கொண்டு வருகிறது.

அன்று தொட்டு இன்றுவரை, கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக சிங்களப் பேரினவாதம் இராணுவத் தீர்விற்கே முதலுரிமை கொடுத்து வருகிறது. யுத்தத்திலும் ஆயுத அடக்குமுறையிலும் நம்பிக்கைகொண்டு செயற்பட்டு வருகிறது. சமாதானப் பாதைகளை மூடிவிட்டு வன்முறை மார்க்கத்தையே கடைப்பிடித்து வருகிறது. நீதி கேட்டுப் போராடும் எமது மக்களிற்கு எதிராக மிகவும் கொடூரமான அநீதிகளைப் புரிந்து வருகிறது. பௌத்த தர்மத்திற்கு இழுக்கை ஏற்படுத்தும் மகாபாதகச் செயல்களைப் புரிந்துகொண்டு தமிழரின் உரிமைப் போராட்டத்தை 'பயங்கரவாதம்' என வர்ணித்தும் வருகிறது.

அன்றுதொட்டு இன்றுவரை தமிழரின் போராட்டம் அறவழியைத் தழுவிநிற்கிறது. அகிம்சை வழியிலும் சரி, ஆயுத வடிவிலும் சரி தமிழர் வரித்துக்கொண்ட போராட்டம் தர்மத்தின் நியமத்தில் நெறிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தார்மீக அடிப்படையே எமது போராட்டத்தின் ஆன்மீக பலமாகவும் இருந்துவருகிறது.

நாம் சமாதானத்தின் கதவுகளை அடைத்துவிடவில்லை. சமாதான வழியில் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பாதைகளை மூடிவிடவில்லை. சமாதான வழிமூலம் எமது மக்களுக்கு நீதி கிடைக்குமானால் நாம் அதனை மகிழ்ச்சியுடன் வரவேற்போம்.

சமாதானத்தைத் தோற்றுவிக்கும் நல்லெண்ண நோக்குடன் இங்குவரும் சமாதானத் தூதுவர்களை நாம் நேசக்கரம் நீட்டி வரவேற்று வருகிறோம். போரை நிறுத்தி, சமாதான வழியில் பிரச்சினைக்குத் தீர்வுகாண எமது விடுதலை இயக்கம் தயாராக இருக்கிறது என்பதை நாம் இவர்களுக்கு மேலும் மேலும் வலியுறுத்தி வருகிறோம். எமது நல்லெண்ணத்துக்குச் சான்றாக சமாதான சமிக்ஞைகளைக் காட்டவும் நாம் தவறவில்லை.

எமது நோக்கத்தையும், நிலைப்பாட்டையும் சர்வதேச சமூகம் இன்று நன்கறியும். சமாதானத்தின் பாதைக்கு முட்டுக்கட்டையாக நிற்பவர்கள் யார் என்பதையும் உலகம் நன்கறியும். உலகத்தின் சமாதான முயற்சிகளுக்கும் ஊறு விளைவிப்பவர்கள் யார் என்பதையும் உலகம் நன்கறியும்.

மனித உரிமைக்கும், மனித நீதிக்கும், சமாதானத்திற்கும் குரல் எழுப்பும் இந்த உலகமானது உரிமை கேட்டு, நீதி கேட்டு சமாதான வழியில் தீர்வு கேட்டு நிற்கும் எமது மக்களுக்குச் சார்பாக குரல் எழுப்பவேண்டும். இதுவே உலகத்தின் இன்றைய தார்மீகக்கடப்பாடாகும்.

அனைத்துலக மகளிர் தினத்தை முன்னிட்டு விடுதலைப் புலிகளின் மகளிர் அமைப்பு இன்று நடாத்தும் பெண்கள் எழுச்சி நிகழ்ச்சிகளுக்கு எனது நல்லாசியை தெரிவித்துக் கொள்கிறேன்.

(8.3.1994 அனைத்துலகப் பெண்கள் நாளையொட்டி தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் வெளியிட்ட அறிக்கை)

## நாட்டுப்பற்று

ஒரு கிராமப் பாதையின் மத்தியில் ஒரு கல் தலையை உயர்த்திக் கொண்டு புதைந்து கிடந்தது. அவ்வழியால் வருவோர், போவோர் எல்லோரும் அதில் அடிபட்டுக் காயமடைந்தார்கள். சிலர் அதில் தடக்கி விழுந்து சென்றார்கள்.

"என்ன அரசாங்கம் இது! இந்தக் கல்லை அகற்றாமல் விட்டிருக்கிறதே!" என அரசாங்கத்தை நொந்துகொண்டு போனார்களே தவிர, ஒருவரும் அக்கல்லை அகற்றத் துணியவில்லை.

அதில் அடிபட்டுக்கொண்ட ஒரு முதியவர், 'பாவிப் பயல்கள் பிறந்த இந்த ஊரிலே இந்தக் கல்லைஎடுத்துப் போட நாதியில்லையே!' என்று சாபமிட்டாரே தவிர, அவரும் அதை அகற்றவில்லை.

இரவில் மாறுவேடம் தரித்து நகர சோதனை செய்துவந்த அவ்வூர் அரசன் இதையெல்லாம் கவனித்து வந்தான். ஒருநாள் இரவு அந்தக் கல்லைப் பெயர்த்து அதனடியில் தன் அரச சின்னம் பொறிக்கப்பட்ட முத்திரையையும், சில பொற்காசுகளையும் வைத்து அதன் மீது முன்பு இருந்தபடியே கல்லை வைத்துவிட்டுச் சென்றான்.

பலநாட்களின் பின்னர் ஒரு நொண்டிப் பிச்சைக்காரன் ஒரு நாள் தட்டுத்தடுமாறி அப்பாதை வழியாக வந்தான். அக்கல்லில் தடக்கி விழப்பார்த்தான். ஆனால் விழுந்துவிடவில்லை. தன்னுடைய நிலை மற்றவர்களுக்கும் ஏற்பட்டுவிடக்கூடாதே என்று எண்ணி, மெது மெதுவாக சுற்றியிருந்த மண்ணை அள்ளியெடுத்து, அந்தக் கல்லை அப்புறப்படுத்தினான். அதனடியில் இருந்த அரசமுத்திரையையும், பொற்காசுகளையும் கண்டதும் அவனுக்கே கிலிபிடித்துக்கொண்டது. அவற்றை எடுத்துக்கொண்டு அரண்மனைக்குச் சென்றான். அரசனைக்கண்டு அவற்றைக் கொடுத்தான்.

"இவ்வளவு மக்கள் வாழும் இந்த ஊரிலே, அரசாங்கத்தைப் பழித்தும், சாபமிட்டும் சென்றார்களே ஒழிய உன்னைப்போல் கடமையைச் செய்ய ஒருவரும் முன்வரவில்லை. அதனால் இந்தப் பொற்காசுகளை நீயே வைத்துக்கொள்." என்று திருப்பிக் கொடுத்துவிட்டான் அரசன்.

அந்தப் பிச்சைக்காரன் அளவில்லா மகிழ்ச்சியடைந்தான்.


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


அண்மையில் தமிழீழம் சென்றிருந்த 'சுபமங்களா' பத்திரிகை ஆசிரியர் கோமல் சுவாமிநாதன் அவர்கள், 'சுபமங்களா' இதழில் வெளியிட்டிருந்த பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களுடனான நேர்காணலை அப்படியே இங்கே தருகிறோம்.

# 'போராட்டம் இங்கே புதிய மாற்றங்களைக் கொடுக்கிறது'

## பேராசிரியர் கா. சிவத்தம்பி நேர்காணல்




வாழ்க்கை சிதறிப்போன யாழ். நகரத்தின் மத்தியில், ஒரு காலத்தில் கம்பீர நடை போட்டு இன்று நாடி தளர்ந்து சோபை இழந்து கிடக்கும் 'சுபாஷ்' ஹோட்டலின் மின்சாரமில்லாத அறையில், பனைஓலை விசிறியிலிருந்து வருகிற தென்றலை அனுபவித்துக்கொண்டு, வெளியே பட்சிகளின் ஜுகல்பந்தியோடு அந்தப் பேராசிரியரைச் சந்தித்தேன். அவரை நான் 80களின் ஆரம்பத்தில் பார்த்தபோது இருந்த மிடுக்கு இல்லை. நடை தளர்ந்து கம்பு ஊன்றி வந்தார். ஆனால் கண்களின் ஒளியோ, சிந்தனையின் தெளிவோ கொஞ்சமும் குறையாமல் அப்படியே இருந்தது. இலங்கை இரட்டையர் என பேராசிரியர் கைலாசபதியையும், போராசிரியர் சிவத்தம்பியையும் அழைப்பார்கள். மார்க்சிய விமரிசகர் என்று அறியப்பட்ட பேராசிரியர் சிவத்தம்பி, தமிழ் விமரிசனத் துறையில் பல புதிய கோணங்களுக்கு வெளிச்சமிட்டுக் காட்டியவர். 1932-ல் கார்த்திகேசு- வள்ளியம்மை தம்பதியருக்குப் பிறந்தவர். இந்த சாமானியர் வீட்டுப் பிள்ளை, கிராமத்தில் ஆரம்பப் படிப்பை முடித்து கொழும்பில் சகீரா கல்லூரியில் பயின்று, கல்லூரி ஆசிரியராக இருந்து, பின்னர் பாராளுமன்றத்தில் மொழி பெயர்ப்பாளராகப் பணியாற்றி, வித்தியோதயா பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகவும் இருந்தவர். பர்மிங்ஹாம் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் தாம்சனின் கீழ் Drama in Ancient Tamil Society என்ற ஆய்வினைச் செய்து பட்டம் பெற்றார். யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகச் சேர்ந்தார். அங்கிருந்து தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கும், உப்சலா பல்கலைக் கழகத்திற்கும் ஸ்காண்டி நேவியா பல்கலைக் கழகத்திற்கும் அமெரிக்காவில் உள்ள கலிஃபோர்னியா, பெர்க்கிளி, விஸ்கான்சியன், ஹாவர்ட் பல்கலைக் கழகங்களுக்கும் சென்று பணியாற்றினார். 'ஷெல்' அடிப்பும் 'பொம்' வெடிப்பும் இருந்த போதிலும், மண்ணை விட்டுப் போக மனமில்லாமல், யாழ்ப்பாணத்திலேயே பணியாற்றும் பல பேராசிரியர்களில் இவரும் ஒருவர். பேராசிரியர் க.வித்தியானந்தம், பேராசிரியர் கணபதிப்பிள்ளை இவர்களின் மாணவராக இருந்த இவர், அவர்கள் வழிகாட்டுதலில் நாடகம் பற்றிய பிரக்ஞையை விரிவாக வளர்த்துக் கொண்டார். ஈழத் தமிழ் இலக்கியத்தின் திருப்பு முனைகளாக அமைந்த முற்போக்கு எழுத்தாளர் சங்கம், மற்றும் மரபு பற்றிய விவாதங்கள், நாடக மறுமலர்ச்சி இவை போன்றவைகளில் பேராசிரியர் சிவத்தம்பியின் பங்கு கணிசமானது. தன் இலக்கியத் தேடலுக்கும், இலக்கிய யாத்திரைக்கும் அருந்துணையாக இருந்தவர் தன் மனைவி எனக் குறிப்பிடும் இவருக்கு, மூன்று பெண் மக்கள் உண்டு. நவீன இலக்கியம், புதிய விமரிசனம், தேசிய இலக்கியம், போராட்ட காலக் கலை இலக்கியம் பற்றியெல்லாம் அவருடன் விரிவாக நடத்திய நேர்காணல் இதோ:

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



*** நீங்கள் மார்க்சிய விமரிசகராக அறியப்படுகின்றீர்கள். இந்த மார்க்சியப் பின்னணி உங்களுக்கு எப்படி ஏற்பட்டது?**

+ ஆரம்பத்திலேயே என்னுடைய கிராமத்தில் மார்க்சிய வகுப்புக்கள் நடத்தப்பட்டன. பொன்னம்பலம் கந்தையா போன்ற மார்க்சிஸ்டுக்களின் தொடர்பு ஏற்பட்டது. அதன் பின்னர் கொழும்பில் நான் படிக்கும்போது சமாதான மாநாடு நடைபெற்றது. மாநாட்டில் நானும், கைலாசபதியும் கலந்து கொண்டோம். பின்னாளில் முக்கிய இலக்கிய வாதிகளாக அறியப்பட்ட எல்லோரும் அதில் வந்து சேர்ந்து கொண்டார்கள். பின்னர் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் அங்கத்தினர் ஆனோம். கட்சித் தொடர்பும் ஏற்பட்டது. கோசாம்பி, தேவிபிரசாத் சட்டோபாத்யாய போன்றவர்களின் நூல்களைப் படித்ததோடு, சோவியத் இலக்கியங்களோடும் தொடர்பு கொண்டோம். பின்னர் பேராசிரியர் தாம்சனிடம் நான் பயின்றபோது, மேலும் என் மார்க்சியக் கல்வியை வளர்த்துக் கொண்டேன். 1954ல் கம்யூனிச இயக்கம் ஒரு புதிய எழுத்தாளர் பரம்பரையை அறிமுகம் செய்து வைக்கின்ற முயற்சியில் ஈடுபட்டபோது, அந்த எழுத்தாளர்களுக்கு நாங்கள் விமர்சகர்களாக இருந்தோம். அவர்கள் எழுத்துக்களுக்கு விமர்சகர்களாக இருந்தபோதே இரண்டு தளங்களில் செயல்பட்டோம். சினேக பூர்வமாக அவர்களுடைய எழுத்துக்களை விமரிசனம் செய்து அதை ஆழப்படுத்துவது, மற்றது அந்தக் கொள்கைகளை ஏற்காதவர்களுக்கு அந்த எழுத்துக்களுடைய தன்மையை நியாயப்படுத்துவது. இதற்காக நாங்கள் ஆழமாக இலக்கியங்களை, குறிப்பாக ஆங்கில இலக்கியங்களை வாசிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. சோஷலிச சிந்தனை பற்றிய சகல விடயங்களையும் பரந்துபட்ட அளவில் வாசிக்க நேர்ந்தது. அப்போது தமிழகத்திலுள்ள சில எழுத்தாள நண்பர்களுடைய உறவும் ஏற்பட்டது. குறிப்பாக சிதம்பர ரகுநாதன், விஜயபாஸ்கரன், ஆர்.கே. கண்ணன் போன்றவர்களைச் சொல்ல வேண்டும். மார்க்சிய கண்ணோட்டங்களை தமிழ்நாட்டின் பின்புலத்திலும், எவ்வாறு வைத்துப் பார்க்கலாம் என்கின்ற ஒரு உந்துதல் நாங்கள் வாசித்த நூல்கள் மூலமாகவும், நாங்கள் பழகிய தோழர்கள் மூலமாகவும், எங்களுடைய ஆசிரியர்களின் வழிகாட்டுதல் மூலமாகவும் ஏற்பட்டது.

*** நீங்களும், கைலாசபதி போன்ற மார்க்சிஸ்ட் விமரிசகர்களும் மார்க்சிய கட்சிகளுக்கு அப்பாற்பட்டு எழுதிய எழுத்தாளர்களை, அவர்களது இலக்கியமே இல்லை என்று ஒதுக்கிவிட்டதாக உங்கள் மீது ஒரு குற்றச்சாட்டு இருக்கின்றதே!**

+ எங்களுக்கு அந்தக் காலகட்டத்தில் இருந்த தேவை என்னவென்றால், எங்களுடைய குழாத்தைச் சேர்ந்த எழுத்துக்கள் அங்கீகரிக்கப்படாத நிலையில் அந்த அங்கீகாரத்தைப் பெற்றுத் தருவது ஒன்றே எங்கள் கடமையாக இருந்தது. அடுத்த காலகட்டத்தில் யார் யார் இந்த சமூகமாற்றக் கொள்கைகளை முன்வைக்கின்றார்கள் என்பதை இனங்காண வேண்டிய அவசியமும் இருந்தது. அந்தக் கால கட்டத்தில் உணர்ச்சிநிலைப்பட்ட விஷயங்களை மட்டும் பாராமல், அதையும் தாண்டி ஆழமாகச் சென்று சமூக மாற்றம் என்ற கொள்கையிலிருந்து எந்தெந்த இலக்கியங்கள் பேசுகின்றனவோ, அந்த இலக்கியங்களை நாங்கள் அதிகம் அழுத்தம் கொடுத்துக் கொண்டு வந்தோம். இது ஒரு கருத்துவயப்பட்ட வேறுபாடுகள். அதுமட்டுமல்ல, அப்போது இலக்கிய உலகில் மிகப் பெரிய போராட்டம் நிகழ்ந்து கொண்டிருந்தது. மரபு பற்றிய போராட்டம், யதார்த்தம் என்கின்ற போராட்டம், தேசிய இலக்கியம் என்கிற போராட்டம் இவைகளெல்லாம் நடந்து வந்தன. மரபு எந்த அளவுக்கு இருக்க வேண்டும், தேசிய இலக்கியம் வேண்டுமா வேண்டாமா, போன்ற சர்ச்சைகள் நடந்தன. இதன் காரணமாக கருத்துக்களின் அடிப்படையில் பிரித்துப் பார்க்கின்ற தன்மை ஏற்பட்டது.



*** மகாகவி போன்றவர்களைக் கூட நீங்கள் ஏற்றுக் கொள்ளவில்லையென்று கூறப்படுகிறதே?**

+ உண்மையில் மகாகவியை நாங்கள் அவ்வாறு புறக்கணித்ததாக எங்களுக்குத் தெரியாது. ஆனால் மற்றைய நண்பர்களான முருகையனுடைய கவிதைகளையோ, டானியல், டொமினிக் ஜீவா, ரகுநாதன் இவர்களுடைய கவிதைகளையோ நியாயப்படுத்தின அளவுக்கு அல்லது அவைகளைப் பற்றிப் பேசிய அளவுக்கு மகாகவியைப் பற்றிப் பேசவில்லை. அது உண்மை.

*** டானியலின் பஞ்சமர் நாவலைக் கூட, 'அது ஒரு வர்க்கரீதியான அடிப்படையில் எழுதப்படவில்லை, ஜாதியின் அடிப்படையில் எழுதப்பட்டது' என்று ஆரம்பகட்டத்தில் மார்க்சியவாதிகள் புறக்கணித்துவிட்டனர் என்று ஒரு விமரிசனம் இருக்கிறதே. அது பற்றி என்ன கூறுகிறீர்கள்?**

+ மார்க்சியவாதிகள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை என்று கூறுவது சரியானது ஆகாது. டானியலைப் பற்றி ஆராய்கிறபோது, இரண்டு விடயங்கள் இருக்கின்றன

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


அவர் முற்போக்கு இலக்கிய இயக்கத்தின் ஒரு எழுத்தாளராக பரிணமித்த காலம். அந்தக் காலத்தில் அவருடைய சிறுகதைத் தொகுதிகள் வந்தபோது எந்த வேறுபாடும் நாங்கள் காட்டவில்லை. அடுத்தமுறை அவர் தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தில் மிகமுக்கிய மான இடத்தைப் பெற்றிருந்தார். அப்போதும் பஞ்சமர் சம்பந்தமாகவோ மற்ற நாவல்கள் சம்பந்தமாகவோ அவருடைய எழுத்துக்குள்ள முக்கியத்துவத்தை நாங்கள் குறைக்கவில்லை. அப்போது கம்யூனிஸ்ட் கட்சியில் இன்னொரு வேறுபாடும் இருந்தது. சீனச்சார்பு, மாஸ்கோ சார்பு. உதாரணமாக நான் மாஸ்கோ சார்பு. டானியல் சீன சார்பு. இருந்தும் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பஞ்சமர் பற்றிப் பேசும்போது நாங்கள் அதை சிலாகித்துத்தான் பேசினோம்.




*** இன்றைய காலகட்டத்தில் மார்க்சிய விமரிசனத்தின் முக்கியத்துவம் என்ன? சோவியத் ருஷ்யாவின் சிதைவுக்குப் பின் இந்த விமரிசனத்துக்கான தேவையும், பொருத்தமும் என்ன?**

+ இது ஒரு முக்கியமான விடயம். சோவியத் ருஷ்யாவை எடுத்துக்கொண்டால், எழுபது வருடங் களுக்குப் பிறகு, கம்யூனிசம் அல்லது சோஷலிசம் அந்த நாட்டில் தோல்வியுற்றது. சோவியத் மாதிரி தோல்வியடைந்ததால், கம்யூனிசம் சம்பந்தமாக எல்லா மாடல்களுமே தோல்வியுற்றதாக எடுத்துக் கொள்ளக் கூடாது. அடுத்து மார்க்சிய விமரிசன முறை என்பது 1960 முதல் ரஷ்யாவிலிருந்தோ, சீனாவிலிருந்தோ எடுக்கப்படவில்லை. அது ஐரோப்பாவிலிருந்தும், லத்தீன் அமெரிக்காவிலிருந்தும் எடுக்கப்பட்டது. அவர்கள் இலக்கியங்களைப் பார்க்கும் போது மார்க்சிய சிந்தனைகளுக்கே சில விஸ்தரிப்புக்களை ஏற்படுத்தினார்கள். இன்றைக்கு கேள்வி என்னவென் றால், அந்த மார்க்சிய சிந்தனைகளின் விரிவாக்கங்கள் தேவையா, இல்லையா என்பதுதான். உதாரணமாக கிராம்ஷியினுடைய மார்க்சிய கலை- இலக்கிய நோக்கோ, அல்லது உலக நோக்கோ இன்றும் மிக அவசியமானது. கிராம்ஷியை ரஷ்யர்கள் சரியாக வாசித்து உள்வாங்கிக் கொண்டிருந்திருப்பார்களேயா னால் ஒருவேளை நடந்த எதிர்ப்புரட்சியைத் தடுத்திருக்கலாம்.

*** கிராம்ஷியைப் பற்றிய உங்களுடைய இந்தச் சிந்தனை கூட சமீபத்தில் ஏற்பட்ட மறுசிந்தனையாக இருக்கக்கூடுமல்லவா?**

+ பத்தாண்டுகளுக்கு முன்பே கிராம்ஷியினுடைய சிந்தனைகள் என்னை மிக ஆழமாகக் கவர்ந்தன. ஏனென்றால் முதலாவது, அமைப்புகள் மாறினாலும் கருத்துக்கள் சார்ந்த ஒரு மேலாண்மை நிறுவப்பட்டுக் கொண்டேயிருக்கும். அந்த மேலாண்மையைப் பரப்புவதற்கான நிறுவனங்கள் தொழிற்பட்டுக் கொண்டே இருக்கும். பாடசாலைகள், மத நிறுவனங்கள், பொது ஸ்தாபனங்கள் இவை கொண்டுசெல்கின்ற சாதாரண கருத்துப் பின்னணிகள் இருந்துகொண்டேயிருக்கும். இந்த மாதிரியான விஷயங்களை எல்லாம் கிராம்ஷி தன்னுடைய இத்தாலி நாட்டின் தேவை காரணமாக ஆராய்ந்தார். அல்துசார் போன்றவர்கள் அமைப்பியல்வாதத்தின் வழியாக மார்க்சியத்திற்கு வந்தவர்கள். அவர்களுடைய கருத்துக்களோடு நமக்கு முரண்பாடுகள் இருக்கலாம். அவருடையதும் ஒரு சிந்தனையுடைய விஸ்தரிப்புத் தான். இந்தச் சிந்தனைகள் தமிழ் இலக்கியத்திற்கு வேண்டுமா? வேண்டாமா? நான் நினைக்கிறேன், நிச்சயமாக வேண்டும். லத்தீன் அமெரிக்கா போன்ற நாடுகளில் இலக்கியம் சம்பந்தமாக சில சிந்தனைகள் வளர்த்தெடுக்கப்படுகின்றன. மூன்றாம் உலகநாடுகளுக் குப் பொருத்தமான மார்க்சிய சிந்தனைகளைக் கூட இதிலிருந்து நாம் உருவாக்கிக் கொள்ளலாம்.

*** இன்றைக்கு தலித் இலக்கியங்களின் அடித்தளங்களை ஆராய மார்க்சிய அணுகுமுறை எப்படியானதாக இருக்க வேண்டும்?**

+ இந்தியாவில் தலித் இயக்கங்களின் அடித்தளத் திலுள்ள கருத்துவயப்பட்ட சிந்தனை எது என்று பார்க்க வேண்டும். இந்திய சமூக அமைப்பு சாதிய அமைப்பைக் கொண்டது. மார்க்சியம் சொல்லுகிற வர்க்க அமைப்பிற்கும் சாதிய அமைப்புக்கும் உள்ள முறைமை என்ன, இங்குள்ள சாதிய ஒடுக்குமுறையைப் புரிந்து கொள்ளாமல் வர்க்க ஒடுக்குமுறையைவிளங்கிக் கொள்ள முடியுமா, என்பன போன்ற அடிப்படை யான கருத்துநிலைதான் தலித் இலக்கியம். சாதி அமைப்பு என்கிற வரலாற்று உண்மையை மறந்துவிட்டு நாம் வர்க்க அமைப்பைப் பார்க்கும்போதுதான் பிரச்சினை. உதாரணமாக பம்பாயிலோ, சென்னை யிலோ, கொழும்பிலோ துறைமுகத்தில் வேலை செய்யும் முற்றும் முழுதுமான தொழிலாளியை பாடப்புத்தக ரீதியான விளக்கங்களுக்குள் புரிந்து கொள்வது போதுமானதா, அல்லது அவன் ஒரு கிராமத்திலிருந்து வந்தவன், அந்த கிராமத்தின் சமூக அமைப்பு, அவனுடைய கிராமத்துப் பின்னணி

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

போன்ற விஷயங்களை ஆராய்ந்து, அவனை அந்தப் பின்புலத்தில் விளங்கிக் கொள்வதா என்ற பிரச்சினை இருக்கின்றது. அவனை துறைமுகத்தில் வேலைபார்க்கின்ற தொழிலாள் என்ற மட்டத்துக்குள், ஒரு பொருளாதார அணுகுமுறைக்குள் பார்ப்பதையும்விட, அவனை ஒரு சமூகவியல் அணுகுமுறையில் பார்க்கின்ற மார்க்சிய சிந்தனைகள் தேவைப் படுகின்றன.

*** இப்போது ஈழத்தில் இனப்போராட்டம் கூர்மையடைந்திருக்கின்றது. ஒரு பேரினம் மற்ற சிறு இனத்தை அடக்கி ஒடுக்கி ஆள்கின்றது. என்கிற நிலையில், வர்க்கப் போராட்டம் என்ற அணுகுமுறை சரியா இருக்குமா? அல்லது இனப்போராட்டம் என்பதற்கு முன்னுரிமை கொடுத்து அதன்வழி இயங்கி வெல்வது சரியாக இருக்குமா?**

+ ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் இனக்குழும ஒடுக்குமுறையானது ஒரு பேரினவாதத்தின் தன்மையை வந்தடைகின்றது. அந்தக் காலகட்டங்களில் வர்க்கப் போராட்டம் என்பது பலவேறு வடிவங்கள் எடுக்கக் கூடியது. அந்தந்த நாட்டு வரலாற்றுச் சூழ்நிலைகளுக் கொப்ப எடுப்பது முக்கியமாகின்றது. இந்த வரலாற்றுப் பின்னணியைப் பார்க்கும்போது இங்கு நடந்தது என்னவென்றால், தேசியம் என்கிற பெயரில் சிங்கள இனவாதத்திற்கு இடமளிக்கப்பட்டது. இந்த சிங்கள இனவாதத்தைக் கொண்டு நடத்தியவர்கள், அவர்களிடையே காணப்பட்ட சிறுமுதலாளிகள் அல்லது புதிய உத்யோகஸ்தர்களாக வருகின்றவர்கள். இந்த இனவாதத்தின் தன்மையை விளங்கிக் கொள்ள நாங்கள் பிந்திவிட்டோம். இதன் காரணமாகத்தான் இப்போதுள்ள போராட்ட வடிவத்தை எடுத்தோம். அந்த நேரத்தில் பலவகையான வரலாற்றுச் சூழல்களையும், உண்மைகளையும் நிராகரித்த ஒரு ஒடுக்குமுறை வந்தது. தனி ஒடுக்குமுறையாக இது வரவில்லை. முதலில் நிர்வாக இயந்திரத்தை அது அப்படியே ஏற்றுக் கொண்டது. சிங்கள மொழியைத் திணித்தது என்பது நிர்வாக இயந்திரத்தை அப்படியே ஏற்றுக் கொண்டதற்கு ஒப்பாகும். பின்னர் நிலங்களிலிருந்து சிறுபான்மையினர் வெளியேற்றம். இதில் மதமும் முக்கிய பங்கு வகிக்கிறது. சில இடங்கள் ஷேத்திரமாகவும், யாத்திரைத் தலமாகவும் கருதப்படுகிறது. இதற்கும் அந்தப் பிரதேசத் தன்மைக்கும் ஒரு தொடர்பு இருக்கிறது. நாங்கள் செய்த பிழை என்னவென்று சொன்னால், மார்க்சிய சிந்தனையாளர்கள் ஏற்றுக்கொள்வது என்னவென்றால், இந்த மொழிநிலைப்பட்ட வாதம் ஏற்பட்ட போது, அதனூடாகக் கிடந்த இந்தப் பேரினவாதத்தின் தன்மையை நாங்கள் சரியாக விளங்கிக் கொள்ளாததே. அறுபதுகளில் இது முளைவிட்டு வரும்போது, சரியாக இனம் கண்டுகொண்டு இருப்போமேயானால் இந்தப் பிரச்சினை வந்திருக்காது. அறுபதுகளுக்குப் பின் அது வளர்ந்து அரச பயங்கரவாதமாக மாறுகின்றது. அது அராஜகமாக வளரும்போது சகலமுமே ஒடுக்கப் படுகின்றது. இம்மாதிரி வரலாற்றில் ஏற்பட்ட தனித்துவமான கூறுகளை விளங்கிக் கொண்டோம் என்று சொன்னால், மார்க்சியம் இப்படிப்பட்ட சூழலில் சரியாகவே தொழிற்பட்டிருக்கும். மார்க்சியத்தின் அணுகுமுறையை ஒரு வாய்ப்பாடாக எடுத்துக் கொள்ளாமல் விளங்குவதற்கான அணுகுமுறையாக வைத்திருக்கவேண்டும்.

*** இன்று இனஒடுக்குமுறை சம்பவங்களும், இன அழிப்பு நிகழ்ச்சிகளும், அதற்கெதிரான ஆயுதம் தாங்கிய போராட்டமும் நடைபெறுகின்றன. இந்தப் போராட்ட சூழ்நிலையின் சாராம்சங்களை ஈழத்துக் கலை இலக்கியம் எப்படி உள்வாங்கிக் கொண்டிருக்கிறது?**

# தமிழகத்திலிருந்து ஒரு இலக்கியக் குரல்

## கோமல் சுவாமிநாதன்

'சுபமங்களா' இலக்கிய விஷயங்களைத் தாங்கிவரும் ஒரு இந்திய சஞ்சிகை. இதன் ஆசிரியர் பிரபல நாடக எழுத்தாளரும் நெறியாளருமான திரு. கோமல் சுவாமிநாதன் அவர்கள்.

இந்தியாவின் நிஜத்தை தரிசிக்கமுடியாதபடி, கனவுகளின் உலகத்தையும் துப்பறியும் ஜேம்ஸ் பாண்ட்களையும் மாடிவீடுகளையும் கருப் பொருளாக்கிய குப்பை இலக்கியங்கள் மத்தியில், சாதாரண மக்கள் குடிநீருக்குப் படும் அவலம் எவ்வாறு அவர்களைப் போராட்டத்தை நோக்கிச் இட்டுச் செல்லும் என்பதை 'தண்ணீர் தண்ணீர்' நாடகம் மூலம் வெற்றிகரமாக உணரவைத்தவ இந்தக் கோமல்.

தமது யாழ். விஜயத்தின் போது கோமல் வெளியிட்ட கருத்துக்கள் எமது கவனத்திற்குரிய வையாக உள்ளன.

**"இந்திய கலை இலக்கியப் படைப்புகள் வெறும் பொழுதுபோக்குத்தனம் கொண்டவையாகவும் நுகர்வுப் பொருளாதார நோக்கங்கங்களை பூர்த்திசெய்யும் இலக்குக் கொண்டவையாகவும் உள்ளன. அந்த வேளையில் ஈழத்து இலக்கியங்கள் அடுத்த நூற்றாண்டில் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


+ கவிதையில், நிச்சயமாக இந்தப் போராட்டத்தின் சாராம்சத் தன்மைகள் கலாபூர்வமாகத் தெரிய வருகிறது. இது 80-களிலேயே தொடங்கிவிட்டது. மற்றைய இலக்கிய வடிவங்களான சிறுகதை, நாவல், நாடகம் போன்ற வகைகளில் அது பிந்துகிறது. செம்மையாக உள்வாங்கிக் கொள்ளப்படவில்லை என்றுதான் சொல்லவேண்டும். இதற்குக் காரணம்: இங்கே உள்ள இலக்கிய வடிவங்கள் எல்லாவற்றிலும் Fiction என்கிற புனைகதை ஒரு ஆய்வு வடிவம் கொண்ட இலக்கியமாகும். சமூக சூழலை அது தெளிவாகவே ஆராய வேண்டும். விமரிசன ரீதியான தெளிவும், சமூகத்தைப் பகுப்பாய்வு செய்கின்ற தன்மையும் புனைகதைகளுக்கு உண்டு. ஆகவே இந்தப் பகுப்பாய்வுத் தன்மையுடன் சமூகத்தை ஒட்டுமொத்தமாகப் பார்க்கின்ற பார்வையில் நமது படைப்பாளர்கள் சற்றுப் பின்தங்கி இருக்கிறார்கள். ஆனால் அப்படிப் பார்ப்பதற்கான தடயங்கள் தொடங்கி விட்டன.

*** இந்தப் போராட்டத்தினுடைய முடிவைப் பற்றி ஏற்படுகின்ற குழப்பம், அல்லது இந்தப் போராட்டத்திலுள்ள நிச்சயமற்ற தன்மை, கருத்துத் தளங்களை கணிப்பதற்குள்ள முரண்பாடுகள், இவைகள் கூட படைப்புக்குத் தடையாக இருக்கலாம் அல்லாவா?**

+ இவைகளை விட இந்தப் போராட்டம் துரிதப் படுத்தப்பட்ட முறை, இன்றைக்கு அது எடுத்திருக்கும் வடிவம், 80-ளிலிருந்து இந்தப் பத்து வருடங்களில் இங்கே நடந்துள்ள யுகமாற்றம் இவைகளை முற்றாக உள்வாங்கி, இவற்றிற்கான காரண காரியமான தொடர்புகளைக் கண்டுபிடித்து எழுதுவது என்பது எளிமையான விஷயமல்ல. அப்படி எழுதுபவன் உயர்ந்தமட்ட எழுத்தாளனாகத்தான் இருப்பான். ஆனால் அப்படியான எழுத்துக்கள் வரத் தொடங்கி விட்டன.

*** அப்படிப்பட்ட எழுத்துக்கு ஏதாவது எடுத்துக்காட்டு கூறமுடியுமா?**

+ முடியும். நான் அடிக்கடி சொல்லுவது இந்த ரஞ்சகுமார் என்கிற பையனுடைய சிறுகதைகள். நிச்சயமாக அவை இந்தக் காலகட்டத்தின் மாற்றங்களை அற்புதமாக எடுத்துக்காட்டுகிற வகையில் உள்ளது. கோசலை என்கிற கதையை வாசியுங்கள். இந்தப் போராட்டம் நடத்தியிருக்கிற இட, இனப் பெயர்வுகள், உளமாற்றங்கள் எல்லாவற்றையும் காட்டி, போராட்டத்தைத் தவிர வேறு ஒன்றும் இல்லாததான நிலையும் அக்கதையில் காணலாம்.

*** நாவல்கள் ஏதும் அப்படி வந்திருக்கிறதா?**

+ அந்தக் கட்டம் நாவலுக்கு வருவதற்கு இன்னும் நாளாகலாம். இரண்டுவித எழுத்தாளர்கள் இந்தக் கண்ணோட்டத்திலிருந்து எழுதுகிறார்கள். முதலில் ஏற்கனவே எழுதிக்கொண்டிருக்கும் முருகையன் போன்ற கவிஞர்கள், செங்கை ஆழியான், ஜீவா போன்றவர்கள், இன்னொரு நிலையிலிருந்து பார்த்து எழுதுவது என்கிற தன்மையும் இருக்கிறது. மற்றவர்கள் இந்தப் போராட்டங்களின் பாதிப்பாக வெளிப்படுகிற இயக்க எழுத்தாளர்கள். இவர்களின் மூலம் யாழ்ப்பாண இலக்கியம் மாற்றத்தை நோக்கிச் செல்கிறது.

*** இலக்கியம் தவிர இந்தப் போராட்டம் யாழ்ப்பாண சமூகத்தில் எந்த மாற்றங்களையோ, அல்லது அறிகுறிகளையோ கொடுத்திருக்கிறதா?**

---

**வழிகாட்டியாக உள்ளன."**

**"விடுதலை பெற்ற சமூகத்திலும் விடுதலைக்காக போராடும் சமூகத்திலும் நல்ல காத்திரமான இலக்கியங்கள் தோன்றும். ஈழத்தில் இருப்புக்காக, இலட்சியத்திற்காகப் போராடும் நிலை காணப்படுவதாலும், அனுபவத் தழும்புகளாலும் காத்திரமான இலக்கியங்கள் இங்கு உருவாகின்றன."**

**இந்திய வியாபார சஞ்சிகைகளும் 'பிரபல' இலக்கியவாதிகளும் ஈழத்து இலக்கியங்களைக் கணக்கிலெடுக்காது அலட்சியப்படுத்தும் இவ் வேளையில், குறிப்பிடத்தக்க ஒரு சாதனையாளராகிய 'கோமல்' துணிந்து இக் கருத்துக்களை வெளியிடுவது பயனுள்ளதும் பாராட்டுக்குரியதுமாகும்.**

வாசகர்கள் தமது சுயத்தை தாமே உணரமுடியாதபடிக்கு தடையிடும் இந்த இலக்கியப் படைப்புக்களின் பகைப்பலத்தினூடே 'கோமல்' குறிப்பிடும் மற்றுமொரு கருத்தையும் ஊன்றி அவதானிக்கவேண்டும்.

**"ஆளும் வர்க்கங்கள் தமது நலன்களைப் பாதுகாக்கும், பேணும் விதத்தில் பொதுத் தொடர்புச்சாதனங்கள் ஊடாகக் கலை என்று ஏதோ ஒன்றை வெளிப்படுத்தி வருகின்றன."**

இது முற்றிலும் உண்மை. மனிதனின் பலவீனமான பக்கத்தை அதாவது மலினமான உணர்வுகளைத் தட்டியெழுப்பி எமது நாளாந்த தேசியப் பிரச்சினைகளிலிருந்து எம்மைத் திசைதிருப்பி மழுங்கடிக்கும் இவ்விலக்கியங்களின் போக்கு ஆளும் வர்க்கத்தின் நலன் பேணவே உதவும்.

எனவே கோமல் சுவாமிநாதன் அவர்களின் கருத்தை நாம் சரியான முறையில் கிரகிப்பதன் மூலம் நச்சு இலக்கியங்களை ஒதுக்கித்தள்ளி எமது சிந்தனை மாசடைவைத் தவிர்த்துக் கொள்வோம்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

+ யாழ்ப்பாண சமுதாயம் என்பது இறுகிய அடுகமைப்பு (Heirarchical) கொண்ட சமுதாயம். இது நிலமான்ய அமைப்பைச் சேர்ந்த சமுதாயம். குறிப்பாக ஆசிய உற்பத்தி வழிமுறையிலான நிலமான்ய அமைப்பு, அத்தோடு போர்த்துகேய, ஒல்லாந்த (Holland) பிரித்தானிய சாம்ராஜ்ய அனுபவங்களைப் பெற்று தன்னைப் பலப்படுத்திக்கொண்டது. இவற்றின் ஊடாக வந்து, அந்த ஏகாதிபத்தியங்கள் கொண்டுவந்த மாற்றத்தை உள்வாங்கி, தங்களை மாற்றிக்கொள்ளாமல் இருந்த வரலாற்று அனுபவங்கள் உண்டு. ஆங்கில இலக்கியத்தை வரவேற்கும், கிறித்துவத்தை வேண்டாம் என்று சொல்லும். ஆங்கில இலக்கியம் தருகிற ஜனநாயக உரிமைகள், தன்மைகள் பற்றிய கருத்துக்களை ஏற்றுக்கொள்ளாது. அந்த அனுபவங்கள் எல்லாம் உடைந்த நிலையில்தான் இப்பொழுது வந்திருக்கிறது.


*** புலம் பெயர்ந்து சென்றவர்கள் பின்னர் நாடு திரும்பும் போது இன்னும் பல மாற்றங்கள் ஏற்படலாமில்லையா?**

+ புலம் பெயர் வாழ்க்கை கூட, அவர்கள் வாழ்க்கையின் சோகங்களை விளங்கிக் கொள்கிற அதேநேரத்தில், இந்தப் பிரச்சினைகளிலிருந்து ஒதுங்குகிற தன்மையும் அவர்கள் வாழ்க்கையில் இருக்கிறது. அங்கே போனவர்களும் அங்கே இன்னொரு யாழ்ப்பாணத்தை மறு உருவாக்கம் செய்கிறார்கள். இதே அடுக்குமுறை சமுதாயத்தை வெளிநாடுகளில் அந்தந்த நாடுகளுக்கு ஏற்றமுறையில் கட்டப் பார்க்கிறார்கள். இதில் இரண்டு விஷயங்கள் இருக்கின்றன. ஒன்று, இந்த நெருக்கடி காலகட்டத்தில் இந்த அடுக்குமுறை சமுதாயத்தை தளராமல் பிடித்துவைத்து விட்டால், எல்லா காலத்திலேயும் இந்த அமைப்பை நிறுத்தி விடலாம். அடுத்தது, இந்த சமுதாயத்திற்கு என்ன நடக்கிறது என்பதைப் பற்றிக் கவலைகொள்ளாமல், போராட்டத்தினுடைய அலைகளுடன் சேர்ந்து இதை எதிரடிக்கும் போக்கு. ஆனால் இந்தச் சமுதாயம் எங்கே மாறப்போகிறது என்றால், பெண்களின் மூலம்தான் இது மாறப் போகிறது. ஒரு சமூகவியல் மாணவன் என்ற முறையில் இந்த மாற்றத்திற்கான திறவுகோல் பெண்களிடம் இருப்பதாகக் கருதுகிறேன். பெண்கள் இயக்கங்களில் சேர்வது, போராட்டங்களில் பங்கெடுப்பது, இதன் காரணமாக, தாய்மை, குடும்பம், அதில் பெண்களின் பங்கு போன்ற கருத்துக்களில் ஒரு மாற்றம் ஏற்படும். அதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

*** இந்த மாற்றங்களெல்லாம் நாளை ஈழத்தில் ஒரு சகஜநிலை ஏற்பட்ட பிறகு தக்கவைத்துக் கொள்ளப்படுமா? அல்லது பழைய நிலைக்கே திரும்பப் போய்விடுமா?**

+ ஏறத்தாழ இந்தச் சமூகம் உருவான காலம் முதல் (16-ம் நூற்றாண்டு தொடக்கம் என்று கூறலாம்) இன்றுவரை பெரிய அளவுக்கு ஜனப்பெயர்ச்சி ஏற்பட்டது இல்லை. இப்பொழுதுதான் அந்தப் பெயர்ச்சி (Demographic Change) ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பெயர்ச்சிகள் நிச்சயமாக ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும். பெயர்ச்சி இல்லாதவரை இந்த அடுக்குமுறை அப்படியே பேணப்படும். உதாரணமாக திருநெல்வேலி (யாழ்ப்பாணம்) என்பது பாரம்பரியமாக உயர்மட்டத்தினர் வாழ்கின்ற இடம். அங்கு இப்போது இடம்பெயர்ந்தோர் நிறையப்பேர் இருக்கிறார்கள். இனி இந்த அடுக்குமுறையை பேணுவது என்பது சாத்தியமில்லாமல் போவிடும். நாளை இந்த மாற்றங்கள் அப்படியே தக்கவைத்துக் கொள்ளப்படும் என்றுதான் நினைக்கிறேன்.

*** ஆனால், இந்த ஜனப்பெயர்ச்சிகள், சாதாரண வாழ்க்கையின் சீர்குலைவுகள், அசுதித்தன்மை எல்லாமே சேர்ந்து ஐரோப்பியநாடுகளில் ஏற்பட்டது போன்ற ஒரு விரக்திக்கு இட்டுச் செல்லும் சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவா?**



+ இங்கே உள்ள முக்கியமான விஷயம் என்னவென்றால், இந்த சமூகமாற்றத்தோடு நின்று விடுகிறது. யந்திரமயமான தொழில்நுட்ப மாற்றங்கள் ஏற்பட வழியில்லை. எந்த மாற்றத்தை நாங்கள் ஏற்றுக்கொண்டாலும், அடிப்படையில் உற்பத்திமுறை பேணப்படுகிறது. ஆகவே விரக்தி போன்ற எதிர்வினைகளுக்கு இடமில்லை.

*** இந்த மாற்றங்கள் யாழப்பாணம் தவிர, மட்டக்களப்பு பகுதியிலேயோ, மலையகத்திலேயோ ஏற்பட்டிருக்கிறது என்று நீங்கள் சொல்ல முடியுமா?**

+ மட்டக்களப்பில் இன்னொரு வகையான மாற்றங்கள் ஏற்படுகின்றன. 87 வரை இங்கு நடை பெற்றது இப்போது மட்டக்களப்பில் நடைபெறுகின்றது. முதலில் 83 தொடக்கம் இளைஞர்களின் தீவிரவாதம்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


தொடங்குவதைக் கண்ட அரசாங்கம், தன் படை பலத்தைக் காட்டி அதை அடக்க முயன்றது. அதிலிருந்து ஐ.பி.கே.எஃப். வந்த 87 வரை, இங்கு காணாமற்போனவர்கள் தொகை, மாவீரர்களாக்கப் பட்டவர்களுடைய எண்ணிக்கைகள், பெற்றோரை இழந்த குழந்தைகளின் தொகைகள் அதிகமாக இருந்தது. மட்டக்களப்பில் உள்ள சில விசேஷத் தன்மைகள் காரணமாக இந்தப் பிரச்சினைகளின் தாக்கம் இப்போதுதான் அங்கு உணரப்பட்டிருக்கிறது. மலையகத்தைப் பொறுத்தவரை அங்கு இருக்க முடியாதவர்கள், வெளியேற்றப்பட்டவர்கள் வடகிழக்குப் பகுதிகளில் வந்து குடியேறினார்கள். அங்கு வந்து குடியேறிய மலையகத்தாரின் பொருளாதார அடக்கு முறைகள் தீர்ந்து விட்டது என்று எடுத்துக் கொள்ள முடியாது. ஆனால் வராமல் மலையகத்திலேயே தங்கியவர்களின் வாழ்க்கை முற்றுமுழுதுமான கட்டுப் பட்ட வாழ்க்கையாகவே உள்ளது. அங்கு உள்ள தொழிற்சங்க முறைமை, தோட்டத்தின் தொழில் முறைமை அந்த இறுக்கமான வாழ்க்கையிலிருந்து அவர்களை வெளியே விடவேயில்லை. இடதுசாரிக் கட்சிகள் கூட அங்கு பெரிய தாக்கத்தை ஏற்படுத்த வில்லை. நவீன காலத்துக்கு முற்பட்டதான ஒரு சமூக அமைப்பை ஏகாதிபத்தியம் பயன்படுத்தி, தன் தோட்டத் தொழிற்சாலைக்கு வேண்டிய சமூக அமைப்பாக மாற்றிக் கொண்டதன் விளைவு, அங்கு இன்னும் கூடச் சரியாக்கப்படவில்லை. தளர்வதற்கான அறிகுறி தென்பட்டாலும், அந்த அமைப்பு முற்றும் மாறுவதற்கான அறிகுறி இல்லை.

*** யாழ்ப்பாணியருடைய மேலாண்மைத் தன்மை, தாங்கள் உயர்ந்தவர்கள் என்ற எண்ணம் இன்னும் இருக்கிறது என்று மலையகத் தமிழர்கள் குற்றம் சாட்டுகின்றார்கள். 'அவர்கள் ஒரு சட்டாம்பிள்ளை போல நடந்து கொள்கின்றார்கள். எங்கள் பற்றி அவர்கள் கவனிக்கவில்லை' என்று குற்றஞ்சாட்டுகிறார்கள்.**

+ இது ஏற்கெனவே 'யார் இந்த யாழ்ப்பாணத் தான்?' என்ற நூல் மூலம் வற்புறுத்தி வந்த விஷயம்தான். முஸ்லிம்களையும், மலையகத் தவர்களையும் இந்தியர்கள் என்று யாழ்ப்பாணத்தவர் ஒதுக்கியதுண்டு. மட்டக்களப்புக்காரர்கள் என்று அந்த மக்களையும் ஒதுக்கினோம். கிளிநொச்சியார், வவுனியார் என்றெல்லாம் ஒதுக்கப்பட்டது உண்டு. இந்தக் குறுகிய பிரதேசத்திற்குள் சாதி பேசினோம். இது உண்மை. மேலாண்மை உணர்வு இல்லையென்று நான் சொல்ல மாட்டேன். உதாரணமாக, 1949ல் ஜி.ஜி. பொன்னம்பலம் இந்திய வம்சாவழித் தமிழர் வாக்குரிமை இழப்பதற்கான சட்டத்தை ஆதரித்து ஒட்டுப் போட்டார். ஆனால் அண்மைக்காலத்தில் துவங்கிய இந்த இளைஞர் இயக்கங்கள் அந்தக் கண்ணோட்டத்திலிருந்து விடுபட்டதாகக் காண முடிகின்றது.

*** இங்கு ஈழத்தில் கலைவடிவங்களில், குறிப்பாக நிகழ்கலைகளில் ஒரு மாற்றம் ஏற்பட்டிருப்பதை நான் பார்க்கின்றேன். இந்த மாற்றங்கள் பற்றி உங்கள் ஒட்டுமொத்தமான கணிப்பு என்ன?**

+ முக்கியமாக ஒரு விஷயத்தைச் சொல்ல வேண்டும். எங்களுக்கு இந்த இன உணர்வு ஏற்படக் காரணமாக இருந்த மொழியும், அதன் முக்கியத்து வமும், ஒரு இனத்தின் தனித்துவத்தை கலாபூர்வமாகக் காட்டுகின்ற ஒரு வளர்ச்சியில் நாடகத்திற்கு ஒரு முக்கியப் பங்கு உண்டு. ஈழத்து இலக்கியம் என்ற கோஷம் எழுந்துள்ள இந்த நேரத்தில், ஈழத்துக்கே உரியதாகக் கருதப்படும் ஒரு நாடக வடிவத்தை ஏற்றுக் கொள்வதன் மூலம் ஒரு பண்பாட்டு தனித்துவத்தை நாங்கள் முன்னெடுத்துச் செல்கின்றோம். பேராசிரியர் வித்யானந்தம் போன்றவர்களால் 1956லிருந்தே இது முன்னெடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றது. மக்கள் இதனுடைய தனித்துவத்தைக் காண வேண்டும் என்ற உந்துதல் அவரிடம் இருந்தது. சிங்கள மக்களிடையே காணப்படுகின்ற கலை வடிவங்கள் எங்களிடமிருந்து, எடுக்கப்பட்டது. அவர்கள் அப்படித்தான் நினைக்கின் றார்கள். அது உண்மையானால் அந்தக் கலை வடிவங்களை மீட்டு எடுத்து, கலை நிறைவுத் தன்மை கொடுக்க வேண்டியது முக்கியமான வேலை ஆகிறது. பேராசிரியர் வித்தியானந்தம் துவக்கி வைத்த இந்த வேலையை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் சென்றதே அவர்களுடைய மாணவர்களாகிய நாங்கள் செய்தது.

*** அடுத்த கட்டமென்றால்...?**

+ இதை மூன்று கட்டத்தில் செய்தார்கள். ஒன்று: மேலை நாட்டு நாடகங்களின் அனுபவங்கள் மூலமாகச் செய்தவர்கள், கார்த்திகேசு, சுந்தரலிங்கம் போன்றவர்கள். இரண்டாவது: மட்டக்களப்பு நாட்டுக் கூத்து வடிவங்கள் மூலமாகச் செய்தவர்கள். சி. மௌனகுரு போன்றவர்கள். மூன்றாவதாக அந்த நாடக வடிவத்தை இங்கே கொண்டு வந்து இங்குள்ள இளைஞர்களிடையே அதை ஒரு இயக்கமாகப் பரப்பி, அதன் மூலமாக இந்த மண்ணுக்குரிய கலைப் பாரம்பரியங்களை இணைத்த ஒரு நாடக வடிவத்தை மீட்டு எடுக்க வேண்டும் என்ற முயற்சிதான் குழந்தை சண்முகலிங்கம் போன்றவர்கள் செய்து வருவது. இந்த மூன்று போக்குகளுக்கும் அப்பால் நின்று தொழில்பட்டவர்தான் பாலேந்திரா. மேலைநாட்டு நாடகங்களை அப்படியே கொண்டுவந்து நடத்துவது அவர் வழி. பிரெஹ்ட், டென்னசி வில்லியம்ஸ் போன்றவர்களின் நாடகங்களை அப்படியே நடத்தினார்.

*** இவைகளைத் தவிர முக்கிய நீரோட்டமான நாடக வகைகள் இலங்கையில் இருந்தது இல்லையா?**

+ இந்தியாவில் இருக்கின்ற அளவுக்குக்கூட பாரம்பரிய நாடக மேடை இங்கு இல்லை. ஒரு பழைய மரபு உண்டு. அது தமிழ் சினிமாவின் பாதிப்பினாலும், திராவிட இயக்கங்களின் கவர்ச்சியா லும் வந்தது. ஒரு சினிமா பாணி நாடகம். சிவாஜி கணேசன் போன்றவர்களுடைய பாதிப்பினால்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



ஏற்படும் நடிப்பு. இதற்கு மாற்று அரங்கமாகத்தான் புதிய மரபு வந்தது. ஆனால் இந்த புதிய மரபே இன்று முக்கிய நீரோட்டமாக இருக்கிறது.

*** இன்றைய ஈழ நாடக அரங்கில் தனித்துவமாகத் தெரியும் போக்கு என்ன?**

+ குழந்தை சண்முகலிங்கத்தின் நாடக அரங்கு தனித்துவமாகத் தெரியும் போக்கைக் கொண்டுள்ளது. அவர் ஆரம்பத்தில் ஒயிலாக்கக்காரராக (stylist) இருந்தவர். இப்போது உள்ளடக்கத்தில் யதார்த்தவாத பாணியைச் சேர்த்து நடத்தி வருகிறார். அவருடைய அற்புதமான நாடகம் 'எந்தையும் தாயும்'. யதார்த்தவாதத்தை இந்த நாட்டு மக்களின் பண்பாட்டு வேர்களோடு இணைத்து, அதேசமயத்தில் ஒரு சர்வதேச மயத்திலிருந்து அன்னியப்படாத ஒரு அரங்கைத் தேடி எடுக்கிறார். இதுவே சண்முலிங்கத் தின் திறமை. இதற்கு எடுத்துக்காட்டு அவருடைய 'மண்சுமந்த மேனியார்' என்ற நாடகம். அதே பள்ளியைச் சேர்ந்த, ஆனால் இன்னொரு வகையான நாடகங்களைச் செய்பவர் சிதம்பரநாதன். அரிஸ்தாத் திலிய எதிரணி நாடக அரங்கை, அதாவது நடிப்பவர், பார்வையாளர் என்பது இல்லாமல், மூன்றாவது உலகநாடுகளின் தேவைகளை உள்வாங்கி அகஸ்டோ போல் போன்றவர்கள் செய்கின்ற மாற்றங்களை இந்த மண்ணுக்கே உரிய தன்மைகளுடன் அதை அளிப்பது. இதில் சிதம்பரநாதன் தனித்தன்மையைக் காட்டுகிறார்.

*** இசைப்பாடல்களின் வளர்ச்சி பற்றிக் கூறுங்கள்..?**

+ இங்கு சினிமா என்பது ஒரு தொழிலாக வளராத காரணத்தால், இசைப்பாடல்கள் எப்போதுமே சினிமாவுடன் சம்பந்தப்பட்டதல்ல. இந்த லைட்மியூசிக் என்கிற மெல்லிசை, இயக்கங்களின் தேவை காரணமாகவும், இயக்கப்பாடல்களைப் பாடுவதற்கும் தனியாக வளர்ந்து வருகிறது. இயக்கத்தேவை மட்டுமின்றி, பொதுவாக மக்களிடம் உள்ள இன்ப துன்பங்களைச் சொல்லும் பாடல்களாகவும் மாறுகிறது. இந்த மாற்றத்தில் புதுவை இரத்தினதுரையின் பாடல்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

*** போராட்ட இயக்கங்களின் தளத்தில் கலைவடிவங்கள் நிலைகொண்டு வளரும்போது அது வெறும் போராட்ட- பிரச்சார வடிவமாக (Agit-Prop Theatre) மாறிவிடக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன அல்லவா?**

+ அந்த சாத்தியப்பாடு இல்லை. தனிமனிதர்களின் அடிப்படையான உணர்வுகளின் மூலம்தான் நாடகம் பிறக்கிறது. இப்போது உள்ள சூழ்நிலையில் நம்பிக்கையூட்டும் வளர்ச்சியாகத்தான் இதனைப் பார்க்கிறேன்.

*** தமிழகத்தில் இதுபோன்ற நவீன சோதனை முயற்சிகள் நடைபெறுகின்றன. அவற்றில் சிலவற்றை நீங்கள் பார்த்திருக்கக்கூடும். அவைபற்றி உங்கள் கணிப்பு என்ன?**

+ தமிழகத்தில், சிலநேரங்களில், பாரம்பரிய மீட்டெடுப்பு என்பதை மக்கள் சூழ்நிலையிலிருந்து பிரித்தெடுக்கிற மீட்டெடுப்பாகவே நான் பார்க்கிறேன். மக்களிடமிருந்து வெளியே எடுத்த ரசாயனச் சாலையின் பரிசோதனைப் பொருளாக நாடகங்கள் மாறிவிடுகின்றன. இங்கு அப்படி இல்லை. மக்க ளுடைய வடிவங்கள் மக்களோடு இணைந்தே செயல்படுகின்றன.

*** இப்போது உள்ள தமிழக இலக்கியங்கள் பற்றி என்ன விமரிசனம் செய்துகொண்டிருக்கிறீர்கள்?**

+ காலச்சுவடு, சுபமங்களா மற்றும் சிற்றிதழ் நிலைகளிலிருந்து பார்க்கும் போது, தமிழ் புனைக்கதை 1980 முதல் புதிய கட்டத்தை எட்டியிருக்கின்றது என்றே நான் நினைக்கிறேன். எழுத்தாளன் சமூக யதார்த்தங்களை கூர்ந்து நோக்குபவனாக மட்டுமல்லா மல், சமூகத்தில் இணைந்து செயற்படுபவனாக இருக்கிறான். பிரபஞ்சன், தோப்பில் முகமதுமீரான் போன்றவர்களிடம் இவற்றைப் பார்க்கலாம். யாருடைய நோக்கிலிருந்து இப்போது நாவல்கள் படைக்கப்படுகின்றன என்பதும் முக்கியமாகிறது. உதாரணமாக ஜெயமோகனின் நாகம் யாருடைய பார்வையிலிருந்து பார்க்கப்படுகிறது என்று பார்க்கும் போது, அவரும் ஒரு பாத்திரம் என்பதை உணருகிறோம். இதனால் எழுத்து மொழியும் மாறுகிறது. ஒழுங்கான வாக்கியம் என்பது ஒழுங்கான சிந்தனை இருந்தாலே வரும். புனைகதைகளில் முதல் தடவையாக Language of Fiction இருக்கிறது. இது புதுமையானது. அதேபோல மரபுக்கவிதையில் காணப்படாத படிமச் செழிப்பை புதுக்கவிதைகளில் காண்கிறேன்.

*** விமரிசனங்கள் பற்றி...?**

+ புதிய விமரிசனங்கள் என்பது நவீன இலக்கியங்களோடு மட்டுமே பிணையப்பட்டதாக இருந்தது. இப்போது புதிய விமரிசனம் (New Criticism) முழுத்தமிழ் இலக்கயத்தையுமே பாதிக்கிறது. மார்க்ஸ், கேசவன் போன்றவர்கள் நவீன சிறுகதை பற்றியும் விமரிசிப்பார்கள், பள்ளு இலக்கியம் பற்றியும் விமரிசிப்பார்கள்.

*** இந்தப் புதிய விமரிசனங்களில் இப்போது வெகுவாகப் பேசப்படும் அமைப்பியல் வாதம் பற்றி (Structuralism) என்ன நினைக்கிறீர்கள்?**

+ அமைப்பியல்வாதம் போன்று மேலைநாடுகளி லிருந்து ஒரு கொள்கை வரும்போது, அதை இலக்கியத்திற்குச் சாட்டிப் பார்க்கின்றபோது, அதனை நவ-வேட்கை வாதமாக (Avant gaurdist) பார்க்கின்ற இயல்பு இருக்கின்றது. ஆனால் அதிலிருந்து கணிசமான லாபத்தைப் பெறவேண்டுமானால், இந்தக் கொள்கை அது தோன்றிய போது எந்தந்த விஷயங்களுக்குப்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


பதில் சொல்வதற்காகத் தோன்றிற்று, அதனுடைய அமைப்புகள் யாவை, அதன் வரலாற்று தன்மை என்ன, என்னென்ன வேறுபாடுகளை எடுத்தது என்பது போன்ற விஷயங்கள் இன்னும் சரியான முறையில் எங்களுக்கு தெளிவாக்கப்படவில்லை என்று சொல்வேன். ஏனென்றால் இவைகளெல்லாம் புதிய சிந்தனை மரபு. இந்தச் சிந்தனை மரபுகள் ஆங்கிலத்திற்குள்ளாகவும் வரவில்லை. பிரான்சிலும், மேலைக்கண்ட நாடுகளிலும் தோன்றியது. 70-களில்தான் ஆங்கிலத்திற்கே வந்தது. இவற்றையெல்லாம் நாங்கள் உள்வாங்கி இருக்கிறோமா என்பதுதான் பிரச்சினை. இந்த அமைப்பியல்வாதம் அடிப்படையாக பிரதியை (Text) முதன்மைப்படுத்துகிற வாதம். இதில்தான் `Author is dead' என்கிற நிலை வருகிறது. இந்த வாதத்தின் தொடக்கம் இவர்களுக்கு முந்திய ரஷ்ய வடிவ வாதிகளுக்குள்ளே (Russian Formalist) இருந்தது. மற்றது ஆசிரியனை முன்னிறுத்தும் வாதம். (Author-oriented) மூன்றாவது வாசகனை முன்னிறுத்தும் வாதம். (Reader-oriented) அர்த்தம் என்பது அதன் பிரதிக்குள் இருப்பதல்ல. வாசிப்பவனுக்கு ஏற்படுவதே என்ற



‘துரதிருஷ்டவசமாக சிங்களவர்கள் ‘இலங்கை என்னுடைய நாடு’ என்று கூறுகிற இனவாதக் குரல், இந்த நாட்டுடன் நாங்கள் இணைந்து கொள்வதற்கான சந்தர்ப்பங்களைத் தகர்த்து விடுகிறது. இது எங்கள் நாடு என்ற நினைப்பை சிங்கள தேசியவாதம் எங்களுக்குக் கொடுக்கவில்லை.’

வாதம். இதனிடையே மார்க்சிய சிந்தனைகள், கிராம்ஷிய விளக்கங்கள், அதன்பின் வந்த பல சிந்தனைகள் எல்லாமே இருக்கின்றன. வரலாற்றுப் பின்னணியில்தான் இது ஆராயப்படவேண்டும். இன்னொன்று எல்லாமே Strucure-oriented என்றால், இதில் மனிதனுக்கு இடமில்லையா? இது மனிதமற்ற (dehumanised) போக்கு ஆகாதா? என்ற கேள்விகள் எழுகின்றன. ஒரு வரலாற்று ரீதியான விமரிசனத்தை வளர்த்தெடுக்காமல், மார்க்சிய அணுகுமுறையைக் கையாளாமல் இதை நாங்கள் எந்த இடத்தில் வைப்பது என்பது எங்களுக்கு ஒரு சிக்கல்.

*** பின்நவீனத்துவம் பற்றி** (Post modernism)?

+ பின்-நவீனத்துவம் இலக்கிய அடிப்படை மட்டுமல்ல. ஓவியத்தையும், நுண்கலைத்துறைகளையும் உள்ளடக்கியது. எங்கள் சமூகம், தமிழ் நாட்டில் உள்ள சமூகம், ஏன் இந்திய சமூகம் எந்த அளவுக்கு நவீனத்துவத்திலிருந்து முன்னே போய்விட்டோம்? நவீனகாலம் என்று எதைக் கருதுகிறோம்? நவீனத்திற்கு முந்தைய காலத்திலிருந்து நவீன காலத்தை எந்த இடத்தில் பிரிக்கிறோம்? நவீனம் என்று சொல்வது தொழிலிநுட்பப் புரட்சியின் அடிப்படையில் எழுந்ததா? வெகுஜன ஊடகம் வழியாக வந்ததா? என்பதைப் பற்றி எல்லாம் ஆராயாமல், அவர்கள் சொல்லுகிறார்கள் என்பதற்காக ஏற்றுக்கொள்ள முடியாது. இந்தப் புதிய சிந்தனைகளை தமிழ்நாட்டின் வேர்களுக்கூடாக இந்தியப் பண்பாட்டின் வேர்களுக்கூடாகப் பார்க்க வேண்டும்.

*** இந்தப் புதிய விமரிசன அணுகுமுறைகள் வருவதற்கு முன்பு க.நா.சு... செல்லப்பா போன்றவர்கள் சுவைசார்ந்த அணுகுமுறையை வளர்த்தார்களே, அந்த விமரிசனங்களின் எதிர்காலம், அல்லது அதன் தற்கால ஏற்புடமை பற்றிக் கூறமுடியுமா?**

+ இந்த சுவைசார்ந்த அணுகுமுறை என்பது, இரண்டு விஷயத்தை அடிப்படையாகக் கொண்டது. ஒன்று, கலை கலைக்காகவே என்ற நீரார்ந்தவாதம் அதற்குள் பொதிந்து கிடக்கிறது. பிற்காலத்தில் அவர்களும் மாறியிருக்கிறார்கள். க.நா.சு. போன்றவர்களிடம் அதை நான் கண்டேன். இரண்டாவது, இலக்கியமென்பது சுவைக்கின்றதற்கான பொருள்தான் என்ற வாதம். இவை ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என்று எல்லோருக்கும் தெரியும். நம்முடைய பாரம்பரிய சமூகத்தில் Patron-Client Relationship. (புரவலர்-புலவர் என்ற உறவுமுறை) இந்த உறவுமுறையில்தான் கலைகள் எல்லாமே வளர்ந்து வந்திருக்கின்றன இந்த அடிப்படையில் புலவர்க்குக் கிடைப்பது சுவை என்ற பண்பு. அது அவனுடைய ஓய்வுநேரப் பணி. இந்த ‘சுவைப்பது’ என்பது டி.கே.சி. வரை வந்திருக்கிறது. “இலக்கியமென்றால் வாழ்க்கையோடு சம்பந்தப்படாதது. ரசித்துவிட்டுப் போகவேண்டியது. எப்படி ஒரு நடிகனை களிப்பூட்டுபவன் என்று நினைக்கின்றோமோ, அதேபோல எழுத்தாளனும் ஒரு களிப்பூட்டுபவன். அவன் சமூக மாற்றத்திற்கு ஒரு கருவி அல்ல.” என்பது போன்ற சுவையின் அடிப்படையிலான விமரிசனங்களுக்கு எதிர்காலம் இல்லை.

**(தொடர்ச்சி 26ம் பக்கம்)**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





# உழைக்கும் கரங்கள் இறுகப் பிணையட்டும்




## மேதினம்

அதிகார வர்க்கங்களின் பிரச்சார
கோஷங்கள் நிறைந்து
ஒடுக்கப்பட்டோரின் குரல்வளையை
ஏறிமிதித்து ஓங்குகையில்
தமிழீழ தேசம், தடைகள் தகர்த்து
ஒன்றுபட்ட மக்களின் கரங்கள் பிணைத்து
விடுக்கும் அறைகூவலை,
யுகப் புரட்சிக்கான போர்முரசை
எதிரொலிப்பதாய் அமைந்த
புலம்பெயர்ந்த தமிழரின் உணர்வுபூர்வமான
ஒன்றிணைவு இது.



www.tamileelamarchive.com



# அன்னை பூபதி
## ஓசையின்றி எழுப்பிவிட்ட
## புரட்சிப் புயல்



சரித்திரமாய்ப் போகாமல்
தமிழர் உணர்வுகளில் உருவேற்றி
எழுச்சிப் பாடல்களாய்
நாடகமாய்
நாட்டியமாய்
பிறந்த மண்ணுக்கு அழைத்துச்
செல்லும்
நிகழ்வின் நிகழ்வாய்
அகதியெனத் திரியும் நாடோடி
வாழ்வின் அவலங்களுக்குள்ளும்
நிலம் பிரிந்த எமது மக்களின்
நெஞ்சங்களில்
அன்னை பூபதி எனும் புயல்
புலம்பெயர்ந்தாலும் எமக்கென
ஒரு நிலம் வேண்டும்
என்று முழங்குகிறது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



23ம் பக்கத் தொடர்ச்சி)

*** இந்தியா போன்ற, ஒரு பன்முகப் பண்பாடு அமைப்பைக் கொண்ட ஒரு நாட்டில் ஒரு தேசியக் கலை, தேசிய நாடகம், தேசிய இலக்கியம் என்பது இருக்கமுடியுமா? எது தேசியம் என்று அடையாளம் காட்டப்படுகிறது?**

+ இந்த தேசியம் என்ற கருத்தே ஒரு ஐரோப்பியக் கருத்தாகத்தான் நமக்கு வந்தது. அங்கே 16-ம் நூற்றாண்டுவரை ஒரு தேசியம், ஒரு அரசமைப்பு என்று இருந்தது. ஆனால், அண்மைக் காலங்களில் இந்த நிலைமைகள் மாறி பன்முகப் பண்பாட்டு வாதம் (Multi-Culturalism) பிரதான அம்சமாக மாறிவிட்டிருக் கிறது. அப்படி வரும்போது தேசியம் என்பது ஒரு தனி வடிவத்தைப் பிரதிபலிக்காமல், வடிவங்களின் தொகுப்பாக பிரதிபலிப்பதாகச் சொல்லலாம். இந்தப் போக்கை ஆஸ்திரேலியா, நார்வே, கனடா போன்ற நாடுகளில் பார்க்கலாம். இந்தியா போன்ற ஒரு நாடு அரசியல் சாராத ஒரு தேசிய பண்பாட்டுக் கூட்டு என்பதைப் பலர் ஏற்றுக்கொள்வதில்லை. ஒரு காலத்தில் சமஸ்கிருத மொழிமூலம் இந்தப் பண்பாட்டுத் தொகுப்பின் முழுமை இருந்திருக்கலாம். அதை நாம் இல்லையென்று சொல்லமுடியாது. தேசியம் என்ற சொல்லுக்கான பொருள் மாறிக் கொண்டிருக்கிறது. அது பன்முகப் பண்பாட்டு வாதமாக மாறிவரும்போது தேசிய இலக்கியம் என்பதை ஒரே வடிவமாக ஏற்றுக்கொள்வது பிரச்சினையாக இருக்கிறது.

*** இது விஷயமாக இலங்கையில் நீங்கள் சந்தித்த பிரச்சினை என்ன?**

+ இங்கே இந்த நிலை கொஞ்சம் மாறுபட்டு இருக்கிறது. துரதிருஷ்டவசமாக சிங்களவர்கள் 'இலங்கை என்னுடைய நாடு' என்று கூறுகிற இனவாதக் குரல், இந்த நாட்டுடன் நாங்கள் இணைந்துகொள்வதற்கான சந்தர்ப்பங்களைத் தகர்த்து விடுகிறது. இது எங்கள் நாடு என்ற நினைப்பை சிங்கள தேசியவாதம் எங்களுக்குக் கொடுக்கவில்லை. எங்களுக்கு 'தேசியம்' என்பதில் உள்ள பிரச்சினை அதுதான்.

# சிறுவர் உழைப்பும் அமெரிக்கக் கனவும்

**"சிறுவர் உழைப்பு அமெரிக்க வாழ்க்கையிலிருந்து பெருமளவிற்கு மறைந்து சென்றிருந்தது. ஆனால் கடந்த தசாப்த காலத்தில் அது மீண்டும் எழுச்சிகண்டு, பல்கிப் பெருகி வந்துள்ளதைக் காணமுடிகிறது. சமஷ்டி அரசின் புள்ளிவிபரத் தரவுகளின் பிரகாரம் 14 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்ட சுமார் 40 இலட்சம் சிறுபிள்ளைகள் இப்பொழுது சட்டபூர்வமாகத் தொழிலில் அமர்த்தப்பட்டுள்ளார்கள். அதேவேளையில் சுமார் 20 இலட்சம் சிறுவர்கள் சட்டவிரோதமான வேலைகளில் ஈடுபட்டு வருவதாக மதிப்பிடப்பட்டுள்ளது." இவ்வாறு இன்டர்நாஷனல் ஹெரால்ட் டிரிபியூன் குறிப்பிட்டுள்ளது.**

**இதுவரை காலமும் சிறுவர்களை வேலையில் ஈடுபடுத்துவது என்பது மூன்றாவது மண்டல நாடுகளுக்கு மட்டுமே சொந்தமான பிரச்சினை ஒன்றாகக் கருதப்பட்டு வந்துள்ளது. வளர்ச்சிகண்ட முதலாளித்துவ உலகம் இந்த விடயம் குறித்து அவ்வளவாக அலட்டிக்கொள்ள வேண்டிய தேவை இருக்கவில்லை. ஆனால் இன்று அமெரிக்கா போன்ற ஒரு வல்லமை மிக்க நாட்டில் சிறுபிள்ளைகளை வேலைகளில் அமர்த்தி, அவர்களைச் சுரண்டும் நடைமுறை வியாபித்து வருவதானது முதலாளித்துவ உலகின் கட்டமைப்பு ரீதியான நெருக்கடியின் வெளிப்பாடுகளை மிகவும் தெட்டத்தெளிவாக எடுத்துக்காட்டுவதாக உள்ளது. அமெரிக்காவின் கனவு சிதைந்து வருவதனையும் முதலாவது உலகின் சில பாகங்கள் மூன்றாவது உலகமாகி வருவதனையும் இன்று நாம் காண்கிறோம். உலகின் தன்னிகரில்லாத தனியொரு வல்லரசாகக் கருதப்பட்ட நாட்டிலுங்கூட இந்த அவலம் தோன்றியுள்ளது. பெருமளவிற்குத் தம்பட்டமடிக்கப்பட்ட புதிய தாராளவாதத்தின் வெற்றி இறுதியில் ஒரு போலி வெற்றியாக இருக்கமுடியும் என்ற சமிக்ஞையையும் இது காட்டுகிறது.**

நன்றி: 'பொருளாதார நோக்கு' யூன் யூலை 1992

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# முல்லைத்தீவு மாவட்டத்தின் இன்றைய சமூக, பொருளாதார நிலை

1978ம் ஆண்டு உருவாக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டம் கடந்த பல ஆண்டுகளாக சகலதுறைகளிலும் வளர்ச்சி அடைந்து வந்தது. குறிப்பாக விவசாயம், மீன்பிடி, கல்வி, போக்குவரத்து, கலாச்சாரம் போன்ற துறைகளைக் குறிப்பிடலாம். எனினும் தற்போது கொடுமையான இராணுவ நடவடிக்கைகள் இம்மாவட்டத்தின் வளர்ச்சியை பின்நோக்கித் தள்ளியுள்ளது.

விவசாயமும் மீன்பிடியுமே இப்பகுதி மக்களின் வாழ்க்கைத் தொழிலாயுள்ளது. ஏரிகளையும் 20 பிரதான குளங்களையும் ஏராளமான கிராமக் குளங்களையும் உள்ளடக்கிய இம் மாவட்டம் 1966 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பைக் கொண்டுள்ளது.

## விவசாயம்

78 வீதத்தினர் விவசாயத்தில் ஈடுபடுபவர்களாகும். இம் மாவட்டத்தின் குறிப்பிட்ட பிரதேசங்களில் மக்கள் இராணுவ நடவடிக்கைகளுக்கு அஞ்சி விளை நிலப்பரப்பைக் குறைத்தோ, முற்றாகக் கைவிட்டோ பயிரிடாது இருப்பதை கடந்த சில வருடங்களாக அவதானிக்கலாம். மாவட்டம் முழுவதும் பரவலாக தற்போதைய நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டாலும் கொக்குத்தொடுவாய், குமுழமுனை, முள்ளியவளை கமநலசேவைப் பிரிவே மிக அதிகமாக பாதிக்கப்பட்ட பிரதேசமாகும். மாவட்டத்தின் 13 வீதமான நிலப்பரப்பில் பயிர்ச்செய்கை நடந்தது. இதில் 62 வீதம் நெற்பயிர். 15 வீதம் உப உணவு. மிகுதி காய்கறி, பழமரங்கள், தென்னை என்பனவாகும். ஆனால் தற்போது ஏற்பட்ட இராணுவ அழுத்தங்களும் உரத்தட்டுப்பாடு, எரிபொருள் விலையேற்றம், பணவீக்கம் ஏற்பட்டமை என்பன விவசாயத்துறையை நன்கு பாதித்துள்ளது. பயிர்ச்செய்கை நிலப்பரப்பில் சுமார் 70 வீதத்திற்கு மேற்பட்ட நிலப்பரப்பு இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டுள்ளது.

## நீர்ப்பாசனம்

5556 கெக்ரேயர் பிரதேசத்திற்குப் பயன்தரும் 20 பிரதான குளங்கள் உள்ளன. 1993 கெக்ரேயர் பிரதேசத்திற்கு பயன்தரும் 174 சிறிய குளங்களும் இயங்காத சிறிய குளங்களும் உள்ளன. அநேகமான இவ்வகைக் குளங்கள் திருத்திப் புனரமைக்க வேண்டியுள்ளன. தேசிய மட்டத்தில் உருவாக்கப்பட்டுள்ள பெரிய, சிறிய, இயங்காத, சீரழிந்த குளங்களை திருத்தி புனரமைத்து நவீனமயப்படுத்தும் திட்டமானது நீர்ப்பாசனப் பிரதேசப் பரப்பளவை அதிகரித்து கூடியளவு பயிர்ச்செய்கைகளையும் விளைச்சலையும் மாவட்டத்திற்கு பெற்றுத் தரவுதவும். தற்போதைய நிலையில் பெரும்பாலான பெரிய, சிறிய குளங்கள் உடைந்தும் சீரழிந்தும் திட்டமிடப்பட்ட பிரயோகத்திற்கு மிகக் குறைவான பாவனையையே தருகின்றன. பயிர் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் நீர்ப்பாசனப் பிரதேசம் அதிகரிப்பதற்கு புனரமைப்பு, நவீனமயப்படுத்தல் 1990ஆம் ஆண்டுக்குப்பின் செயல்இழந்துள்ளன.

## குடிநீர் விநியோகம்

மாவட்டத்தில் குடிநீருக்காக ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனமும் றெட்பானா நிறுவனமும் இணைந்து அமைத்த குழாய்க் கிணறுகள் பல இன்று செயலிழந்துள்ளன.

**சி. கணேசமூர்த்தி (எம்.ஏ)**

## தெங்கு

தெங்கு பயிர்ச்செய்கை சுமார் 2800 கெக்ரேயராக இருந்தது. ஆனால் முல்லைத்தீவு நகரம், சிலாவத்தை அளம்பில், கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகளால் அங்கு தெங்கு உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

## பனை

இம்மாவட்டத்தில் 2000 கெக்ரேயர் வரை பரந்து 300,000 பனை மரங்கள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. வடக்கில் 70 இலட்சம் பனைகளும் பயன் கொடுக்கக்கூடிய நிலையில் உள்ளன. இதுவரை காலமும் கள்ளினை உற்பத்தி செய்து வந்த சங்கங்கள் இப்போது ஏனைய உணவுப் பொருட்களையும் உற்பத்தி செய்யுமளவுக்கு முன்னேறியுள்ளமை எமது பொருள்வளம் சிறக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. ஆனால் கூடிய பனை உற்பத்திப் பிரதேசம் அண்மைய நடவடிக்கையால் பாதிக்கப்பட்டு இருந்தும் முன்னேற்றம் அடைந்து வருவது பாராட்டுதற்குரியது. கள்ளை உற்பத்தி செய்யாது பதநீர் ஆக்கவேண்டும். அவ்வாறு அமையின் அநேகமாக பனையின் ஒவ்வொரு பகுதியுமே வர்த்தக ரீதியில் பெறுமானமுள்ளனவாக அமையும்.

## கடற்றொழில்

முல்லைத்தீவு மாவட்ட மக்களில் ஒரு பகுதி சார் மக்களின் பிரதான பொருளாதார நடவடிக்கையாக கடற்றொழில் அமைகிறது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

வடக்கே கொக்குத்தொடுவாயிலிருந்து தெற்கே நல்லதண்ணித் தொடுவாய் என்ற மையம் வரை 24 மையங்களை கடற்கரையோரம் சார்ந்து காணலாம். இவற்றுள் ஐந்து மையங்கள் முல்லைத்தீவு நகர எல்லைக்குள் வருகின்றன. இவ் ஐந்து மையங்களும் இராணுவ ஆக்கிரமிப்புக்குள் இருக்கின்றன. ஏனைய முள்ளிவாய்க்கால், அரிசல், சிலாவத்தை, நாயாறு, கொக்குத் தொடுவாய், கொக்குளாய், முகத்து வாரம் மையப்பகுதிகளும் பாதிக்கப் பட்டுள்ளன. ஏறத்தாழ 30 மீன்பிடிக் கிராமங்களைக் கொண்டது முல்லைத்தீவு மாவட்டமாகும். ஆனால் பிடிக்கப்படும் மீனை ஐஸ் இட்டுப் பாதுகாக்க முடியாத நிலையில் உள்ளது. கடற்பிரதேசம் பாவிக்க முடியாதவாறு இன்று சிறீலங்கா அரசால் அமுல்படுத்தப் பட்டுள்ள தடைச்சட்டம் முல்லைத் தீவு மாவட்டம் மட்டுமல்ல, வடக்கு கிழக்குப் பிரதேசத்தையே பாதித் துள்ளது.

## கால்நடை

முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 51025 கால்நடைகள் இருந்த போதிலும் இன்று 60 வீதமான கால்நடைகள் இராணுவ நடவடிக்கையினால் பாதிக்கப் பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டம் முழுவதும் 55 வீதமான கால் நடைகளைப் பாதித்தது. இன்றைய நெருக்கடி நிலையால் கால்நடைகளை ஒழுங்காகப் பராமரிக்க முடியவில்லை. அரசின் பொருளாதாரத் தடை மக்களை வாட்டுவதால் இறைச்சிக்காக கால்நடைகளை விற்கத் தொடங்கினார்கள். திருகோணமலை மாவட்ட மக்கள் பலர் அகதிகளாக முல்லைத்தீவு மாவட்டத்தில தங்கியுள்ளனர். இவர்களில் பலர் கால்நடைகளை கைவிட்டு வந்துள்ளனர். சிலர் அங்கிருந்த கால்நடைகள் முழுவதையுமோ அல்லது அதில் ஒரு பகுதியையோ வசதிக்கேற்றவாறு கொண்டுவந்து சேர்த்துள்ளனர். ஆனால் ஒழுங்கான பராமரிப்பு இன்மையால் மாடுகள் கட்டாக் காலியாக மாறியுள்ள நிலையைக் காணமுடிகிறது.

## கைத்தொழில்

கைத்தொழில் துறையில் முல்லைமாவட்டம் பின்தங்கியே இருந்துள்ளது. ஒரேயொரு தொழிற்சாலைக் கைத்தொழிலான ஓட்டு சுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை பாதிக்கப் பட்டுள்ளமையினால் பலர் தொழில்வாய்ப்பை இழந்துள்ளனர். முல்லை சோப் என்ற பெயரில் சோப் தொழிற்சாலை முள்ளியவளையில் இயங்கிவந்தது. அதுவும் இடையில் கைவிடப்பட்டது. இன்று தும்புத் தொழிற்சாலை விருத்தி பெற்று வருகின்ற ஒன்றாக

# கோப்பாய் உவர் நிலத்தில் மண்நீர் ஆய்வுகள்

கோப்பாய் வெளியில் உவர் நிலப் பிரதேசத்தில் பரீட்சார்த்த நெற்செய்கையில் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஏனைய நிறுவனங்களுடனும் விவசாயிகளுடனும் இணைந்து ஈடுபட்டு வெற்றி கண்டுள்ளது யாவரும் அறிந்ததே.

இந்தப் பிரதேசத்தில் மண்நீர் பற்றிய ஆய்வுகள் நடைபெறுவது இந்தப் பிரதேசத்தை முழுமையாக பயன்பாட்டுக்குக் கொண்டுவர அவசியமாகும். தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் விவசாய ஆராய்ச்சி நிலையமும் இணைந்து தொடராக இவ் ஆய்வுகளை மேற்கொண்டு வருவது குறிப்பிடத் தக்கது. இரண்டு கிழமைக்கு ஒரு தடவை மண் மாதிரிகளும், மண் அடியில் உள்ள நீர் மாதிரிகளும் எடுத்து ஆய்வுசெய்யப்படுகின்றன. சுமார் இருபது வருடங்களில் நெல் வேளாண்மை செய்யப்பட்ட இப் பிரதேசம் உவராக மாறியதற்கு பல காரணங்கள் இருக்கலாம்.

வயல் சொந்தக்காரர் அதிக காலமாக இந்நிலங்களை நன்கு உழுது பராமரிக்காமல் விட்டதாலும் நிலங்கள் பழுதடைந்து இருக்கலாம். மேலும் கடல் நீர் உட்புகுந்தமையினாலும் மேட்டுநிலங்களில் தொட்டம் தொட்டமாக காணப்படும் உப்புக்கள் கரைந்து சென்று இப்பள்ளமான இடங்களை அடைந்தமையாலும் கோடை காலங்களில் மண்ணின் மேற்பரப்பிலிருந்து நீர் ஆவியாகும் போது கீழ்உள்ள உப்புக்கள் மண்ணின் மேற்பரப்பினை அடைவதனாலும் உவர் தன்மை ஏற்பட்டிருக்கலாம்.

இவ்விதமான நிலங்களில் பயிர் செய்வதற்கு ஏற்ற நன்னீரினை பாத்திகளில் தேக்கி வைத்து அம்மண்ணில் உள்ள உப்புக்களைகீழே கழுவிச் செல்லக்கூடியதாக பாத்திகளை அமைத்தல் வேண்டும்.

மேலும் கூடுதலான சேதனப் பசளைகளை புதைத்து நிலத்தைப் பண்படுத்தவேண்டும். அத்துடன் உவரை சகிக்கக்கூடிய பயிர் வகைகளை செய்யவேண்டும். உதாரணமாக நெல்லில் பொக்காளி, உவர்கறுப்பன் போன்ற நெல்லினங்கள் எமது பிரதேசத்தில் உவர் நிலங்களில் செழித்து வளர்கின்றன. புதிய அப 420 போன்ற நெல்லினங்கள் சில உவரை சகித்து வளரக்கூடியன.

இப்பிரதேச மண்நீர் பற்றிய ஆய்வுகள் தொடர் நடவடிக்கையாக செய்யப்படுகின்றன. பரீட்சார்த்த நெற்செய்கை வெற்றியளித்துள்ளமையினால் விளைச்சல் அதிகரிக்கவும் முழுப்பிரதேசத்தையும் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தவும் வேண்டிய ஆய்வுகளை விவசாய ஆராய்ச்சி நிலையம் துரித நிலையில் மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


> **வடபுலத்தில் சிங்களப் படையின் பலம்**
>
> சிறீலங்கா அரசினது படைபலத்தில் ஏறத்தாள முக்கால் பங்கு வடபுலத்திலேயே குவித்துவைக்கப்பட்டிருக்கின்றது. சுமார் ஒரு இலட்சம் ஆட்தொகையைக் கொண்ட சிங்கள இராணுவத்தில் 70000 பேர் அதற்குரிய ஆயுத தளபாடங்களுடன் வடபுலத்திலேயே நிறுத்திவைக்கப்பட்டுள்ளனர்.

உள்ளது. தெங்கு பனம் பொருள் வடிசாலை சிறப்பாக இயங்கி வருவது பாராட்டுதற்குரியது.

## சேவை நிறுவனங்கள் மாற்றம்

முல்லைத்தீவு மாவட்டம் வர்த்தகசேவை மையம்நிறைந்த பகுதியாகக் காணப்பட்டது. இவற்றையெல்லாம் முற்றாக இழந்த மக்களாக முல்லைத்தீவு நகர மக்களைக் காணலாம். இம்மக்கள் இராணுவ ஆக்கரமிப்பால் இடம் பெயர்ந்து அகதிமுகாம்களிலும் தனியார் வீடுகளிலும் துன்பத்தின் மத்தியில் வாழ்ந்துவருகின்றனர். 1981ம் ஆண்டு தரவுப்படி 1242 வீடுகள் இருந்தன. மொத்த வீடுகளுள் 92.8 வீதமானவை வீட்டுக் கூறுகள் உள்ள வசிப்பிடங்களாகும். 7.1 வீதமான வீடுகள் கூறுகள் இல்லாதவையாகும். இவை முற்றாக 1990 ஆம் ஆண்டு நடுப்பகுதிக்குப் பின் பாதிப்படைந்தன. இந்நகர மக்கள் அதிகளவில் புதுக்குடியிருப்பு, இரணைப்பாலை, முள்ளியவளை போன்ற கிராமங்களில் இடம்பெயர்ந்து துன்பப்படும் அவலநிலை பரிதாபத்துக்குரியது. பிரதான நிர்வாக நிறுவனமான கச்சேரி, மற்றும் கல்வித் திணைக்களம், வைத்தியசாலை, கூட்டுறவுத் திணைக்களம், தபாற்கந்தோர், மீன்பிடித் திணைக்களம் புதுக்குடியிருப்பில் தற்காலிகமாக கட்டிட வசதியின்றி இயங்குகின்றன. அதனால் சேவை நிலையங்களினால் போதிய சேவையை ஆற்றமுடியவில்லை. வாகன போக்குவரத்து முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதைவிட ஒட்டுசுட்டான், அளம்பில், கொக்குத்தொடுவாய் கமநல சேவை நிலையங்கள் முற்றாக அழிந்துள்ளன.

## சமய வழிபாட்டுத் தலங்கள்

முல்லைத்தீவு வீரகத்திப் பிள்ளையார் கோயில், வட்டுவாகல் சப்தகன்னியர் கோயில் ஆகியன மக்கள் இடப் பெயர்ச்சியோடு குண்டுத்தாக்குதலாலும் அழிவடைந்துள்ளன. பிரசித்தி பெற்ற வற்றாப்பளை கண்ணகை அம்மன் கோயில் அடிக்கடி தாக்குதலுக்கு உட்பட்டுள்ளது. கடந்த 1992ஆம் ஆண்டு வற்றாப்பளை கண்ணகை அம்மன் பொங்கலில் பல பொதுமக்கள் இராணுவத்தினரின் ஷெல்தாக்குதலினால் இறந்தமையும் அங்கவீனர்களானமையும், சமயவழிபாட்டுத் தலங்களின் நிலையை எடுத்துக் காட்டுகின்றன.

பல நாட்டுக்கூத்து நாட்டுப் பாடல்கள் முதலானவற்றை வருடம் தவறாது மேடையேற்றிவந்த பல கிராமங்கள் இன்று அவற்றை அரங்கேற்றமுடியாத நிலையில் உள்ளன. சில ஏடுகளும் வரலாற்றுக் குறிப்புகளும் இராணுவ நடவடிக்கை காரணமாக அழிந்துவிட்டன. இதனால் நாட்டின் பழமை வாய்ந்த கலைகளும் கலாச்சாரமும் அழிந்து செல்கின்றன.

## கல்வி

பின்தங்கிய நிலையில் இருந்த எமது மாவட்டம் திடீரென கல்வி வளர்ச்சியில் துரித முன்னேற்றம் அடையத் தொடங்கியது. எல்லாத் துறைகளிலும் பல்கலைக்கழகப் பிரவேசம் அதிகமாகக் கிடைத்தது. முல்லைத்தீவு நகரம், புதுக்குடியிருப்பு, முள்ளியவளை, மல்லாவி, குமுழமுனை, செம்மலை போன்ற கிராமங்களில் இருந்து அதிகமானோர் பல்கலைக்கழகம் புகுந்தனர்.

1990ஆம் ஆண்டிலிருந்து இப்பிரவேசங்கள் யாவும் மிகவும் வீழ்ச்சியடைந்துள்ளது. 1990 ஆண்டுக்கு முன் 95 பாடசாலைகள் இம்மாவட்டத்தில் இயங்கிவந்தன. ஆனால் முல்லைத்தீவு நகர எல்லைக்குள் மட்டும் 5 பாடசாலைகள் பாதிக்கப்பட்டன. இவற்றில் சில புதுக்குடியிருப்பில் தற்காலிக கொட்டில் அமைத்து ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் பாடசாலைகளும் பாதிக்கப்பட்ட பாடசாலைகளும் பெரிய பாடசாலைகளுள் ஒன்றான புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம் கூட ஒன்பது கொட்டில்களைக் கொண்டு இயங்குகின்றன. பல்கலைக்கழக அனுமதியில் கலைத்துறையைப் பொறுத்தவரை வெட்டுப்புள்ளி ஏனைய வளர்ச்சியடைந்த மாவட்டங்களுடன் ஒப்பிடுமளவிற்கு அல்லது அதைவிடக் கூடுதலான அளவிற்கு உயர்ந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும். ஆயினும் இம்மாவட்டம் விஞ்ஞானத் துறையில் முன்னேற்றம் பெறாமை கவலைக்குரியது. போதிய விஞ்ஞான ஆசிரியர் இன்மை, போதிய வசதியுள்ள ஆய்வுகூடங்கள் இன்மை, நூலக வசதியின்மை, போதிய கற்பித்தல் உபகரணமின்மை போன்ற பல குறைபாடுகளே விஞ்ஞானக் கல்விக்கான வாய்ப்புக்களைக் குறைப்பதற்குரிய முக்கிய காரணிகளாகும். நீண்டகால இடைவெளிக்குப் பின் மாவட்டரீதியாக ஆரம்பப் பாடசாலை மட்டத்தில் ஒட்டுசுட்டான் பகுதியில் பொருட்காட்சி ஒன்று ஒக்டோபர் மாதம் (1993)ல் நடாத்தப்பட்டமை வரவேற்கக்கூடிய விடயமாகும். அத்துடன் தொலைக் கல்வி பட்டமேற் கல்வி டிப்ளோமா பாடநெறி தொடங்கப்பட்டமை கல்வித்துறையில் வளர்ந்துவரும் நிலையைக் காட்டுகின்றது.

## சுகாதாரம்

முல்லைத்தீவு வைத்தியசாலை இராணுவ நடவடிக்கையால் பாதிப்படைந்தமையால் வசதிகளின்றி புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் தற்காலிகமாக இயங்குகின்றது. கடுமையான நோய்க்குள்ளாகும் நோயாளிகள் வவுனியா அல்லது யாழ்ப்பாணமே செல்லவேண்டியுள்ளது. தற்போதைய போக்குவரத்துக் கஷ்டத்தினால் இடையிலே இறக்கின்ற நிலை சாதாரண நிலையாக மாறிவிட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் இன்றைய பொருளாதாரப் பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றுக்கு விரைந்து தீர்வு காண நாம் பயனுள்ள முயற்சிகளை எடுக்க வேண்டியவர்களாயுள்ளோம்.

**நன்றி: ஈழநாதம்**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# இசைக் கல்வியும் சமூக உளவியற் பின்புலமும்

கலாநிதி சபா. ஜெயராசா

தனிமனித உணர்வுகளையும் மீறிய ஒரு சமூகப் படிமமாகவே இசை விளங்குகிறது. அதாவது சமூக இருப்பிலிருந்தே இசையுணர்வுகள் கிளர்ந்தெழுகின்றன. மந்திரமும் சடங்குகளும் புராதன கிராமிய வாழ்க்கையின் அறிகைக் கோலங்களையும், எழுச்சிக் கோலங்களையும் வெளிப்படுத்தின.

மந்திரங்களிலும், சடங்குகளிலும் அவற்றுக்குரிய ஒலியும், சைகைகளும் ஒன்றிணைந்திருந்தன. இவை மனிதரின் உழைப்போடும், கருவிகளின் கையாட்சியோடும், சமூக இயக்கங்களோடும் தொடர்புபட்டிருந்தன. உற்பத்தி முறையிலிருந்து மனிதன் எழுப்பும் ஒலிகள் பிரிக்க முடியாதிருக்கின்றன.

கிராமியக் கூட்டுச் செயற்பாட்டின் ஊடகமாக இசையும், மொழியும் அமைகின்றன. உற்பத்தி முறையிற் பார்த்துச் செய்தல் அல்லது பின்பற்றுதல் சிறப்பார்ந்த பணியாக அமைகின்றது. பார்த்துச் செய்யும் உற்பத்தி முறைமை உள்ளுணர்வுடனும், பிரக்ஞையுடனும் கூடிய கூட்டுச் செயல் முறையாகும்.

இசையைப் பாவனை இசை, சுட்டிக்காட்டல் இசை என இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். தமது சிந்தனைகளுக்கும் மனவெழுச்சிக்கும் ஏற்றவாறு தன்னை ஒரு குழந்தையாக, தலைவனாக, வேலையாளாகப் பாவனை செய்து அதனை அடியொற்றி எழுப்பும் இசை, பாவனை இசை எனப்படும்.



இன்ன இன்ன செயல்களைச் செய்யவேண்டுமென்ற வகையிலே உற்பத்தியின் பொழுதும், சமூகத் தொடர்புகளின் பொழுதும் உருவாக்கப்படும் இசை சுட்டிக்காட்டல் இசை எனப்படும். இவ்வகையாகப் பாகுபடுத்தப்படும் இசையானது மேலும் பல பரிமாணங்களைக் கொள்ளுகின்றது.

கிராமியத் தொழில் முறைகள் உடல் வலுவைப் பெருமளவிலே பயன்படுத்துவதாக அமைகின்றன. உடல் வலுவைப் பயன்படுத்தித் தொழில் புரியும் போது எழும் ஓசை உடல் சார் ஓசை அல்லது உடல் சார் ஓலம் எனப்படும். உடல் வலுவைத் துரிதப்படுத்தும் நோக்குடன் அது பயன்படுத்தப்படும். தண்ணீர் இறைக்கும் பொழுது "எக்... எக்... எக்கு..." என்பதும் படகு வலிக்கும்பொழுது "ஏலேலோ" என்பதும் இதற்கு உதாரணங்களாகும். "எக்... எக்..." என்பது உடல் வலிவின் பிரயோகத்தையும் "எக்கு" என்பது ஓய்வையும் குறிக்கும்.

உடல் சார் ஓசைகளை மனவெழுச்சிகளுடன் கலந்தும், மொழி சார்ந்த தொடர்பாடல்களுடன் இணைத்தும் உற்பத்தி நடவடிக்கைகளில் மீளவலியுறுத்தும் பொழுது தோன்றும் பாடல்கள் இசைவளர்ச்சியின் பிரதான பரிமாணத்தை காட்டுவதாக அமையும்.

கிராமங்களின் தொழிற் பிரிவுகள் வளர்ச்சியடையும் பொழுது தொழில் செய்வோரால் ஆக்கப்படும் பாடல்கள் என்ற அமைப்பிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. பாடல் ஆக்குவோர் என்ற பிரிவுகள் வளர்ச்சியடையத் தொடங்கின. இந்நிலையில் நேரடியான உழைப்புச் செயல்முறைகளில் இருந்து இசை துண்டிக்கப்படலாயிற்று. உழைப்புப் பாடல்களுடன் வேறுபாடுகொண்ட பாடல் வடிவங்கள் தோன்றலாயின. இவற்றிலே குரலுக்கும் இசைக்கருவிகளுக்கும் முக்கியத்துவம் வழங்கப்படும். ஓசை நயத்துக்கு அழுத்தங்கள் கொடுக்கப்படும். ஓசைநய ஒழுங்கமைப்புக்கான சுரவரிசைகளும் இதன் வளர்ச்சியினூடே கண்டு பிடிக்கப்படலாயின. ஓசை நயம் முதன்மைப்படுத்தப்பட, இசையின் கருத்தாடற் பண்புகள் சரிவடையத் தொடங்கின.

மனிதனுடைய செயல்திறன்களை வளர்க்கும் புறநிலை நோக்குடையதாக சடங்குகள் வளரத் தொடங்கும் பொழுது உற்பத்தியைப் பெருக்குவதற்குப் பாவனை நடனங்களும், இசையும் துணைசெய்யும் என்பது குலக்குழுச் சமூகங்களின்

**மனவெழுச்சிகளின் அகில மொழியாக இசை கருதப்படுகிறது. அதனால் இன, மத, மொழி மையப்பாடாகளை கடந்து இசை செல்கிறது. பேச்சுவடிவத்தில் நின்றும் அப்பாலும் செல்வதால் பேச்சுடன் மட்டும் கட்டுப்படமுடியா மனவெழுச்சிக்குரிய வெளியீட்டுவடிவமாக இசை அமைகிறது.**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


நம்பிக்கையாக விளங்கியது. காற்றாகவும், மழையாகவும், நிலமாகவும் பாவனை செய்து ஆடலும் பாடலும் நிகழ்துவதன் வாயிலாக உற்பத்திப் பெருக்கம் ஏற்பட முடியும் என்ற நம்பிக்கையின் காரணமாக மந்திரம் வளர்ச்சியடையத் தொடங்கியது. இவ்வாறாக இயற்றப்படும் நிகழ்ச்சிகளின் உற்பத்தியிலே கூடுதலான கவனத்துடன் ஈடுபடுவதற்கான உளவலிமையைக் கொடுப்பதாக அமைந்தது.

கிராமியப் பின்புலத்தில் இசையானது மந்திரங்களுடன் இணைந்ததாக வளர்ச்சி பெறத் தொடங்கியது. மந்திரம் என்பது மனவெழுச்சியும், கருத்தேற்றமும் கலந்ததாக அமைந்தது. மந்திரங்களில் மனித விருப்பங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இயற்கையைக் கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தும் பொழுது எழும் குதூகலம் மந்திரம் என்பது முற்றிலும் அறிவியல் அணுகுமுறையைக் கொண்டது என்று கொள்ளமுடியாது. அவற்றிலும் அதீதமான கற்பனைகள் நிறைந்திருக்கும். அவை மனவெழுச்சி பூர்வமாக மேற்கொள்ளப்படும் பொழுது மந்திர இசையைக் கேட்பவர்கள் உந்தப்படுகின்றனர். இவ்வகையான சமூக இயக்கம் இசைக்கு இன்றியமையாத பண்புக் கூறாக விளங்கும்.

எமது பாரம்பரியமான இசை பண்டைய கல்விச் செயற்பாடுகளான மந்திரங்களுடனும் சடங்குகளுடனும் இணைந்து வளரலாயிற்று. இவ்வகையில் அதன் உளவியற் பரிமாணங்கள், தொடர்பியற் பரிமாணங்கள் வளர, அது தன்னளவில் முழுமை பெற்ற ஒரு சாதனமாக முகிழ்க்கத் தொடங்கியது. கவிஞனுக்கு சொல் ஊடகமாக அமைதல் போன்று இசையாளனுக்கு ஒலிப் பண்புகள் ஊடகமாயின.

சிக்கல் நிரம்பிய சமூகச் சூழலின் மத்தியிலே ஒழுங்கு, இங்கிதம், மகிழ்ச்சி, மென்மை முதலியவற்றை இசை ஏற்படுத்தவேண்டிய தேவை எழுந்தது. பொருளாதார உற்பத்தி முறையிலும் ஒருவித குழப்பமும், ஒத்திசைவும் ஏக காலத்திலே காணப்படுவதாயிற்று. இவ்வாறான முரண்பாட்டுக்குரிய இசைவாக்கத்தில் இசை பயன்படுத்தப்பட்டது. ஒலியின் இனிய கோவையாக இசை உருவாக்கப்படுவதுடன் தொழில்சார் மனவெழுச்சிகளுடன் ஒன்றிணைக்கப்படுகின்றது.

சமூக வளர்ச்சியின் பெறுபேறாக இசை என்பது பொருளாதார நோக்கு, உள ஆற்றல் நோக்கு, ஆன்மீக நோக்கு, என்ற படிநிலைக்கு இட்டுச் செல்லப்பட்டது. சமூக வளர்ச்சியுடன் சமூக நிரலமைப்பு என்ற பண்பும் வளரலாயிற்று. நிரலமைப்பானது ஆசிய மரபிலே சாதியமைப்பாகவும், மேற்குலகிலே சொத்துரிமை தழுவியதாகவும் எழுந்தது. இந்த முரண்பாடுகள் இசை வடிவங்களிலும் வெளிக்கிளம்பலாயின. சமஸ்கிருத மரபிலே அநிபந்த சங்கீதம், நிபந்த சங்கீதம் என்ற இரண்டு பிரிவுகள் கிளைவிடலாயின. தாளவரையறைகளுக்குக் கட்டுப்படாத சங்கீதமே அநிபந்தம் என அழைக்கப்பட்டது.

வரன்முறையான முறை சார்ந்த கல்வியமைப்புடன் இணைந்து வளர்ந்ததே நிபந்த சங்கீதம் ஆகும். வரன்முறையற்ற, முறைசாராக் கல்வியமைப்புடன் இணைந்தது அநிபந்த சங்கீதம். சமூக அடுக்கமைப்பிலே நலிந்தோர், நாட்டார் மரபுகள் வழியாக, முறைசாரா வகையிலே தமக்குரிய கல்வியைப் பெறவேண்டியிருந்தது. அநிபந்த சங்கீதம் அவர்களுக்குரியதாயிற்று.

நிபந்த சங்கீதத்திலே ஒலி அலகுகள் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்ட வகையிலே ஒழுங்கமைக்கப்படுகின்றன. புறவுலக அவதானிப்பின் உளவியல் சார்ந்த வெளிப்பாடாக இராகங்கள் அமைக்கப்படுகின்றன. இராகம் என்பது மனவெழுச்சி கலந்த சிந்தனை வடிவம். மனப்பதிவுகளின் ஒலிக் குறியீடுகள் என்று அவற்றைக் கூறலாம். புறவுலக முரண்பாடுகள் இன்றி இராகம் பிறப்பதில்லை. முரண்பாடுகளின் வேறுபாடுகளுக்கேற்றவாறு இராக வேறுபாடுகள் தோன்றுகின்றன. இசை தொடர்பான நான்கு பிரிவுகள் சமூக முரண்பாட்டுக்கும் இசைக்கும் உள்ள உளவியல் தொடர்புகளைச் சுட்டிக்காட்டும்.

இசை ஊடகம், இசை வடிவம், இசைச் செய்தி, இசைத் துலக்கம் என்ற இந்நான்கும் இசையின் சமூகத் தன்மையை எடுத்துக்காட்டுவதாக அமையும். இச்சந்தர்ப்பத்தில் இசைக்கும் சடங்குகளுக்கும் (கரணங்களுக்கும்) இடையேயுள்ள தொடர்புகளை இணைத்து நோக்குதல் பொருத்தமுடையது. சடங்குகளில் இரு பரிமாணங்கள் உண்டு. ஒன்று அதன் நுட்பப் பரிமாணம். மற்றையது அதன் மனவெழுச்சிப் பரிமாணம். எதிர்பாராத நிகழ்ச்சிகளின் போது புரியப்படும் சடங்குகள் என்ற பகுப்புக்கள் சடங்கு பற்றிய மானுடவியலிற் குறிப்பிடப்படுகின்றன.

சடங்குகளிற் காணப்படும் மானுடப் பொதுப் பண்புகள் இசையிடத்திலும் காணப்படுகின்றன. மனவெழுச்சிகளினதும் அகில மொழியாக இசை கருதப்படுகிறது: அதனால் இனத்துவ நிலைப்பட்ட மையப்பாடுகளை இசை கடந்து செல்கின்றது. தனிமனித ஆழ்மனத்துக்குரிய சமூகப் பொருத்தப்பாடு இசையால் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றது. அதிக அளவு மன இடிபாடுகளுக்கும் விரக்திக்கும் உள்ளாகி நிற்பவனை மீட்டெடுக்கக்கூடிய ஒலிச்சோமானங்கள் இசையிற் காணப்படுகின்றன. கருத்தேற்றக் கற்பித்தலியல் இதன் அடிப்படையாகவே உருவாக்கப்பட்டுள்ளது.

இசை என்பது பேச்சு வடிவங்களில் நின்றும் பெயர்ந்தும் செல்வதால் பேச்சுடன் மட்டும் கட்டுப்படமுடியாத மனவெழுச்சிக்குரிய வெளியீட்டு வடிவம் கிடைக்கப் பெறுகின்றது. இசைப் பாரம்பரியத்தில் ஜீவகலா என்ற தொடர் வழங்கப்படுதல் குறிப்பிடத்தக்கது. இசையில் ஒலி நாண்களில் பூரணமான அதிர்வுகளுக்குரிய சந்தர்ப்பம் தரப்படுகின்றது. சிறப்பாகக் கட்டிளமைப் பருவத்தில் நிகழும் உடலியல், உடற்றொழிலியல் சார்ந்த மாற்றங்களின் நெறிப்படுத்தலுக்கு இசைப் பயிற்சி துணை செய்வதாக அமையும்.

**நன்றி: 'நான்'**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# கந்தளாவ என்னும் கந்தளாய்

**தமிழகத்தில் தமிழருக்கு ஒரு வீராணம் போன்று ஈழத்தில் கந்தளாய் தமிழரின் பாரம்பரிய சொத்தாகத் திகழ்ந்தது. ஆனால் இன்று தமிழர் மரபினின்றும் அது நீக்கப்பட்டுவிட்டது.**

"குடத்து வாழ்வும் குளநீர்ப் பாசனமும்" திராவிடரோடு ஒட்டிப் பிறந்த இரட்டை இயல்புகளாகும். 'குளம் தொட்டு வளம் பெருக்கிய' திராவிடரின் மூதாதையர் 'அணை கொண்டு தனம் பெருக்கிய' வழியில் பாசனபொறிமுறையறிவினையும் வளர்த்தெடுத்துக் கொண்டிருந்தனர். இவர்கள் 'குடில்' கட்டி 'மடை' மறித்து வாழ்ந்த இடமெங்கும் 'அணைகட்டி' சேறடித்தும் வாழந்திருந்தனர். சேறடித்து வாழ்ந்த இவர்கள் சோறுடைத்திருந்தனர்.

ஈழத்தின் நெற்களஞ்சியம் எனப் படும் தம்பலகாமம் எம் முன்னோர் சேறடித்து, சோறுடைத்து வாழ்ந்தனுபவித்த மையம். அவர்கள் இங்கு சேற்றில் கைவைத்து வாழ்ந்திருந்தமையால்தான், ஈழவர் யாவரும் சோற்றில் கை வைத்திருக்க முடிந்தது. இத்தகைய சிறப்பான புராதனம் வாய்ந்த ஈழத்து நெற் களஞ்சியத்தினை அன்று பசுமையாக்கி வைத்தது கந்தளாய் என்றும் பெரும் நீர்ப்பரப்பாகும்.

'கண்', 'தலை', 'தழை' ஆகிய மூன்று தமிழ்ப் பதங்களுள் முதலாவதுடன் மற்றொன்று இணைந்த வகையிலேயே கந்தளாய் என்றபதம் உருவானதாகக் கூறப்படுகின்றது.

1ம் கஜபாகு என்ற மன்னன் (கி.பி. 113) அநுராதபுரத்திலிருந்து தனது படைகளை திருக்கோணேஸ்வரம் கோயிலை இடிப்பதற்காக நடாத்திச்சென்றுகொண்டிருந்த சமயம் இக்குளத்துக்கு அண்மையில் அவனது இரு கண்களும் பார்வையை இழந்து விட்டனவாகவும், பின்னர் குளத்துநீரை அள்ளி முகத்தினை கழுவிய பொழுது பார்வையை மீளப்பெற்றதாகவும் மகாவம்ச மரபு குறிப்பிடுகின்றது. பின்னர் கஜபாகு மன்னன் பௌத்தத்திலிருந்து இந்துமதத்திற்கு மாற்றம்கொண்டு இந்துப்பண்பாடு செழித்து வளர உதவிகள் புரிந்தான் என்று கூறப்படுகிறது. எனவே மன்னனின் கண் தழைத்தமை காரணமாக (கண்+தழை) கந்தழை என்றாகி பின்னர் கந்தளாய் என வழங்கிற்று என்பர்.

## காலத்தோடு கலந்த கந்தளாய் குளத்துத் தமிழர் நாகரிகம்

முதலாம் கஜபாகு என்ற மன்னனே ஈழத்திற்கு கண்ணகி வழிபாட்டு மரபினையும் கேரளத்திலிருந்து கொண்டுவந்து தருவித்தான் எனவும், முதன்முறையாக ஈழத்தில் கண்ணகிக்காக அமைக்கப்பட்ட கோயில் வழுக்கையாற்றங் கரையில் உள்ள அங்கண் அம்மைக்கடவை என்ற இடத்தில் அமைந்துள்ளது எனவும் கூறப்படுகிறது. இங்கும் கண் என்ற பதம் கஜபாகு கதையுடன் தொடர்பு படுத்தப்படுவது சிந்திக்கத்தக்கது.

கந்தளாய்க் குளம் தோற்றுவிக்கப்பட்ட காலப்பகுதியில் இருந்து பல்வேறு மரபுகளுடன் கலந்து பண்பாட்டுருவாக்கத்திற்குப் பங்களிப்புச் செய்திருக்கின்றது.

"வரப்புயர நீருயரும்
நீருயர நெல் உயரும்
நெல் உயர குடி உயரும்
குடி உயர கோன் உயர்வான்"

என்று ஔவையின் எதிர்வு கூறலுக்கேற்ப ஈழத்தின் குணதிசை அமைந்த இக்குளமும், குடியும், கோயிலும், கோவும் ஒன்றிணைந்து திராவிட நாகரிகத்தினை உருவாக்கியிருந்தன. 'தம்பை மாநகர் புக்க' சோழ இலங்கேஸ்வரன் ஆன குளக்கோட்டன் காலத் திராவிட நாகரிகத்துக்கு கந்தளாய்க்குளம் உயிரோட்டமான மையமாக விளங்கியது. 'சதுர் வேதி மங்கலம்' (தமிழ்ப் பிராமணக் குடியேற்றங்கள்) சூழ்ந்த மையமாக கந்தளாய் ஆக்கப்பட்டுவிட்டது. தம்பலகாமம் கோணநாதேஸ்வரப் பெருமானும் உலாவரும் ஓர் மையமாக கந்தளாய் விளங்கியது. கோணேசர் கல்வெட்டில் அத்தொடர்பு நன்கு தெளிவாக்கப்பட்டுள்ளது.

தோம்பு மூலங்களில் இருந்து பெறப்பட்ட செய்திகள் சில, கந்தளாய்க் குளத்துடன் தொடர்பு படுத்தப்பபட்ட வகையில் தம்பலகாமத்து கோணநாதேஸ்வரப் பெருமான் கோவிலின் பண்பாட்டுப் பங்களிப்புக்களை கிழக்கிலங்கை தொடர்பாக இனங்கண்டுகொள்வதற்கு உதவிநிற்கின்றன. தமிழர் பண்பாட்டுப் பரப்பு தம்பலகாமத்து வயற்பரப்புடன் இணைந்த வகையில் பரந்திருந்தமையை அறிவதற்கு அவை மூலாதாரங்கள் ஆகின்றன.

தோம்பு மூலங்களை உருவாக்குவதற்கு காரணமாக இருந்த ஒல்லாந்தர்கூட கந்தளாய்க் குளத்தினை தமது பொருளாதார அபிவிருத்தித் திட்ட நடவடிக்கைகட்குட்படுத்தி திட்டங்களை உருவாக்கியிருந்தமையைக் காணலாம். ஒல்லாந்து தேசாதிபதியான வில்லியம் வான் டீ க்ராவ் (Willem Van De Graff) என்பவர் அரசநில அளவையாராக விளங்கிய ஜோன் பிரெடெறிக் (John Frederick Struys) என்பவரை கந்தளாய்க் குளத்தின்நில அமைப்புப் படத்தினையும் பரப்பினையும் அளந்து குறிக்குமாறு ஆணையிட்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


டார். தோன் பூர் (Torn Bauer) என்ற பொறிமுறையறிவியலாளர் 1793இல் கந்தளாய்க் குளத்தினைப் பற்றிய ஓர் அறிக்கையை ஒல்லாந்து அரசுக்குச் சமர்ப்பித்தார். ஆனால் துரதிர்ஷ்டவசமாக பட்டேவியாவில் இருந்து வந்த கட்டளையின் பிரகாரம் ஒல்லாந்தர் கந்தளாய்க் குளம் தொடர்பான அபிவிருத்தி வேலைகளைக் கைவிட்டுவிட்டனர். மூன்று வருடங்களின் பின்னர், அதாவது 1796இல் ஒல்லாந்தருக்கிருந்த அரசியல் உரிமைகள் இலங்கையிலிருந்து பறிக்கப்பட்டு ஆங்கிலேயர் வசம் ஒப்புவிக்கப்பட்டன.

கந்தளாய்க்குளம் தொடர்பான திட்டங்கள் பல ஆங்கிலேயர் காலத்தில் மேற்கொள்ளப்பட்டன. 1802இல் ஆங்கிலத் தேசாதிபதியான பிரெடெரிக் நோத் (Frederick North) என்பவர் தோமஸ் கிறிஸ்ரி (Thomas Christie) என்பவருடன் இணைந்து கந்தளாய்க் குளத்தினைப் பார்வையிட்டார். பின்னர் வில்லியம் கிரஹரியின் ஆட்சிக் காலத்தில் கந்தளாய்க் குளமும் அதன் அயற் கிராமங்களும் நிலஅளவை செய்யப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இதற்காக அப்போது 6000 டொலர் பணம் செலவிடப்பட்டதாகவும் குறிக்கப்பட்டுள்ளது.

1976இல் விரைவு படுத்தப்பட்ட மகாவலி அபிவிருத்தித் திட்டத்தினுள் கந்தளாய்க் குளமும் இணைக்கப்பட்டு, மகாவலி நீர் இக்குளத்திற்கு கிடைக்கச் செய்யப்பட்டது. 12,000 ஏக்கர் நெற்பரப்புக்கும், 5000 ஏக்கர் கரும்புத் தோட்டத்திற்கும் நீர் பாய்ச்சி வந்த கந்தளாய்க் குளத்தின் அணைக்கட்டு, 1986 சித்திரைத் திங்களில் சிங்களப் பேரினவாதிகளால் உடைத்துவிடப்பட்டது. மூன்று தமிழ்க் கிராமங்கள் நீரினால் அடித்துச்செல்லப்பட்டு கொட்டியாரத்தில் சேர்க்கப்பட்டது. நீரோடு தோன்றிய நாகரிகம் நீரினால் அள்ளுண்டு செல்லப்பட்டது. இன்றைய கந்தளாவ யாருடைய பண்பாட்டினை வழிப்படுத்தி நிற்கிறது?

**நன்றி: நங்கூரம்**

# உறுதி

மேகம் தழுவி விளையாடும் உயர்மலைகள்
ஏதுமற்ற தேசம்; என்றாலும்
சிரித்தபடி,
சாவைத் தன் தோள்மீது தாங்கி
எதிரிமுகாம்,
போகும் புலிவீரர் பிறந்த நிலம்.
வற்றா அருவி வருட மலர்க்காடு,
சிற்றாடை பூண்டு சிரிக்காத நிலமெனிலும்,
சின்னப்பூ வெல்லாம் செருக்களத்தில் நின்றாடி
சன்னப்பூ நெஞ்சில் சாத்தும் தமிழீழம்.
ஆழக்கிணற்றில் நீர்
அள்ளிப் பயிர் வளர்ப்போர்
வாழும் நிலம்.
புதுநெல்லின் வாசனைகள்,
வீசும் காற்றோடு வீசும்.
தூரத்து,
தோட்டக்கிணற்றின் துலாவிலிருந்து பாட்டுவரும்.
ஆட்டக் காவடியால்... அதிரும் நிலமிருந்து
புழுதி கிளம்பிப் போய் நிலவை வழிமறிக்கும்.
விழுது சுமந்த விருட்சங்கள் குடை பிடித்து,
தூரவழிநடப்போர் தூங்க மடிவிரிக்கும்.
வீரம் விளைந்து விளையாடும் எம்மண்ணில்,
கையளவு அள்ளக் கருதி
எவன் வந்தாலும்,
மெய்யாய் அவன் திரும்பி மீளான்;
இது உறுதி.

புதுவை இரத்தினதுரையின் 'நினைவழியா நாட்கள்'லிருந்து

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





# அல்பேட்

நாம் ஏராளமான மரணத்தைக் கண்டுவிட்டோம். தோழர்களின் சாவு எம்மைப் பாதிக்காது, வீரமரணம் எமக்குப் பரீட்சையமானது. சாவைச் சந்திக்கத் தயாரக இருக்கின்றோம் என்றுதான் நாம் இறுமாந்திருந்தோம். ஆனால் உன் மரணத்தைச் சந்தித்தபோது எம் இதயம் உருக்குலைந்து தளர்ந்து, எம் உள்ளம் சூனியமாகியதை நரம் எப்படி வெளிப்படுத்த முடியும்.

6 அடி 2 அங்குலமான உன் உயரமான (நீளமான) உடல் அசையாது கிடந்த நிலைகண்டு மக்கள் பதறியதை, உன் கிராமமே கலங்கியதைக் கண்டு உன் மரணம் தமிழ் மக்களை எந்த அளவுக்குப் பாதித்திருக்கின்றது என்பதை அறிந்து நாம் துடித்தோம்.

எம் முகாம்களில் ஒன்று இராணுவத்தினரால் தாக்கப்படுகின்றது என்பதை அறிந்து எம்மை விடுவிக்க. விரைந்த நீ எம் அன்புப் பிணைப்பில் இருந்து விடுவிக்கப் பட்டு விட்டாய்.

கிராம சனங்களோடு பழகும் போது அந்தச் சனங்களோடேயே ஒன்றிப்போகும் உன் எளிமையான தோற்றம், எம்மை எல்லாம் பிரமிக்கச் செய்தது.

எம் புலம்பலை நிறுத்திவிட்டு அல்பேட்டைப் பற்றி...

பண்டிதர் ஆயுதக் கிடங்குகளுக்குப் பொறுப்பாக இருந்து வேலை செய்த காலத்தில் பண்டிதருக்கு அடுத்த படியாக இருந்து வேலை செய்து இயக்கத்தின் நன் மதிப்பைப் பெற்றவன், “கந்தையா” என்று செல்லமாக பண்டிதரால் அழைக்கப்பட்டவன்.

அச்சுவேலியில் நடைபெற்ற எம் தளம் மீதான இராணுவ முற்றுகையில் தன்னுடைய துப்பாக்கியில் இருந்த குண்டுகள் தீரும்வரை போராடி வெற்றிகரமாக வெளியேறியவ்ன். பண்டிதரைப் பலிகொண்ட அந்தப் பெரிய முற்றுகையில் இருந்து வெற்றிகரமாக வெளியேறியதே அவனுடைய திறமைக்குச் சான்றாகும்.

பண்டிதரின் மறைவுக்குப் பின் ஆயுதக் கிடங்குகளின் பொறுப்பாளராகப் பணியாற்றி பண்டிதர் இழப்புக்கு ஈடு செய்தவன்.

1982ம் ஆண்டு தொடக்கம் தன்னை எம் இன விடுதலைக்காக அர்ப்பணித்துப் பணியாற்றியவன். அல்பேட்டை காணும் யாரும் போரிடுவதில் அனுபம் மிக்கவன் என்பதை தவறின்றி ஊகிக்க முடியும். முதல் பார்வைக்கு அவன் வயது இருபதுக்கு மேல் இருபத்து நாலுக்கு உள்ளதாகவே இருக்கும் என்று தோன்றும். ஆனால் வெய்யிலும் காற்றிலும் அடிபட்டிருந்த அவன் முகத்தையும் கண்களின் அருகிலும் நெற்றியிலும், வாயின் பக்கங்களிலும் நுண்ணிய இழைகளாக விழுந்திருந்த சுருக்கங்களையும் சிந்தனையில் ஆழ்ந்த களைத்த கருவிழிகளையும் உற்றுக் கவனித்தபின் அவன் வயதில் இன்னும் பத்து ஆண்டுகளைக் கூட்டலாம் போலிருக்கும்.

அல்பேட் கோபித்ததை, கோபப்பட்டதை நாம் காணவில்லை என்றே கூறலாம். ஏனோ தெரியவில்லை அவனுக்குக் கோபம் வருவதில்லை. நாம் சிலவேளைகளில் வேண்டுமென்றே சீண்டுவோம். அப்போதுகூட அவன் எருமை மாட்டில் மழை பெய்வது போல இருப்பான். அன்பினால் வழிநடத்தி, அரவணைப்பால் பாதுகாத்து, அவன் வளர்த்த அவனுடைய வீரர்கள், அல்பேட்டைப் போலவே உருவாகி இருப்பதைக் கண்டு வியப்புடன் அல்பேட்டுக்குத் தலை வணங்குகின்றோம்.

குழந்தைகள் என்றால் அல்பேட்டுக்கு அலாதி பிரியம். குழந்தைகளோடு பழகும்போது அவனும் ஒரு குழந்தையாகி மழலை மொழி பேசுவதைக் கண்டு நாம் சிரித்த பொழுதுகள் ஏராளம்.

எமது முகாம்களில் அல்பேட்டைச் சுற்றி ஒரு மழலைப் பட்டாளமே இருக்கும். அந்த சின்னஞ் சிறுசுகள், அல்பேட்டைக் காணாமல் தவித்த தவிப்புக்கள், அவர்களைப் பொறுத்தவரையில், அவன் கோவிலுக்குப் போய்விட்டான். கோவிலிலிருந்து வருவான். வரும்போது அவர்கள் அடிக்கடி கேட்ட, சொல்லிவிட்ட சாமான்கள் வேண்டி வருவான். அல்பேட் அவர்களை ‘குட்டிச் சாத்தான்’ என்று அழைப்பது வழக்கம் அந்தக் குட்டிச் சாத்தான்கள் அல்பேட் கோவிலுக்குப் போய்விட்டதை, போய்விட்ட செய்தியை மிகவும் சந்தோஷத்துடனும் மிகுந்த குதூகலத்துடனும் தமக்குள் பரிமாறிக் கொண்டார்கள்.

அவர்கள் அந்த. மழலைகள், அல்பேட் கோவிலுக்குப் போய் திரும்பி வருவான் என்பதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள்...

யாழ். பொலிஸ் நிலையத் தாக்குதலின் போது இராணுவத் தந்திரத்துக்கமைய கோட்டையில் இருந்து எதிரிகளை வெளியில் வரா

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


கிட்டண்ணா யாழ். பிராந்தியத் தளபதியாக இருந்தபோது மண்ணில் விடுதலைக்காய் விதையாய் வீழ்ந்த வீரர்களின் வீர வரலாற்றை 'களத்தில்' பத்திரிகையில் எழுதினார். அவரோடு களத்தில் நின்று விடுதலைக்காய் வீழ்ந்த வீரர்களின் இழப்பின்போது கலங்கினார். ஒரு குழந்தையைப் போல அழுவார். அவர்களின் உன்னதமான வாழ்க்கையை எங்களுக்கும் சொல்லுவார். அதைப் போல 'களத்தில்' பத்திரிகையில் எழுதினார். அவ்வாறு களத்தில் நின்று விடுதலைக்காய் உழைத்த அல்பேட், வாசன் எனும் வீரர்களைப்பற்றி கிட்டண்ணா எழுதிய இவ்வரலாற்றுக் குறிப்புகளை எரிமலை வாசகர்களுக்காக மறுபிரசுரம் செய்கிறோம்.

மல் தடுக்கும் பொறுப்பும் கோட்டை மீதான தொடர்ந்த தாக்குதலை நடத்தும் பொறுப்பும் அல்பேட்டிடம் கொடுக்கப்பட்டிருந்தது. தனது பணியைச் செவ்வனே செய்துமுடித்து எமது வெற்றிக்கு வழிவகுத்தவன்.

ஒருநாள் விடியற்காலை அல்பேட் தன் முகாமில் உள்ள தோழர்களை தினசரி காலைப்பயிற்சிக்குத் தயார் படுத்திக் கொண்டிருக்கையில், 'வோக்கி ரோக்கி' அலறியது. அவன் வோக்கியை இயக்கி அழைத்த இடத்துடன் தொடர்பை ஏற்படுத்தியபோது, சுதுமலையில் உள்ள எமது முகாம் ஒன்று இராணுவத்தினரால் முற்றுகையிடப்படும் செய்தி கிடைத்தது. அல்பேட் தன் தோழர்களைப் பார்த்து உரக்க அழைத்து விரைந்து, ஆயுதங்களுடன் வானில் ஏறி விரைந்தான். வான் இணுவில் பகுதியால் சுதுமலையை அண்மித்தபோது மூன்று "பெல் ஏ,பி, 412" ரக ஹெலிகாப்டர்கள் அப்பகுதியை சுற்றிச் சுற்றி 'மெசின் கண்'ணினால் குண்டுமழை பொழிந்து கொண்டிருந்தது.

மேலே வானத்திலே வட்டமிட்டுக்கொண்டிருந்த அலுமினியப் பறவைகளில் ஒன்று உயரத்தில் இருந்து பாய்ந்து மலையில் வழுகி வருவது போல மிக மிக வேகமாக வாகனத்தை நோக்கிப் பாய்ந்து வந்து '50 கலிபர் மெசின் கண்'ணினால் சுட்டுத் தள்ளியது. குண்டு வரிசைகள் வாகனத்திற்கு மி அருகாக நிலத்திலே கோடிட்டுச் சென்றது. குறி தவறிவிட்டது. அல்பேட் தன், தோழர்களைப் பார்த்து "டேய் தும்பியில் இருந்து சுடுறாங்கள் கவனமாக இருங்கோ" என்று கூறி முடிக்கவும், (பெல் ஏ.பி. 412 ஹெலிகொப்டர்களை நாங்கள் 'தும்பிகள்' என்று அழைப்பது வழக்கம்) உருமறைப்பு வர்ணம் பூசப்பட்ட இன்னொரு அலுமினியத் தும்பி பக்கவாட்டாக தாழப்பறந்து வந்தது. "சுடப்போறான், வானை எங்காவது ஒருபுறம் திருப்பி ஒதுக்கு" என்று கத்தினான் அல்பேட். வான் ஒதுங்க அல்பேட் தோழர்களுடன் கீழே பாய்ந்த போது விமான எஞ்சின் கடகடப்புச் சத்தத்துடன்-மெசின் கண்ணின் இடைவிடாத குண்டுச் சத்தத்துடன் தும்பி தாழப்பறந்து சென்றது. வானுக்கு முன்பாக குறுக்குப்பாட்டாக குண்டு வரிசை மண்ணிலே கோடிட்டது. குறி தவறிவிட்டார்கள். மறுபடியும் இன்னும் அருகாக அல்பேட்டும், வானும், சேதமின்றித் தப்பித்துக் கொண்டது.

அல்பேட் தன் 'வோக்கி ரோக்கியுடன்' முகாமுக்குத் தொடர்பு கொண்ட போது,

முகாமுக்கு பின்பாக ஹெலிகாப்டர்கள் இராணுவத்தினரை இறக்கிய தோட்டப்பகுதியான இடத்திற்குச் செல்லுமாறு பணிக்கப்பட்டது. குழு அவ்விடத்தை அணுகியபோது இராணுவக் கமான்டோக்கள் தாம் இறங்கிய இடத்தில் சிலரை நிலைப்படுத்திவிட்டு, மற்றும் சிலர் முகாமை நோக்கி சென்றுகொண்டிருந்தனர்.

அல்பேட் கிளர்ச்சியுற்றான். ஆனால் அது சாவு குறித்த அச்சமல்ல. மிக, மிக வீரமுள்ள பதற்றமற்ற மனிதர்களுக்கு இயல்பான ஒன்று. ஆபத்து பற்றிய முன்னுணர்வு தானும் இல்லை இது. அவன் கவலைப்பட்டது கமான்டோக்களை எப்படியாவது தடுக்க வேண்டும்.

தோட்டங்களில் சில சில இடங்களில் மரவள்ளிச் செடிகள் மிக அழகாக செழிப்பாக செறிவாக வளர்ந்திருந்தது. உயர்ந்து செழிப்பாக, செறிவாக வளர்ந்திருந்த மரவள்ளிப் பற்றைகள் ஒளியைப் புகவிடாமல் இருட்டைக் கொடுத்துக்கொண்டிருந்தன.

அல்பேட் தனது குழுவினர் சகிதம் அவர்களைத் தாக்கத் தொடங்கினான். இராணுவத்திர் 2 அங்குல சிறிய மோட்டார்கள் சகிதம் எதிர்த்தாக்குதல் நடாத்தினர். முன்னேறிய இராணுவக் கொமான்டோக்கள் மீதும் பலத்த தாக்குதல் நடாத்தப்பட்டது. முன்னேறியவர்கள் மீதும் தாக்குதல், நிலைகொண்டு காவல் செய்துகொண்டிருப்பவர்கள் மீதும் தாக்குதல், வானத்தில் சுற்றிக்கொண்டிருந்து இவர்களுக்கு காவல் செய்யும் அலுமினியப் பறவைகளுக்கும் தாக்குதல். பலமணி நேரம் இடைவிடாத தாக்குதல்.

கமான்டோக்கள் பின்வாங்கத் தொடங்கினார்கள். பின்புறத்தில் அவர்களை விமானம் ஏறவிடாமற் செய்வதற்காக யமனைப் போல் நின்றுகொண்டிருந்தான் அல்பேட். எனவே அல்பேட் குழுவின் மேல் பலத்த தாக்குதல் மேற்கொள்ளப் பட்டது.

பலவர்ணம் பூசப்பட்ட பெல் ஏ. பி. 412 ஹெலிகாப்டர்கள் மூன்றும் தம்முடைய எம் 60 ரக மெசின் கண்ணினாலும், 50 கலிபர் ரக மெசின் கண்ணினாலும் வட்ட மிட்டு வட்டமிட்டுத் தொடர்ந்து தாக்குதலை நடாத்தின. அல்பேட் குழுவினரை நோக்கி வந்த மோட்டார் குண்டுகள் வெடித்துக்கொண்டிருந்தன. திடீரென்று அல்பேட் சுருண்டு விழுந்தான். இடது கண்ணுக்குக் கீழே பெரிய ஓட்டை. அதிலிருந்து குருதி ஊற்றெடுத்துப் பாயும் நீர்த்தரைகள் போல பாய்ந்தது. அல்பேட்டைத் தூக்கிக் கொண்டு சிலர் பின் விரைகின்றனர். அல்பேட்டுக்கு சிகிச்சை அளிப்பதற்கு முன்பாகவே அவன் தன் உயிரை இந்த மண்ணின் விடுதலைக்காக அர்ப்பணித்து விட்டான்.

நன்றி 'களத்தில் தை 1986'

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# இருளை வென்ற பேரொளி!



தென்னாபிரிக்காவின்
தெருவெங்கும்
விழாக்கோலம்...
நீண்ட போராட்ட
வரலாறு
சுதந்திரத்துடன்
சங்கமித்துக் கொண்டநாள்!
கறுப்பின மக்களின்
நெஞ்சறைக் கூட்டினில்
நிறைந்த தலைமகன்
முடிசூடிக் கொண்டதால்...
வைகறைப் பூக்களாய்
மலர்ந்த மனங்கள்
தெருவை நிறைத்து
களிநடனம்
புரிகின்ற நாள்!
சிறுசுகளும், இளசுகளும்
முதுசுகளும் அங்கே
"ஆனந்த சுதந்திரம்
அடைந்துவிட்டோம்" என்று
அலைகடலாய் எழுந்து
ஆனந்தத் தாண்டவம்
புரிகின்ற நாள்!
வானமும் பூமியும்
அசைகின்ற அசையாத
அனைத்தும் அங்கே
உயிர்த்துக்கொண்ட நாள்!

நவயுகத்தின்
நிறவெறிப் பிசாசுகளால்
நேற்றும்
அந்தத் தெருவெல்லாம்
சுதேசிகளின் குருதியால்
தோய்ந்தே இருந்தன.
முன்றரை நூற்றாண்டு
தாண்டிய போதிலும்
பேரின மக்களை
சிற்றின வெள்ளையர்
சிறைப்பிடித்தாண்ட
'விசித்திரம்' நடந்த பூமி!
இருபத்தேழாண்டுகள்
இரும்புக் கம்பிகளின்
இரைதேடும் வாயினில்
வதைபட்டுக்கொண்ட
மனிதம்
சுதந்திரம் சுதந்திரம் என்றே
சுவாசித்துக் கொண்டது.
பன்னெடுங்கால
போராட்டப் புயல்
இன்று
தென்றலைப் பிரசவித்துக் கொண்டது.
தரணியின் தலைமைகள்
புடைசூழ்ந்து வாழ்த்த,
உலகமெல்லாம்
ஒடுங்கி வாழ் மக்கள்
உயிர்ப்போடு நோக்க,
வரலாற்று மனிதன்
வீதிவலம் வருகின்றான்!
வாழ்க,
நெல்சன் மண்டேலா!

- மாணி நாகேஷ் -

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# கிட்டண்ணா...!



எங்களை விட்டு
எத்தனை நாட்கள்

எந்த அலையில்
எந்த நிலையில்

கடிதம் எழுத
நேரில் வர

உப்புக் காற்றில்
உப்பு நீரில்
உனது முகவரி?

உடனே பதில்....

உனது பதிலை
அடுத்து வரும் புயல்
எடுத்து வருமா?

இங்கு
உணர்வு அழ
உறவு அழ

கிட்டண்ணா
நீ
எந்த அலையில்
எந்த நிலையில்

ப.சு. சிவசாமி தமிழன்
தமிழ்நாடு

## கவிதையின் உள்ளுணர்வு

வங்கக் கடலில்
கரைந்து போன
கிட்டு அண்ணாவின்
நினைவுகளால்...

இன்றும் அவர் வாழுவதாக
எண்ணுகிறேன்
ஆனால் வங்கக் கடலில் எங்கு
வாழ்கிறார்?
அவருக்கு கடிதம் எழுத ஆவல்
முடிந்தால் பார்க்க ஆசை
ஆனால் முகவரி?
அதனால் நான், அடுத்து வரும்
புயலை எதிர்பார்க்கிறேன்
அவரின் முகவரிக்காக....

# கிழக்கும் மேற்கும்



இதோ! இங்கே
இன்றும் விடிந்து விட்டது
என்றும் போல.
இனி என்ன?
வேலை, வீடு, வீடியோ
வாழ்க்கையின் அர்த்தமே
அர்த்தமிழந்ததாய்...
என்றும் இயந்திரமாய்
இன்று போல...

அதோ! அங்கே
தூரத்தில் அவர்கள்
துடிக்கும் துப்பாக்கியுடன்
நடக்கிறார்கள்
எமக்கு விடியுமா?
வெளிச்சம் தெரியுமா?
எனக் கேட்க,
துப்பாக்கி நெருப்பில்
தீபம் ஏற்றி
பாதை காட்டுகிறார்கள்.

ஒருவன் விழ
பலர் எழுகிறார்கள்
வாழ்க்கையின் அர்த்தமே
அவர்களுக்கு அர்ப்பணமாய்...

இராஜ். சிவலிங்கம்
ஜேர்மனி.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# விடுதலையின் சிகரத்தை நோக்கி

## இரும்பின் உறுதி பெற்றுவிட்ட மக்கள் இனித் தளர்வு இல்லை

எங்கள் மக்கள் துணிந்து விட்டார்கள். எதனையும் எதிர்கொள்ளும் திண்மையை எங்கள் தேசம் பெற்று விட்டது. பயம் என்பது முற்றாகவே அற்றுப்போய்விட்டது என்று சொல்லமுடியாதுதான், ஆனாலும் எங்கள் மக்கள் துணிந்துவிட்டார்கள். இலக்கினை அடையும் வைராக்கியத்தில், இப்போது அவர்கள் இரும்பின் உறுதியாக இறுகிப்போய் இருக்கின்றார்கள். இலட்சிய வெற்றியின் நம்பிக்கை அவர்களது விழிகளில் பிரகாசிக்கின்றது. மக்களின் மனோவுலகில் மிகப்பெரிய மாற்றம் நிகழ்ந்து வருகின்றது. வெளிநாட்டவர்களே அதிசயிக்கின்ற அளவுக்கு- வியந்துரைக்கின்ற அளவுக்கு எமது மக்கள் துணிவுறுதியைப் பெற்றிருக்கின்றார்கள்.

இந்தியாவைச் சேர்ந்தவரும்- நாடகாசிரியரும், 'சுபமங்களா' சஞ்சிகையின் ஆசிரியருமான திரு. கோமல் சுவாமிநாதன் அண்மையில் தமிழீழத்திற்கு இலக்கியப் பயணம் செய்தது எல்லோருக்கும் தெரியும். வந்தவர் திரும்பிப் போகும்போது, கொழும்பில் அரச அமைச்சகக் கட்டடமொன்றில் நடந்த கூட்டமொன்றில் சிறப்புரை ஆற்றும்போது-

"அங்கு பெற்றோல் இல்லை; மண்ணெண்ணெய் இல்லை; மின்சாரம் இல்லை, ஆனால் வாகனங்கள் ஓடுகின்றன. வீதி விளக்குகள் எரிகின்றன. தேங்காய் எண்ணெய், மரக்கறி எண்ணெய் மூலம் வாகனங்கள் ஓடும் விந்தையை உலகத்தில் யாழ்ப்பாணத்தில் மட்டுமே காணமுடியும்." என்று வியந்தவர், "நான் நாடு திரும்பியதும் இந்திய நாட்டிலும் இந்த விந்தைகளைப் பின்பற்றினால் என்னவென்று கேட்கவிருக்கிறேன்" என்று சொன்னார். அந்த மக்கள் துயரங்களை மறந்து- எதையும் தாங்கும் இதயத்தோடு மிக நிதானமாகவும், உறுதியாகவும் செயற்படுவது கண்டு தான் பிரமித்துப் போய்விட்டதாகவும் அவர் கூறினார்.

இவருக்கு முன்னர் இன்னுமொருவர் இங்கு வந்திருந்தார். பிரித்தானிய தேசத்திலிருந்து வந்திருந்த அவரது பெயர் திரு. சின்னமணி. அவர், லண்டனில் 'லூசியன்' என்ற நகரின் முதல்வர். இங்கு வந்து, இருந்து, பார்த்து, கலந்து பேசிவிட்டுப் போனவர். தனது உணர்வுகளை பி.பி.சியின் 'தமிழோசை'க்கு அளித்த செவ்வியின்போது வெளியிட்டார். அவர் திருமதி. ஆனந்தி சூரியப்பிரகாசத்தின் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும்போது-

"இரண்டாம் உலக மகாயுத்த காலத்தில் பிரிட்டனில் மக்கள் பெரும் கஷ்டப்பட்டனர். தாம் கஷ்டப்பட்டபோதிலும் யுத்தம் நடக்கின்றது என்ற முறையில் அவர்கள் தைரியத்துடன் வாழ்ந்தனர். இந்த நிலைமையை நான் யாழ்ப்பாணத்தில் கண்டபோது எனக்குப் பெருமை ஏற்பட்டது. அங்குள்ளவர்கள் மகிழ்ச்சியாகவும், தைரியமாகவும் இருப்பதைப் பார்க்கும்போது எனக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது." என்று சொன்னவர், தமிழர்கள் படுகின்ற துன்பங்களைப் பற்றிய ஒரு வினாவுக்கு கீழ்வருமாறு விடைதந்தார்.

"அங்குள்ள மக்கள் உறுதியாக இருக்கின்றார்கள்; அவர்கள் பரிதாபமாக இருப்பதாக நான் கூறமாட்டேன். வேறு சிலர் போல 'அரசே! அவர்கள் கஷ்டப்படுகின்றார்கள்; தயவுசெய்து உதவுங்கள்' என்று மன்றாட நான் விரும்பவில்லை. அப்படிக் கேட்பது அந்த மக்களது முயற்சிக்கு எதிரானது. அப்படி நான் ஒருபோதும் கேட்கமாட்டேன். உறுதியாகவும், சுயமரியாதையுடனும் வாழும் மக்களை மதித்துப் பேசுவதையே நான் விரும்புகின்றேன்."

உண்மைதான் எங்களது மக்கள் இப்பொழுதெல்லாம் எவ்வளவோ மாறிப்போய்விட்டார்கள். நிரம்பவும் துணிந்துவிட்டார்கள். இந்த யுத்த சூழ்நிலைக்கு ஈடுகொடுத்து வாழ அவர்கள் இசைவாக்கம் பெற்றுவிட்டார்கள். என்ன இரைச்சல் கேட்டாலும் செவிகளை உயர்த்தி "பொம்பரோ.." என்று முழிப்பதாக இருந்த காலம் போய்விட்டது. வீட்டிற்குள் இருந்துகொண்டே மேலே போவது என்ன வகைப் போர்விமானம் என்பதைச் சத்தத்தில் அனுமானித்துக்கொண்டு, அடுத்துச் செய்யவேண்டியதைப் பற்றி முடிவுசெய்கின்றார்கள். எடுத்ததற்கெல்லாம் பயந்து சிதறியோடி அல்லோல கல்லோலப்பட, அவர்கள் இப்போது ஆயத்தமாக இல்லை. நீண்டகால யுத்த நிலைமைகளின் பட்டறிவால், நின்று நிதானித்து நிலைமைக்கேற்ப

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


முடிவெடுக்கும் அளவுக்கு மக்கள் பக்குவப்பட்டுவிட்டார்கள்.

“இந்தச் சண்டையும் போதும், இதோட மனிசர் படுகிற கஸ்டமும் போதும்” என்கிற முணுமுணுப்பெல்லாம் இப்போது கேட்பது குறைவு. அது ஒரு காலம்; இந்தப் போர் தந்த துன்பங்களும், வேதனைகளும், அழிவுகளும் மக்களுக்குள் ஒரு சலிப்புத்தன்மையை இயல்பாகவே ஏற்படுத்திவிட்டிருந்தது உண்மைதான். ஆனால் இப்போது அந்தநிலை மாறிவிட்டது. போரைக் கண்டஞ்சி போக்கிடம் தெரியாது ஓடுகிற காலம் மலையேறிக்கொண்டிருக்கின்றது. குண்டு விழவிழக் குடியிருக்கும் திண்மையை அவர்கள் பெற்றுவிட்டார்கள். இப்போது அவர்களுக்குத் தேவையானது நிரந்தரமான நிம்மதி. தட்டிக்கேட்க யாருமின்றி நீட்டிப்படுக்க ஒரு தாயகம். எங்கள் பாட்டை நாங்களே பார்த்துக்கொண்டு, அரசாண்டு வாழ ஒரு சுதந்திரம். இவற்றைப் பெற வேறு வழியில்லை- போரைத்தவிர. இப்போது அவர்களுக்கு இதில் எந்தக் குழப்பமும் இல்லை. இந்தப் போரோடு மக்கள் இரண்டறக் கலந்துவிட்டார்கள்.

எமது மக்களின் சிந்தனைகள் இப்போது வித்தியாசப்பட்டவையாக இருக்கின்றன. அதாவது அவர்கள் இன்று போராட்டத்தை முன்னெடுப்பது பற்றியே சிந்திக்கின்றார்கள். போரின் போக்கு என்னவிதமாக அமையப்போகிறது? யுத்த அரங்கில் அடுத்தகட்ட செயற்பாடுகள் என்ன வகையானவையாக நடக்கப்போகின்றன? என்பவற்றைப் பற்றி ஆராய்கின்றார்கள்; எதிர்வு கூறுகின்றார்கள். அரசியல் இராணுவ ரீதிகளில் எதிரியின் நகர்வுகள் எப்படி அமையப்போகின்றன? அதற்கு தமிழர் தரப்பிலான பதில் நடவடிக்கைகள் எப்படியானவையாக இருக்கவேண்டும் என்பவற்றைப்பற்றி அக்கறையோடு பேசுகின்றார்கள். ஊகங்களைத் தெரிவிக்கின்றார்கள். அவர்களுடைய கணிப்பீடுகளின் சரி, பிழைகளுக்கப்பால் இந்த போரின் இன்றியமையாமையினை அவர்கள் விளங்கிக்கொண்டுள்ளார்கள் என்பது முக்கியமானது.

யாழ்ப்பாணத்துக்குப் பக்கத்தில் உள்ள ஊர் கொக்குவில். அங்கு ஒரு பிறந்தநாள் கொண்டாட்டம். சுற்றத்தார் சூழந்து வாழ்த்த புத்தம் புதுக் கத்தியால்... சின்னக் குழந்தை வெட்டி எடுத்து உண்டு மகிழந்த ‘கேக்’ என்ன வடிவத்தில் இருந்திருக்கும்...? வண்ணத்துப்பூச்சி...? ரோஜாப்பூ...? வயலின்...? அல்ல; இவை எவையுமே அல்ல. பூநகரியிலிருந்து புலிகள் மீட்டுவந்த ‘யுத்தராங்’காக ஐசிங்கேக் அவதரித்து நின்றது.

இப்போதெல்லாம் எங்கள் மக்கள் இராணுவ ரீதியாகச் சிந்திக்க தொடங்கிவிட்டார்கள். இன்றைய உலகின் போக்கு என்ன வழிமுறையில் போகின்றது என்பதை அவர்கள் புரிந்துகொண்டுள்ளார்கள். எனவே எமது மக்கள் சொந்தப் பலத்தைப் பற்றி நினைக்க ஆரம்பித்திருக்கின்றார்கள். பலமின்றிப் போனால் நாங்கள் நிலமின்றிச் சாவோம் என்பதை அவர்கள் உணர்ந்துவிட்டார்கள். எனவே ‘பலவான்தான் வாழ்வான்’ என்பது அவர்களது தாரக மந்திரமாகிவிட்டது. அடிக்கு அடி கொடுக்க அவர்கள் துணிந்துவிட்டார்கள். ஏற்கனவே எங்கள் மக்கள் சாதாரணமானவர்கள் அல்ல. ‘அடியைப் போல் அண்ணன் தம்பி உதவான்’ என்றும், ‘அடிக்கு மேலே அடி போட்டால் அம்மியும் நகரும்’ என்றும் தத்துவார்த்தமான நல்ல முதுமொழிகள் அவர்களுடைய வழக்கில் உள்ளன. இப்போது ‘முறையான நல்ல அடியள் கொடுத்தால்தான் சிங்களவன் திருந்துவான்’ என்று அவர்கள் பேசிக்கொள்கின்றார்கள். இதைச் செய்யவேண்டுமானால் ஆளணிகள், ஆயுதங்களோடு சொந்தப் பலம் தேவை. எனவே எமது மக்கள் இப்போது இராணுவ ரீதியாகச் சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள்.

எமது மக்கள் அடக்குமுறைகளாலும், ஆக்கிரமிப்புக்களாலும் புடம்போடப்பட்டவர்கள். இப்போ ஆன்ம உறுதிபெற்று எழுந்துவிட்டார்கள். இனி யாரும் அவர்களை அடிபணிய வைக்க முடியாது. எமது மக்கள் இன்று கொண்டுள்ள இந்தத் துணிவுறுதி எங்கள் தேசத்திற்கு கிடைத்த ஒரு பெரிய வெற்றி; விடுதலைப் போராட்டம் கண்ட ஒரு பரிணாம வளர்ச்சி. தேசப் பற்றுக்கு, எமது மக்களுக்கு நிகராக எவருமே இல்லையென நாங்கள் பெருமிதத்தோடு கூறமுடியும்.

போருக்குள் வாழ்ந்து, போருக்கு ஈடுகொடுத்து, போரினால் முன்னேறி, போருக்குப் பக்குவப்பட்டு மனவுறுதியைப் பெற்றுவிட்ட எமது மக்கள், விடுதலையின் சிகரத்தை அடையும் வரை போரை முன்னெடுத்துச் செல்வது பற்றியே இப்போது சிந்திக்கின்றார்கள். இனி அவர்கள் தளரவே மாட்டார்கள்.

நன்றி: விடுதலைப் புலிகள்
சித்திரை 1994

---

**எமது மக்களின் போர்க்கால வாழ்பனுபவங்களை கலை, இலக்கிய வடிவங்களாகச் சித்தரிக்க வேண்டும். இந்தவகையில்தான் கலை, இலக்கியங்கள் காலத்தின் பதிவை செய்துகொள்ளவேண்டும்.**

**கலைஞர்கள் வாழ்க்கையை ஆழமாகப் பார்க்கிறார்கள். அவர்களது பார்வை மிகவும் உன்னிப்பானது, கூர்மையானது. மக்களது வாழ்வையும், போராளிகளது உணர்வுகளையும் துல்லியமாகச் சித்தரிக்க கலைஞர்களால் முடியும். அத்தகைய படைப்பு இலக்கியங்கள் வாயிலாக விடுதலை உணர்வையும், தேசப்பற்றையும் கலைஞர்கள் தட்டி எழுப்ப வேண்டும்.**

**எமது மரபுவழிவந்த கலை வடிவங்கள் காலஓட்டத்தின் தேவைக்கு ஏற்ப புதுப்பிக்கப்பட வேண்டும். புதுமை சேர்க்கப்பட வேண்டும். பழமையில் புதுமை கலந்து இன்றைய வாழ்வு நிலையைப் பிரதிபலிப்பதாக கலை ஆக்கங்கள் உருவாக்கப்படவேண்டும்.**

***தமிழீழத் தேசியத் தலைவர்***
***திரு. வே. பிரபாகரன்***

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# டென்மார்க்கில் தமிழரைப்பற்றி அன்றும் இன்றும்

## "தரங்கம்பாடியும் தமிழீழமும்"


தரங்கம்பாடியிலும் அதற்கு மேல் சுற்றுப்புறங்களிலும் வசிப்பவர்கள், திராவிட இனத்தைச் சேர்ந்த குள்ளமான இருண்ட நிறமுடைய 'தமிழர்கள்' என அழைக்கப்படுகின்றார்கள். டனிஷ்காரர்கள் / டன்ஸ்க்கர்கள் தமிழர்களை "இந்தியர்கள்" என்றும் "கறுப்பர்கள்" என்றும் தமக்குள் குறிப்பிட்டுக் கொண்டனர். இவர்கள் குள்ளமானவர்கள், நீண்ட மண்டையும், இருண்ட நிறக் கண்களும் அகன்ற மூக்கும் உடையவர்கள்.

தமிழர்கள் சுறுசுறுப்பில்லாத, கவனமில்லாத, ஆமை வேகமானவர்கள். இவர்கள் நல்லதுக்கும் இப்படித்தான், கெட்டதுக்கும் இப்படித்தான். இவர்களின் குழந்தைகள் ஓடிவிளையாடுவதில்லை; எப்பொழுது பார்த்தாலும் "சப்பாணி" கொட்டி ஆடாமல் அசையாமல் இருப்பார்கள். எதையாவது கற்பதற்கும் அவர்களுக்கு விருப்பமில்லை. பழகுவதற்கு அன்பானவர்கள், நன்றாகப் பேசுவார்கள், ஆனால் பொய்யர்கள். எதிர்காலத்தைப் பற்றி அவர்கள் கவலைப்படுவதேயில்லை, கையில் கிடப்பதை வைத்துச் சமாளிப்பார்கள். பணம் படைத்தவர்கள் பல மனைவிகளை, பெண்களை வைத்திருந்தனர். பணம் இல்லாதவர்கள் கோயிலில் இருக்கும் தேவஅடியாளுடன் தொடர்பு வைத்திருப்பார்கள்.

தமிழர்கள் கைப்பணியில் தலைசிறந்தவர்கள். வழக்கமான நாட்டுக் கருவிகளை வைத்தே தலைசிறந்த வேலைகளைச் செய்து முடிப்பார்கள். போர்ப்படைக்கு ஆள் திரட்டினால் பெரும் படையையே நிறுவலாம். ஆனால் உள்நாட்டவர்கள் பெரிதாக போர்ப் படையில் ஈடுபடுத்தப்படவில்லை. எந்தவித ஒழுங்கு கட்டுபாடுமின்றி வீரர்கள் கும்பலாக, மாடுகள் போவது போல போவார்கள். குதிரைப்படை இருந்தது, ஆனால் சமரிற்கு உதவாது. குதிரைப்படைக் காரரின் வேலை தமக்கும் குதிரைக்கும் சேதம் வராமல் பாதுகாத்துக் கொள்வது மட்டுமே.

இப்படி 1616 தொடக்கம் 1732 வரையுள்ள காலகட்டத்தில் தரங்கம் பாடியில் ஆட்சிசெலுத்திய டனிஸ் காரர்கள் எழுதிய தமிழர்களைப் பற்றிய குறிப்பை, குனார் ஒஸ்ஸன் என்பவர் 1967ல் வெளியிட்ட "எமது பழம் வெப்பவலயக் கொலனிகள்" என்ற நூற்கோவையயுள் அடங்கிய "டனிஸ் கிழக்கிந்தியா 5" என்ற நூலில் எழுதியுள்ளார்.

ஆனால் இன்று உலகிலேயே தன்னிகரற்ற, கட்டுமானமுள்ள, விடுதலைக்குணமுள்ள, தனித்துவமான இன்னும் சொல்லப்போனால் எவ்வளவோ நல்லொழுக்கங்களையுடைய தமிழ்ப்புலிகள் என்று பொதுமக்களால் பேசப்படும் அளவிற்கு தமிழனின் தரத்தை தரங்கம்பாடியிலிருந்து தமிழீழத்திற்குத் திருப்பியுள்ளான் தமிழ்ப்புலி வீரன். பிரபாகரன் ஒரு சிறந்த தலைவர்; விடாக்கண்டர்; குறிக்கோளர் என்றெல்லாம் டென்மார்க்கில் எத்தனையோ வழக்கறிஞர்கள் சொல்லக்கேட்டிருக்கிறேன்.




கொடியோர் செயல் அற கொலைவாள் எடுத்த நல்ல குணமேவிய தமிழர்களைப் பற்றி இப்பொழுது டென்மார்க்கில் எழுதும் விபரங்கள் இவை.

அசையாத நம்பிக்கையும், தளராத உறுதியும், தனது மக்களிற்காகவும், தாய்நாடான தமிழீழத்திற்காகவும் தன்னையும் தன் உயிரையும் வழங்கக் காத்திருக்கும் பெருந்தன்மையும், தம்மையே உயிராயுதமாகப் பாவித்து பகைவரை அழிக்கும் வல்லமையும் தியாக உணர்வும்தான் இவர்களைச் சிறந்தவர்கள் என சுட்டிக் காட்டுகின்றது.

வெற்றிவிரும்பி ஓர் மாவிறை
டென்மார்க்.

குறிப்பு: தரங்கம் - அலை
பாடி - பாடுமிடம்




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# எம் இதயங்களின் ஆழத்தில் என்றும் வாழ்ந்து வரும் இவர்களின் நினைவுகள்

வாசன் அவனை நினைத்தவுடன் எம் நினைவுகளிலும், கண்களிலும் நிழலாடுவது ஓர் புன்சிரிப்பு. ஆயிரக்கணக்கானவர்களின் இதயங்களைக் கொள்ளை கொண்ட ஆனந்தச் சிரிப்பு. மரணம் அவனைத் தழுவிய போதும் கூட அதே சிரிப்பு அந்த மாவீரனின் முகத்தில் தவழ்ந்து கொண்டிருந்தது. இயக்கத் தோழர்கள் வாசனை செல்லமாக 'பூதம்' என்றும் 'முரடா' என்றும் அழைப்பார்கள். வாசனின் வீரமும், அன்புமே அவனுக்கு இப்பெயர்களைத் தேடிக்கொடுத்தன, தாக்குதல்களில் முன்னணியில் நின்று போரிடும் அழகு இன்னும் எம் இதயங்களை விட்டு அகலவில்லை; என்றும் சங்கமித்துவிட்டான் அரசியல் பிரிவில் வேலை செய்துகொண்டிருக்கும் போதே பல தாக்குதல்களை முன்னின்று நடாத்தியவன். விடுதலைப் புலிகளின் வரலாறு வாழும் வரை வாசனின், நினைவுகளும் புகழும் வாழ்ந்து கொண்டே இருக்கும். வாசனின் வீரத்தை எடுத்துக் காட்டுவதற்கு நாம் சரித்திர நாயகனைத் தேட வேண்டியிருக்கிறது. வாசன் முன் நின்று நடாத்திய முதல் தாக்குதலில் இனவெறி பிடித்த "ஆரியப்பெருமா" பலியானான். ஆரியப்பெருமாவுக்காக அவன் காத்திருந்த பொழுதுகள் ஏராளம். தேடித்திரிந்த இடங்கள் கணக்கில் அடங்காதவை. மீண்டும், மீண்டும், சலிப்படையாத, மனந் தளராத முயற்சியால் கட்டுவனில் வைத்து வெடிகுண்டுத்தாக்குதலுக்கு ஆரியப்பெருமாவை பலியாக்கினான். வாசனின் விடாமுயற்சி அவன் எமக்கு விட்டுச்சென்ற படிக்கற்கள். பலாலி விமான நிலையத்தில், விமானப்படை விமானம் மீதான தாக்குதலும் வாசனின் விடாமுயற்சியையும் தன்னம்பிக்கையையும், துணிவையும் எடுத்துக்காட்டுவன. யாழ். பொலிஸ் நிலையத் தாக்குதலுக்கு வாசன் தன் விடாமுயற்சியாலும் அயராத உழைப்பினாலும் வித்திட்டவன்.

யாழ். பொலிஸ் நிலையத் தாக்குதலே வாசன் தாக்குதல் பிரிவு லெப்டினனாக பதவியேற்று நடாத்திய முதல் தாக்குதல். L.M.G. யை சுமந்துகொண்டு அவன் துரையப்பா விளையாட்டரங்கில் நிலைகொண்டிருந்த அதிரடிப்படையினர் மீது மூர்க்கத்தனமான தாக்குதலை நடாத்தி அவர்களை கிலி கொண்டு ஓட ஓட விரட்டிய மாவீரன். கோட்டையில் இருந்து பலத்த பதில் தாக்குதல் நடந்துகொண்டிருக்கும் போதும் தனது தோழர்களோடு உட்புகுந்து எதிரியின் குண்டுகள் தன்னை நோக்கி சீறிக்கொண்டிருக்கும் போதே பெருந்தொகையான ஆயுதங்களைக் கைப்பற்றி எமக்கு மாபெரும் வெற்றியைத் தேடிக் கொடுத்த உண்மை வீரன். இன்று எம் மத்தியில் இல்லை. வாசனின் சிறந்த நிலை எடுத்தல், வேகமாக பாய்ந்து முன்னேறுதல், கோரத் தாக்குதல் இவை எம் புதிய தோழர்களுக்கு புகட்டப்படும் பாடமாகிறது.

யாழ். பொலிஸ் நிலையத் தாக்குதலின் பின் மறுநாள் தனது களைப்பையும், சிரமத்தையும் பொருட்படுத்தாமல் மக்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கவேண்டும் என்பதற்காக அவன் எடுத்துக் கொண்ட முயற்சிகள் மக்கள் மீது அவன் கொண்ட அன்பை மதிப்பை பறைசாற்றுவன. வாசன் மறைந்த அன்று மக்கள் அடைந்த வேதனையும், ஓயாத புலம்பல்களும், அம் மக்கள் சமுத்திரம் வாசன் மீதும் எமதியக்க கோட்பாட்டின் மீதும் வைத்திருக்கும் தெட்டத்தெளிவான நம்பிக்கையையும் வெளிப் படுத்துவது மட்டுமன்றி எமது இயக்கத்தின் வீரம்செறிந்த விடுதலைப் போராட்டம் மக்கள் போராட்டமாக பரிணமித்துள்ளதென்பதை உறுதிப்படுத்துவதுமாயிருந்தது.

அகலப்போவதுமில்லை. அவனின் செயற்பாடுகள் எமக்கு ஓர் புதிய அத்தியாயமாக படிப்பினையைத் தந்து கொண்டிருக்கும். தாக்குதல்களில் மட்டும் அவன் திறமையைக் காட்டவில்லை. வருங்கால தமிழீழத்தின் நலன்கருதி எமது இயக்கத்தால் முன்னெடுத்துச் செய்யப்படும், பொருளாதாரத்துறை, கைத்தொழில் அபிவிருத்திக்குழு, போன்றவற்றில் அவனின் கடுமையான உழைப்பு, அவனுடைய செயற்திட்டங்கள் உண்மை வீரனுக்கு ஓர் எடுத்துக் காட்டு. வாசன் குருநகர்ப் பகுதியில் அரசியல் வேலை செய்வதற்காக நியமிக்கப்பட்டவன். தனது திறமையால், நல்ல பண்பால், எமது இயக்கத்தின் விடுதலைக் கோட்பாட்டை மக்கள் மத்தியில் வழி நடத்தும் செயற்பாட்டினால் மக்களைக் கவர்ந்தவன். குருநகர்ப் பகுதி மக்களோடு ஒன்றாகி, அவர்களோடு பின்னிப்பிணைந்து, உறவாடிய வாசன் இன்று அம்மக்களோடு

நாவற்குழி முகாமில் கடமையாற்றிய கப்டன் 'ரத்நாயக்காவின்' அட்டூழியங்களும் அடாவடித்தனங்களும் கட்டுக்கடங்காமல் போய்க்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

கொண்டிருந்த வேளை, அவனுக்காக அரியாலையில் வாசன் வெடிகுண்டுத்தாக்குதலை மேற்கொண்டான். அத்தாக்குதலில் இராணுவ கவசவாகனம் சிதைக்கப்பட்டது. ஆனால் ரத்நாயக்கா பலத்த காயங்களுடன் தப்பி கொழும்பு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டான். அதன் பின்னர் குருநகர் முகாமிலிருந்து உதவிக்கு வந்த இராணுவத்தினர் பொதுமக்கள் மீது தாக்குதலை நடாத்த முனைந்த வாசன் 'ரொக்கட் லோஞ்சர்' சகிதம் தன் தோழர்களோடு சென்று 8 மணி நேரமாக தாக்குதலை நடாத்தி மீண்டும் ரொக்கட் தாக்குதல் மூலம் கவசவாகனம் ஒன்றை சின்னாபின்னப்படுத்தி இராணுவத்தினரை கிலிகொள்ளச் செய்தான்.

ஒரு மதிய நேரம் குருநகர்ப் பகுதியிலுள்ள பீச் ரோட்டுக்கு அருகில் உள்ள மாடிவீடும், அதனைச் சார்ந்த பகுதிகளும் முற்றுகையிடப்படுகிறது. ஏராளமான கவசவாகனங்கள் சகிதம், முற்றுகையிட்ட இராணுவத்தினர், கீழ் வீட்டில் இருந்தவர்களிடம் வாசனை வினாவினர். சிலர் மாடிவீட்டை நோக்கி படிகளில் ஏறிக்கொண்டிருக்கின்றனர். திடீரென்று மாடிவீட்டில் தோன்றிய வாசனின் கையில் இருந்த .38 Special றிவோல்வர் முழங்குகின்றது. முதலில் மேலே வந்துகொண்டிருந்தவன் குப்புறச் சரிய, சிலர் கீழே இறங்கி ஓட முயல, மீண்டும், மீண்டும் வாசனின் கைத்துப்பாகி முழங்க, சிலர் குண்டடிபட்டு காயங்களுடன் கீழே பாய்கின்றனர். எல்லா இராணுவத்தினரதும் துப்பாக்கி ரவைகள் மாடிவீட்டை நோக்கிப் பாய்கின்றன.

வாசன் மாடிவீட்டில் இருந்ததை அறிந்த யாரோ காட்டிக் கொடுக்கும் 'திருவாளர்' இராணுவத்திற்கு தெரியப்படுத்தியதாலேயே இம்முற்றுகையிடப்பட்டது.

முற்றுகையிடப்படும் போது மேல்வீட்டில் இருந்த வாசன் வெளியேறுவதற்கு வேறு வழி இருக்கவில்லை. மேல் ஏறிய எதிரிகளைச் சுட்டபின் "அஸ்பெஸ்ரோஸ்" கூரையை உடைத்துக் கொண்டு மேலே செல்ல கீழிருந்த எதிரிகளின் துப்பாக்கிகள் வாசனை நோக்கி சீறத்தொடங்கின. மேல் இருந்து கீழே குதிக்கிறான். ரவைகள் அவனைத் துரத்த நிலத்தில் உருண்டு, உருண்டு அத்தடைகளைத் தாண்டி ஓடிய வாசன் மாட்டின் ரோட்டைத் தாண்டும் போது ஒரு இராணுவ வீரனின் துப்பாக்கி சடசடக்கிறது. ஒரே ஒரு ரவை வாசனின் வயிற்றை பக்கவாட்டாக துளைத்துச் செல்கிறது.

சற்றுத் தடுமாறிய வாசன் பின் தன்னைச் சுதாகரித்துக்கொண்டு ஓடுகிறான். களைப்பு மிகுதியால் வாசன் ஓரிடத்தில் விழுந்து விட்டான். காயம் பலமாய் பட்டிருப்பதால் பெருமளவு இரத்தம் வெளியேறிக்கொண்டிருப்பதால் வாசன் சுயநினைவை இழக்கத்தொடங்கிய போது, அவனது தோழர்களும், நண்பர்களும் அவனை அணுகிவிட்டனர். தோழர்களைக் கண்ட வாசன் அந்நிலையிலும் தன் மாறாத புன்சிரிப்பால் அவர்களை வரவேற்கிறான்.

அபாய நிலையில் இருக்கும் வாசனை எடுத்துச் செல்ல அண்மையில் இருந்த வாகனம் ஒன்றைக் கேட்டபோது அதன் உரிமையாளர் தகாத வார்த்தைகளால் ஏசி வாகனத்தைத் தரமறுக்கிறார். தோழர்கள் மீண்டும் மீண்டும் கெஞ்சியும் அந்த இரக்கமற்ற நல்ல மனிதர் தன் வாகனத்தை கொடுக்க மறுக்கவே தோழர்கள் கைகளிலேயே தூக்கிக்கொண்டு ஓடுகின்றனர். வாகனம் உடனடியாகக் கிடைக்காததால், பெருமளவில் இரத்தம் வெளியேறிவிட்டதால் வாசனின் உடல் தொழிற்பாட்டை நிறுத்துகின்றது.

தோழர்களின் கைகளிலேயே வாசனின் உயிர் பிரிகிறது. அப்போதும் அதே மாறாத புன்னகை வாசனின் முகத்தில் தவழ்கின்றது. அவனுடைய வீரவரலாறு ஒரு காவியம்.

வாசனை எண்ணும் பொழுதெல்லாம் எம் கண்களிலே கண்ணீர் ஊற்றெடுத்து ஓடத்தான் செய்கின்றது. ஆனால் நாம் அழவில்லை.

நன்றி: களத்தில் (வைகாசி 1985)

# தன்னிறைவைத் தாண்டிய உப்பு உற்பத்தி

**இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட தமிழீழத்தின் உப்பு உற்பத்தித் தொழில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளால் புது வளர்ச்சி பெற்றதோடு சுயதேவையின் தன்னிறைவைத் தாண்டி அடுத்த ஆண்டிற்கான தேவையின் ஒரு பகுதியை பூர்த்தி செய்யக்கூடிய கையிருப்பையும் கொண்டுள்ளது.**

**போரின் ஆரம்பகட்டத்தில் கிலோ 30 ரூபா வரையில் விலைபோன உப்பு உள்ளூர் உற்பத்தியினால் தற்போது கிலோ 10 ரூபாவாக குறைந்துள்ளது. சில விற்பனை நிலையங்களில் கிலோ 9 ரூபாவுக்கும் விற்கப்படுகிறது. குறைந்த விலையில் சில்லறை விற்பனை செய்யக்கூடியதாக உப்பின் மொத்தவிலை விநியோகம் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள போதிலும் பல்வேறு இடங்களில் பலவிதமான விலைகளில் உப்பு விற்பனை செய்யப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது.**

**உள்ளூரில் உற்பத்தியான உப்பு கையிருப்பில் தாராளமாக இருப்பதால் தென்னிலங்கையில் இருந்து உப்பைக் கொண்டுவருவது தடைசெய்யப்பட்டுள்ளது. கொள்ளை இலாபம் சம்பாதிப்பவர்கள் பல்வேறு பொய்க் காரணங்கள் கூறி அதிகவிலைக்கு உப்பு விற்பனை செய்கிறார்கள். உப்பை அதிகவிலைக்கு விற்பதற்கு எந்தவித நியாயமும் இல்லை.**

**பாவனையாளர்களான பொதுமக்கள் இவ்விடயத்தில் விழிப்பாக இருப்பதன் மூலம் கொள்ளை இலாபம் சம்பாதிப்பவர்கள் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதுடன் நன்மையும் பெறலாம் என தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் அறிவித்துள்ளனர்.**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




# கங்கைகள் பாயாத எனது பூமி

முழு நேரமும் கொட்டக் கொட்ட விழித்தபடி
இரவின் இரகசியங்களைக் கூட
கள்ளத்தனமாக ரசித்த எனது நகரம்
இன்று பல்லுப் போன ஒரு கிழவியென
முனியாகி
தினம் கொலையும் குருதியும் கண்டு
மூர்ச்சை போட்டு விழுந்தது.

சுற்றிலும் கடல்
தினம் பெருகும் குருதிப் புனல்களால்
மேலும் உவர்ப்பாகிப் போகின்ற கடல்
ஒரு வேசி போல
எமது செல்வங்களை யெல்லாம்
அடி மடிக்குள் ஒளித்துவிட்டு
. போர்க் கப்பல்களை.
'ஒழித்துவிடுவோம்'! என வெஞ்சினம் உரைத்து
தீப் பிழம்புகளைக் கக்கும் படகுகளை.
முதுகில் சுமந்து கொண்டு
வெட்கமற்று ஒய்யாரம் காட்டும் ஒரு மினிக்கி!

கங்கைகள் எனது பூமிக்கு சிற்றன்னைகள்!
ஓர வஞ்சனை!
வான் நோக்கி வாய் பிழந்தபடி
ஒரு தலைக் காதல் கொண்ட எனது பூமி மேல்
எதற்காக மோகம் கொண்டனர்....?
பருவம் எய்தாமல் ஏங்கும் ஒரு பெண்ணைப்
போல,
எனது பூமியின் தாபங்கள் -
கங்கைகள் தழுவாத எனது பூமி!

எனது தேசத்தின் அழகிய பட்சிகள்
வேட்டொலிகளால் வெகுண்டு
ஏதோ ஒரு திசையில் பறந்து மறைந்தன
வானம் வல்லூறு களாலும்
கழுகுகளாலும் நிறைந்தது.

சிவப்புக் கழுகுகள்!
இளங்குருத்துக்களின் தலைகளைக் கொய்ய
குண்டுகளை விசிறி விதைத்து விட்டுப்
போகின்ற
சிவப்புக் கழுகுகள்
பனை மரங்களைக் கூட .
மொட்டையடித்துப் பழிப்புக் காட்டி
ஏளனம் செய்து நகைத்தபடி
'விர்' எனப் பறக்கும்
சிவப்புக் கழுகுகள்!
நாறும் பிணங்களை பிடுங்க
வல்லூறுகள்!

கரும் மரண விளிம்புகளின் மேல் மனிதர்கள்
எனது மனிதர்கள்!
'கிரீச்' சிட்டு அலறும் பெண்களுடன்
பயப் பிராந்தியுடன் விழிக்கும் கிழவர்கள்.
கொழுந்து விட்டுச் சடசடத்து எரியும்
நரக நெருப்பின் மீது
பிய்த்து உதறப் படும்
மலர் முகைகளைப் போன்று குழந்தைகள்!
ஐயோ!
தினம் அக்கினி பூக்கும் எனது பூமியில்
இனியும் பிறக்கப் போகும் குழந்தைகள்...?

நெஞ்சுரம் கொண்ட மக்களை விட,
மரித்த மறுகணம் மக்கள் மனங்களில்
உயிர்க்க இருக்கிற
சில புதல்வர்களை விட,
எனது பூமியில் இன்று
என்னதான் உண்டு?

பூக்கள் மலர்வது எப்போ?
ஓ! புகைந்து கொண்டிருக்கும்
எனது பூமியில்
பூக்கள் மலர்வது எப்போ?
மீண்டும் பூக்கள் மலர்வது எப்போ?

ரஞ்சகுமார்
நன்றி: தாயகம்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# அன்றும் இன்றும்

சுவர்ச் சித்திரங்கள் புதிதல்ல.

'சுவர் இருந்தால்தான் சித்திரம்' என்பது பழமொழி.

ஆனால் சித்திரங்கள் சினிமா நோட்டிஸ் ஆகி சுவரில் ஒட்டப்பட்ட காலத்தில் அதனுடன் இன்னொரு கலையும் வளர்ந்தது.

அது விரும்பாத சினிமா நடிகரின் படத்தின் மேல் சேறு அல்லது சாணகம் அடிப்பது.

இன்று?


சிறிய படம்.. வீட்டு வெளிப் படலை அருகில் சிறு பந்தல் அமைத்து அதனுள் படம் வைக்கப்படுகிறது. தீபம் ஏற்றப்படுகிறது. பூக்கள் சொரியப்படுகின்றன.

செய்பவர் யார்? இளம் மாணவர்; சின்னஞ்சிறு பிள்ளைகள்.

வைக்கப்படும் படம் தியாகி திலீபன், அன்னை பூபதி, மற்றும் மாவீரரின் படமாயிருக்கும். இவ்விதம் நாட்டுப் பற்று உயர்ந்து ஓங்கி வாழ்கிறது.

தாத்தா இதை மனங் குளிர்ந்து பார்க்கிறார். வியந்து மகிழ்கிறார்.

பங்குனி மாத இதழில் 'யாழ்தேவி 93' எனத் தலைப்பிட்டு ஓவியர் மகா அவர்களால் வரையப்பட்டிருந்த ஓவியத்திற்கான கவிதை



## 'யாழ்தேவி 93'

முன்னவர்கள் வழிவந்த
விசயதுங்கே
ஏவிவிட்ட யாழ்தேவி
வீறுடன் வேகமாய்
சீறியெழுந்தது
தமிழர் பகுதிகளில்..!
மும்முனையிலும்
குண்டுமழை
குடிசைகள் தீக்கிரை
கட்டிடங்கள், மருத்துவமனை
நொறுங்கின
சிதைந்து போன
எந்திரப் படகுகளின்
அடையாளங்கள்
மிதந்தன கடலில்
நிலமெங்கும் குருதிக்
கறைபடிந்து போய்
பார்க்கும் இடமெல்லாம்
பிணங்கள்.... பிணங்கள்....!

வெருண்டெழுந்த புலிகளின்
எதிர்ப்பாய்ச்சலை
தாங்கமுடியாமல்
கொண்டுவந்த கருவிகளை
விட்டு விட்டு... தாம்
உயிர் வாழ்ந்தால்
போதுமென்றெண்ணி
பின்வாங்கி ஓடலானார்கள்
சிங்களப் படையினர்....!

அவமானத்தில்
வீழ்ந்திறந்தாள் யாழ்தேவி!

செந்தமிழினியன்
புதுச்சேரி, தமிழ்நாடு.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# சிறுகதையின் கதை

## ச. பாலசுந்தரம் பீ. ஏ.

சிறுகதை என்பது ஒரு தனிப்பட்ட இலக்கிய வகையாகும். அது உலகிலே தோன்றி 140 ஆண்டுகளுக்கு மேலாகின்றது.

அமெரிக்கரான உலகப்புகழ் பூத்த இலக்கிய ஆசிரியர் 'எட்கார் அலன் போ' என்பவரால் தொடக்கிவைக்கப்பட்ட ஒரு தனிப்பட்ட இலக்கிய வடிவமே சிறுகதை எனலாம்.

இந்திய மொழி ஆசிரியர்களில் முதன் முதல் சிறுகதை ஆக்க முயற்சியில் ஈடுபட்டவர் கவி ரவீந்திரநாத் தாகூரே. தாகூரைப் பின்பற்றி தமிழ் மொழியில் வ.வே.சு. ஐயரும், சுப்பிரமணிய பாரதியாரும் சிறுகதை இலக்கியத்திற்கு உருவம் அமைத்தனர். தாகூர் எழுதிய கதையொன்றை முன்மாதிரியாகக் கொண்டே வ. வே. சு. ஐயர் "குளத்தங்கரை அரசமரம்" என்னும் சிறுகதையை எழுதினார். அவர் எழுதிய கதைகள் "மங்கையற்கரசியின் காதல் முதலிய கதைகள்" என்னும் பெயரில் நூல் வடிவில் வந்துள்ளன. "லைலா மஜ்னூன்", "எதிரொலிகள்", "அழேன் ழுக்கே" என்னும் கதைகளில் அவர் பிற நாட்டுக் கதாபாத்திரங்களை மிக அழகாகச் சித்தரித்துள்ளார்.

எந்த நாட்டு மக்களின் உணர்ச்சிகளையும், ஆசைகளையும் தமிழ் மொழியிலே திறம்படச் சித்தரிக்க முடியும் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாக மேற்குறிப்பிட்ட கதைகள் விளங்குகின்றன. அவர் சிருஷ்டித்த கதாபாத்திரங்கள் உயிருடன் நடமாடுவன.

உண்மைக் காதல், தியாகம், வீரம் முதலிய மாண்புடை மக்கட் பண்புகள் அவர் கதைகளில் சிறந்து விளங்குகின்றன. எனினும் அவர் எழுதிய கதைகளிலே சிறுகதைக்குரிய பூரண வடிவம் அமையவில்லை என ஆய்வாளர் கருதுவர்.

சிறு கதை என்னும் இலக்கிய வடிவத்தை தமிழ் மொழியில் முதலில் அறிமுகப்படுத்தியவர் என்ற வகையிலும், சிறுகதை எழுதுவதில் ஓரளவு வெற்றி பெற்றுள்ளார் என்பதனாலும் வ. வே. சு. ஐயரை தமிழ்ச் சிறுகதையின் தந்தை என்று சொல்கிறார்கள்.

தமிழ்ச் சிறுகதை இலக்கியத்தின் முன்னோடிகளான வ. வே. சு. ஐயர், சுப்பிரமணிய பாரதியார், மாதவையா போன்றோரின் கதைகள் படித்து இன்புறத்தக்கதாக இருந்த போதிலும் அவற்றைச் சிறந்த இலக்கியத் தரமுள்ள கதைகளாக இலக்கிய ஆய்வாளர் ஏற்பதில்லை. தமிழில் சிறந்த சிறுகதைகளை எழுதியவர்களில் சிலராக புதுமைப்பித்தன், கு. பா. ரா. மௌனி, தி. ஜானகிராமன், லா. ச. ராமாமிர்தம் முதலியவர்களைக் குறிப்பிடலாம்.

நன்றி:
'அறிவுக்களஞ்சியம்'


**கரும்புலிகள் நினைவு நாள் (ஆடி -5)**

**தமிழர் கலை பண்பாட்டுக் கழக - ஜேர்மன் கிளை**

**கரும்புலிகள் நினைவுநாளை முன்னிட்டு நடாத்தும்**

**கரும்புலிகள் நினைவுநாள் போட்டிகள்**

ஜேர்மன் வாழ் தமிழீழ மக்களுக்கு இப்போட்டிகளில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. நடாத்தப்படவிருக்கும் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் பங்குகொள்ள ஆர்வம் கொண்டுள்ள ஜேர்மன் வாழ் தமிழீழ மக்கள் 15-6-94க்கு முன் தமது விண்ணப்பங்களைப் பதிவுசெய்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். போட்டி விதிகள் மற்றும் மேலதிக விபரங்கட்கு தொடர்புகொள்ள வேண்டிய முகவரி

திரு. சிவநாதன்
STEIN STR-18, 37441-BAD SACHSA, GERMANY.
தொலைபேசி: 05523/8608


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# மட்டக்களப்பில் எஸ்.ரி.எவ். ஆதிக்கம்

## மனித உரிமைவாதிகள் கவலை

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டம் மீதான அரசின் கட்டுப்பாடு இராணுவத்திற்குப் பதிலாக எஸ்.ரி.எவ். எனப் படும் விசேட அதிரடிப் படையிடம் போய்ச்சேரத் தொடங்கியுள்ளது.

இதன்படி மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கொக்கட்டிச் சோலை, பழுகாமம், போரதிவு, அம்பிலாந்துறை ஆகிய இடங்களில் அமைந்திருந்த இராணுவ முகாம்கள் விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளன. ஏப்பிரல் 18ம் திகதி இந்த நான்கு முகாம்களில் இருந்தும் இராணுவம் வெளியேறியது. அதற்குப் பதிலாக இந்த நான்கு முகாம்களிலும் போய் நிலைகொண்ட எஸ்.ரி.எவ். இப்பகுதியில், மேலும் இரு முகாம்களை அமைத்துத் தனது ஆதிக்கத்தை விஸ்தரித்துள்ளது.

மட்டு, அம்பாறை மாவட்ட மக்களைப் பொறுத்தளவில் இராணுவம் என்ற சொல்லை விட எஸ்.ரி.எவ். என்ற சொல்லைக் கேட்டே அவர்கள் அதிகம் மிரளுவர். அந்த அளவுக்கு கடந்த காலத்தில் எஸ்.ரி.எவ். தனது பயங்கரவாத நடவடிக்கைகளை அந்த மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டிருந்தது.

பொலிஸ்துறையில் உள்ளதைப் போன்று பதவி நிலைகளையுடைய இந்தக் கொலைகார அமைப்பு 1985 தொடக்கம் 1987 ஆம் ஆண்டு பகுதிகளில் மட்டு, அம்பாறை மக்களுக்குச் செய்த கொடூரம், கேட்போரின் இரத்தத்தை உறைய வைக்கக்கூடியது. முன்னாள் சிறிலங்கா ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் மகன் ரவி ஜெயவர்த்தன தலைமையின் கீழ் இயங்கிய இந்த விசேட படை சித்திரவதைக்கும் படுகொலைகளுக்கும் பாலியல் வன்முறைகளுக்கும் பொருளாதார அழிப்புக்களுக்கும் நன்கு பெயர்போனது. மட்டக்களப்புப் பிராந்தியத்தில் நடைபெற்ற தமிழின அழிப்பில் எஸ்.ரி.எவ். இன் பங்கு மிகப் பெரியதாகும்.

பொலித்தீன்களை, றெஜிபோம்களை உருக்கி தோலில் ஊற்றுவது, ஆண்குறிக்குள் உலோகக் கம்பிகளைச் சொருகுதல், காளைமாடுகளுக்குச் செய்யப்படுவதைப் போல் விதைகளை நசித்துச் சேதமாக்குவது, விசாரணைகளின் போது அங்கங்களை வெட்டுவது, நெருப்பால் சுடுவது, நீரில் அமிழ்த்தி சித்திரவதை செய்வது என்பன எஸ்.ரி.எவ். செய்த, செய்துவரும் சில சித்திரவதை வடிவங்கள். இதே போல குடும்ப உறவினர்கள் முன்னிலையிலேயே ஒருவரைப் படுகொலை செய்வது, அல்லது பாலியல் வன்முறைக்கு உட்படுத்துவது, மற்றும் தலைகளைத் துண்டிப்பது, விளைநிலங்களை பருவம் பார்த்து அழிப்பது ஆகியன எஸ்.ரி.எவ். செய்யும் பயங்கரவாத வடிவங்களாகும். சுருக்கமாகச் சொன்னால் பயங்கரவாத அணுகுமுறைகள் மூலம் தமிழ் மக்களது போராட்ட உறுதியை உடைப்பது என்பது எஸ்.ரி.எவ். கடைப்பிடிக்கும் சித்தாந்தமாகும். ஜெயவர்த்தன காலத்தில் உருவாக்கப்பட்ட இந்த விசேடபடை பிரேமதாசா காலத்திலும் சக்தி வாய்ந்த ஒன்றாகவே இருந்தது. குறிப்பாக 88 தொடக்கம் 89ஆம் ஆண்டுகளில் தென்பகுதியில் நிகழ்ந்த ஜே.வி.பி. கிளர்ச்சியை ஒடுக்குவது என்ற போர்வையில் செய்யப்பட்ட சிங்கள இளைஞர்களது படுகொலையில் இந்த விசேட படை பெரும் பங்குகொண்டிருந்தது. அத்துடன் பிரேமதாசா அரசின் காலத்தில் அவரது அரசில் உள்ள பெரும் புள்ளிகளது பாதுகாப்புப் பொறுப்பும் எஸ்.ரி.எவ்.விடமே ஒப்படைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்விதமாக படுகொலைகளுக்கும் சித்திரவதைகளுக்கும் பெயர்பெற்றிருந்த எஸ்.ரி.எவ். மீண்டும் மட்டு, அம்பாறை மாவட்டங்களில் அதன் செயற்பாடுகளை அதிகரிக்கத் தொடங்கியுள்ளதானது அப்பகுதியில் வாழும் தமிழ் மக்களுக்கு பெரும் அச்சத்தை ஊட்டியுள்ளது.

மட்டு அம்பாறைப் பகுதிகளிலிருந்து இராணுவம் விலக்கிக்கொள்ளப்படும் அதேவேளை எஸ்.ரி.எவ். உடன் இணைந்து சிங்கள காவல் துறையும் காவல் நிலையங்களை அமைக்கத் தீர்மானித்துள்ளது. மிகவிரைவில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மேலதிகமாக மூன்று அல்லது நான்கு காவல் நிலையங்களை பொலிஸ்துறை அமைக்க இருக்கின்றது. இதற்குரிய ஆட்பலத்தைப் பெறும்முகமாக, தென்பகுதியிலிருந்து அதிக அளவு பொலிசார் கிழக்கு மாகாணத்துக்கு கொண்டு செல்லப்படுகின்றனர் என்று கொழும்புச் செய்திகள் கூறுகின்றன. அதே காரணத்திற்காக எஸ்.ரி.எவ. இனது ஆட்பலமும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அந்தச் செய்திகள் தெரிவித்துள்ளன.

மட்டு, அம்பாறை மாவட்டங்களினது அதிகாரம் எஸ்.ரி.எவ். இனது கைகளுக்குள் சென்றுகொண்டிருப்பதை சில மனித உரிமைவாதிகள் கவலையுடன் நோக்குகின்றனர். வருங்காலத்தில் அப்பகுதியில் மனித உரிமை மீறல்கள் பெருமளவுக்கு அதிகரிக்கலாம் என, அச்சம் தெரிவிக்கின்றனர். இலங்கைத்தீவின் மனித உரிமைகள் சரித்திரத்தில் எஸ்.ரி.எவ். என்பது வெறுப்புக்கும் கண்டனத்துக்கும் உரிய பெயராகவே விளங்கிவருகிறது.

நன்றி: 'விடுதலைப் புலிகள்'
சித்திரை 1994

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


**மதிப்பிற்குரிய ஆசிரியர் அவர்கட்கு,**

மறந்தது ஏனோ?

தங்களது பங்குனி, 1994 எரிமலையைப் பார்த்தேன். மாற்றம் காணவில்லை. மனம் வருந்துகின்றேன். மாதங்கள், கிழமைகளுக்கு தமிழ்ப் பெயரை சொல்லி வைத்த "எரிமலையே" உன்னில் மாற்றம் காண மறந்தது ஏனோ?

ஆசிரியரே தாங்கள் மறந்திருப்பின் விடுதலைப் புலிகளின் நாட்காட்டியை தயவுசெய்து பார்க்கவும். அடுத்த எரிமலை 'மேழம் - 94' என வெளிவரும் என்கின்ற ஆவலோடு காத்திருக்கின்றேன்.

நன்றி

இப்படிக்கு
பாரதி




உன்னை வாழ்த்த எனக்குத் தகுதியில்லை
இருந்தாலும் எனது வார்த்தைகளுக்கு
வலுவில்லை,
என் செய்வேன்! தமிழுக்காகப் பாடுபடும்
தங்கத் தமிழனைத் தனிப்பெரும் மாவீரனை
நினைக்கும் போது தமிழுணர்வு துடிக்கிறது
உன்னை வாழ்த்தி வணங்குகிறேன்!!
ஒவ்வொரு பிறந்தநாளிலும் ஒவ்வொருவருக்கும்
ஒரு வயது ஏறும்! ஆனால், என் தமிழ் சிங்கமே!
உனக்கு மட்டும் ஒவ்வொரு வயதாகக் குறையக் கூடாதா
தமிழனுக்காக உழைக்கும் நல்லவனுக்கு
நாடி தளர்ந்துவிட்டால் நாங்கள்
எல்லாம் எங்கே போவோம்!!
உன்னைப் பற்றி எழுதும்போது மட்டும்
எனது பேனா தூரிகை அவதாரம் எடுக்கிறது.
உன்னை நினைக்கும் போது மட்டும்- எனது இரத்தத்தில்
புதிய அணுக்கள் உற்பத்தியாகிறது- தமிழுக்காக
உழைக்கும் உனக்காக உழைக்க உயிர் துடிக்கிறது.
என் செய்வேன் உனக்கு துரோகம் செய்த இந்தியாவில்
வாழ்கிறேன் என்று வெட்கப்படுகிறேன்- ஆனால்
தமிழ் உணர்வோடு வாழ்கிறேன் என்று மகிழ்வு
கொள்கிறேன்- உன்னுடன் சேர்ந்து இந்த உயிர்
தமிழுக்காக போகவேண்டும்!!
விடியும் விடியும் வருந்தாதே!
காலம் பிறக்கும் கலங்காதே!
வாழ்க தமிழ்! வளர்க இயக்கம்!
வெல்க தமிழ் இனம்!!

மா. செந்தில்குமார், ம. விஜயகுமார்
ம. சுந்தரமூர்த்தி, கோ. துளசிராஜா
ம. காமேஸ்வரன், தே.கு. இராவணன்

**அன்பின் எரிமலை ஆசிரியர் அவர்கட்கு, எனது அன்பு கனிந்த வணக்கம்.**

மேலும் மாதாந்தம் வெளிவரும் எரிமலை தவறாமல் படித்து வரும் வாசகர்களில் நானும் ஒருவன். எரிமலை படித்த பின் ஏற்பட்ட உள்ளக் கருத்துக்களை இங்கே தருகிறேன்.

எரிமலை வெடிக்க வந்தது குழம்பு. 'எரிமலை' படிக்க வந்தது உணர்வு. எரிமலை வெடித்தது புவியின் நலிவால், 'எரிமலை' பிறந்தது தமிழ் உணர்வால். நித்தம் மாறிவரும் உன் எழிலால் புத்தம் புதிய உணர்வைப் பெற்றோம். வாழிய வாழியவே! எரிமலையே நீ தமிழர் வாழ்வில் இலக்கணமென்று!

சி. வி. ஆனந்தன்,
ஜேர்மனி.

**எரிமலை ஆசிரியருக்கு,**
**என் சிந்தனையில் உதித்த வரிகள்.**

தமிழீழத்தின் சிறுத்தைகளே!
தமிழனித்தின் புலிகளே!

உலகத்தின் சிந்தனைகளே!
வீரத்தின் விடியல்களே!

புலித்தலை பிரபாகரனே!
தாய்மையின் சிங்கமே!
தமிழனின் வரலாறுகளே!
ஈழத்தின் செங்கதிர்களே!

உணர்வுகளின் எரிமலைகளே!
இதயத்தின் துடிப்புகளே!
விடுதலைக் காளைகளே!
வீரத்தின் முத்தங்களே!

காலத்தின் வேகங்களே!
வெற்றியின் மழலைகளே!
சோர்ந்துவிடாப் பிறப்புகளே!
களைப்பில்லா ஈழமக்களே!

களத்தின் காவியங்களே!
காணப்போகும் காலங்களே!
ஈழத்தின் வெற்றிகளே!
தமிழனின் திருப்பங்களே!

ஆர். பி. ஏ.
மலேசியா

**எமது மதிப்பிற்குரிய எரிமலை ஆசிரியர் அவர்கட்கு வணக்கம்.**

தாங்கள் வெளியிடும் மாத இதழை வாசித்தேன். தமிழ் இனப்பற்று, தாய்மொழிப்பற்று, தாய்நாட்டுப்பற்று இவை அனைத்தும் கலந்த ஓர் தேவாமிர்தம். மேலும் திரு. தூயவன் எழுதிய ஒரு மருத்துவப் போராளியின் முதல் அனுபவம் என்ற கட்டுரை மனத்தை மிகவும் தொட்டது. தன் கண்கள் முன்னிலையிலேயே தங்கள் மக்கள் (போராளிகள்) படும் வேதனையை துயரம், மரணம் இவை அனைத்தையும் தாங்கி உணர்ச்சிக்கு இடங்கொடுக்காமல் காயமடைந்த மக்களுக்குப் பணிவிடை செய்யும் மருத்துவ சகோதர சகோதரிகளுக்கு எரிமலை இதழ்மூலம் நன்றி கூறி இப்பணியை நாம் வெற்றி காணும் வரை சோர்வடையாமல் தொடர்ந்து பணியாற்ற வேண்டுகிறேன்.

மீண்டும் நன்றி

என். பி. கடலூரரான் (தமிழ்நாடு)
பாரிஸ்.

**எரிமலை ஆசிரியர் அவர்கட்கு வணக்கம்.**

எண்ணற்ற கருக்கள், இல்லை கருங்கருத்துக்கொண்ட படிகளில் ஏறிக்கொண்டிருக்கும் இமயம்! அண்ணார்ந்து பார்க்கத் தெரிகின்றதே. அந்த எரிமலையை கண்களினால் கவர்ந்து களிப்புறுகின்றேன். தமிழ்மொழிச் சொற்களின் தன்மையை இவ்விதழின் மூலம் மற்ற மொழிகள் அறியக்கூடியதாக இவ்விதழுக்கு அமைக்கப்பட்ட பெயர் பொருத்தமானது. எரிமலை ஒவ்வொரு மாத இதழிலும் ஒரு படி மேலேறிக்கொண்டேயிருக்கின்றது.

எரிமலை! இவ்விதழில் வருகின்ற, நான் அறியாத புதிய விடயங்களைக் கற்கக் கூடியதாக இருப்பதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

பறை எங்கள் தேசியக் கலைவடிவம் என்பது எனக்குத் தெரிந்திருக்கவில்லை.

சித்திரை - 94 இதழில் சர்வேயின் "பறை-பறைமேளக்கூத்து-தேசியக்கலை வடிவங்கள்" கட்டுரையை வாசித்து முடித்த பின் என்னுள் எழுந்த நினைவுகள் எனது சிறுபருவ வயது காலத்திற்கே கொண்டுபோய்விட்டது. எங்கள் வீட்டுப் படலையில் ஏறிநின்று எங்கள் தெருவால் இறந்தவர்களை எடுத்துச் செல்லும் போது பறை அடித்துக்கொண்டு அவர்கள் போடும் ஆட்டத்தையும் அநுதாபத்தின் மத்தியிலும் பார்த்தேன். கோயில்களிலும் இப்பறையின் இசையை ஒலியை ரசித்தேன். அப்போது அது எங்கள் தேசியக் கலைவடிவம் என்பது எனக்குத் தெரிந்திருக்கவில்லை. எரிமலை மூலம் 'இதனை அறிந்தமைக்கு எரிமலை இதழுக்கும் இக்கட்டுரையை எழுதியவருக்கும் என் நன்றிகள்.

வாசகன், வசி,
நோர்வே.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



www.tamileelamarchive.com